பக்கங்கள் : பதினெட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 தை 19 ஞாயிற்றுக்கிழமை (02-02-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:68

# திருமலையில் புதிய கடற்படை முகாம்: எதிர்த்து மக்கள் நேற்று ஆர்ப்பாட்டம்

## கண்காணிப்புக் குழுவிடம் விடுதலைப் புலிகள் முறையீடு

திருகோணமலை,பெப்ரவரி2

**யுத்தநிறுத்த ஒப்பந்தம் நடைமுறையில் உள்ள வேளையில் திருகோணமலையில் கடற்படையினர் புதிய முகாம் ஒன்றை அமைத்து வருகின்றனர். திருகோணமலை நகருக்கு வடக்கே 12 கிலோமீற்றர் தொலைவில் உள்ள கடற்கரைக் கிராமமான கோபாலபுரத்திலேயே கடற்படையினர் நேற்று புதிய முகாம் அமைக்கும் பணியில் ஈடுபட்டனர். இது அங்குள்ள மக்களுக்கு பெரும் சீற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.**

**கடற்படையினரின் இந்த முயற்சியை பொதுமக்கள் ஒன்றுதிரண்டு எதிர்த்தனர்; ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இது புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறும் செயல் என்று விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திலக், யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறையிட்டார்.**

மக்கள் குடியிருப்புகள் உள்ள கோபாலபுரம் பகுதியில் கடற்படையினர் முகாம் ஒன்றை அமைக்கும் பணியில் நேற்று ஈடுபட்டிருந்தனர்.

அக்கிராம மக்கள் ஒன்றுதிரண்டு முகாம் அமைக்கும் நடவடிக்கையை நிறுத்துமாறு கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சுலோக அட்டைகளை ஏந்தியபடி நூற்றுக்கணக்கானவர்கள் இந்தப் போராட்டத்தில் பங்கேற்றனர்.

உடனடியாக இந்த விடயம் விடுதலைப் புலிகளின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

இதையடுத்து யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவினரைச் சந்தித்த புலிகளின் திருமலை மாவட்ட அர

(18ஆம் பக்கம் பார்க்க)

## அவசர சிகிச்சைப் பிரிவுக்கு 50 லட்சம் ரூபா நிதி உதவி

### அமைச்சர் மகேஸ்வரன் வழங்கினார்

யாழ்ப்பாணம்,பெப்.2

யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவு விரைவில் புனரமைக்கப்பட்டு நவீனமயமாக்கப்படவுள்ளது. இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் தனது பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட ஒதுக்கீடான 50 லட்சம் ரூபாவையும் இதற்கென வழங்கியுள்ளார்.

நேற்று யாழ்.செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் இதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டது. இதைவிட போதனா வைத்தியசாலையில் மேலும் பல கட்டுமாணப் பணிகள் 11 கோடி ரூபா செலவில் மேற்கொள்ளப்படவுள்ளன.



நேற்றைய கூட்டத்தில்....

இந்து கலாசார அமைச்சின் நிதி

(18ஆம் பக்கம் பார்க்க)

## நாஸாவின் கொலம்பியா விண்கலம் நடு வானில் வெடித்துச் சிதறியது!

நியூயோர்க்,பெப்.2

அமெரிக்காவின் விண்கலமான கொலம்பியா நேற்று நடுவானில் வெடித்துச் சிதறி துகள்களானது. அதில் பயணம் செய்த விண்வெளி ஆய்வாளர்கள் 7 பேரும் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆகாயத்தில் அமைக்கப்பட்டு வரும் சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருந்து ஆய்வாளர்களை அழைத்துக்கொண்டு பூமிக்குத் திரும்பும் வழியில் இந்த அதிர்ச்சி தரும் சம்பவம் இடம்பெற்றது.

புளோரிடா மாநிலத்தில் உள்ள கென்னடி விண்வெளி நிலையத்தில் தரையிறங்குவதற்கு 15 நிமிடங்கள் இருக்கையில் டெக்ஸாஸுக்கு மேலே வான்வெளியில் அது வெடித்துச் சிதறியது. நாஸா விண்வெளி நிலையம நேற்று வாஷிங்ரனில் இதனை உறுதி செய்தது.

உயிரிழந்த 7 விண்வெளி ஆய்

(18ஆம் பக்கம் பார்க்க)





கொலம்பியா விண்கலத்தில் புறப்படுவதற்குத் தயாராகும் விண்வெளி வீரர்களையும் விண்கலம் வெற்றிகரமாக பூமியை விட்டுப் புறப்படுவதையும் காணலாம். அது திரும்பும் வழியிலேயே விபத்து இடம்பெற்றது.

## சிப்பாய்களை பிடித்த சம்பவம்; இளைஞர்கள் 8 பேர் கைது

வடமராட்சி கிழக்கு,பெப்.2

வடமராட்சி கிழக்கு, நடுக்குடத்தனையில் நேற்றுமுன்தினம் இரவு இரு சிப்பாய்களை பிடித்து வைத்திருந்த சம்பவத்தை அடுத்து எட்டு இளைஞர்கள் பருத்தித்துறை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

களவுச் சம்பவங்களைத் தடுக்கும் நோக்கில் சேவையில் ஈடுபட்ட அப்பிரதேச விழிப்புக்குழுவினர் இரவு நேரம் நடமாடிய இரு சிப்பாய்களைப் பிடித்தமையும் -

பின்னர் அங்கு வந்த படையினர் இரு சிப்பாய்களையும் விடுவித்துச் சென்றமையும் - தெரிந்ததே.

இந்தச் சம்பவத்தையடுத்து அங்கு விரைந்த பருத்தித்துறை பொலீஸார்

(18ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சிக்கு ஆதரவு திரட்ட பிரசார நடவடிக்கை இன்று ஆரம்பம்

### பிரதமர் ஆரம்பித்து வைப்பார்

கொழும்பு,பெப்.2

சமாதான முயற்சிக்கு ஆதரவு திரட்டும் நாடு தழுவிய பிரசார நடவடிக்கை ஒன்றை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இன்று ஆரம்பிக்கின்றார்.

கெக்கிராவவில் இன்று நடைபெறும் பொதுக் கூட்டத்துடன் இந்த நடவடிக்கையை பிரதமர் ஆரம்பித்து வைப்பார்.

தொடர்ந்து நாட்டின் சகல நகரங்களிலும் இத்தகைய கூட்டங்கள் நடத்தப்படவிருப்பதாக ஐ.தே.முன்னணி பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கும் ஜே.வி.பியிற்கும் இடையில் இடம்பெற்றுவரும் பேச்சுக்கள் வெற்றி பெற்று இருதரப்பினரும் இணக்கம் காணும் பட்சத்தில் -

(18ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திர தினத்தை இம்முறை துக்கதினமாக அனுஷ்டிப்போம்!

### கல்விசார் அமைப்புக்களின் இணையம் அறைகூவல்

யாழ்ப்பாணம்,பெப்.2

எமது இனத்தின் துயரமாக இருந்துவரும் சிறிலங்கா தேசத்தின் சுதந்திர நாள் எமது துக்கநாள். எனவே, பெப்ரவரி 4 ஆம் நாள் சகல கல்விக்கூடங்களிலும் கறுப்புக்கொடிகளைப் பறக்கவிடுவதோடு கறுப்புப் பட்டி அணிந்து எமது துக்கத்தை வெளியிடுவோம்.

கல்விசார் அமைப்புக்களின் பேரிணையம் இவ்வாறு அறைகூவல் விடுத்துள்ளது.

சுதந்திர தினத்தை துக்கதினமாக அனுஷ்டிக்க வேண்டும் என்று கோரி அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சிறிலங்கா சுதந்திரமடைந்த நாள்

(18ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாண மாணவர்களின் தெற்கு விஜயம் பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம்,பெப்.2

தெற்கு - வடக்கு மாணவர்களை ஒன்றிணைக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தெற்கே யாழ்.மாணவர்கள் மேற்கொள்ளவிருந்த விஜயம் பிற்போடப்பட்டுள்ளது.

ஜேர்மன் தொழில்நுட்பக் கூட்டமைப்பின் அனுசரணையுடன் புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சு மேற்கொண்ட இத்திட்டத்தின்கீழ் 27 பாடசாலைகளைச் சேர்ந்த 800 மாணவர்கள் தெற்கு நோக்கி நேற்று புறப்படவிருந்தனர்.

இன்றுள்ள அரசியல் நிலைப்பாட்டில் இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் யாழ்.மாணவர்கள் பங்குபற்றுவதில்லை எனப் பாடசாலை அதிபர்கள் முடிவு செய்தனர்.

இந்த முடிவால் மாணவர் விஜ

(18ஆம் பக்கம் பார்க்க)

## சிரானின் முதல் மாவட்டக் குழு நேற்று இங்கு அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம்,பெப்.2

வடக்கு - கிழக்கு உடனடி மனிதாபிமான நடவடிக்கைகளுக்கான உபகுழுவின் (சிரான்) யாழ். மாவட்ட துணைக்குழு நேற்றுக் காலை யாழ். செயலகத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

அபிவிருத்தித் திட்டங்களை இனங்காணுவதற்காக மாவட்டங்கள் தோறும் சிரானுக்கு துணைக்குழுக்களை அமைக்கவும்-

அக்குழுவில் அரசசார்பில் மூவரும், புலிகள் சார்பில் மூவருமாக அறுவரை இடம்பெறச் செய்யவும் - இணக்கம் ஏற்பட்டிருந்தது.

(18ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# தவறணையை மூடக் கோரி ஈச்சமோட்டையில் மறியல்!

மக்கள் நெருக்கமாக வாழும் ஈச்சமோட்டை கடற்கரை வீதியில் அமைந்திருக்கும் கள் விற்பனை செய்யும் தவறணையை உடனடியாக மூடிவிடும்படி கோரி இப்பகுதி மக்கள் ஒன்றுசேர்ந்து மறியற்போராட்டம் ஒன்றை நேற்று சனிக்கிழமை நடத்தினர்.

ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த மறியற்போராட்டம் கள்ளுத் தவறணைக்கு முன்பாக இடம்பெற்றது.

மக்கள் நெருக்கமாக வசிக்கும் இந்தப் பிரதேசத்தில் இருந்து கள்ளுத் தவறணையை உடனடியாக அகற்றுமாறு அரியாலை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்திடம் ஏற்கனவே மகஜர் மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இந்தக்கோரிக்கை நிறைவேற்றப்படாததை அடுத்தே மறியல் போராட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நேற்று ஆரம்பமான மறியற்போர் இன்றும் தொடர்ந்து நடத்தப்பட இருப்பதாக சனசமூகத் தலைவர் தி.சுரேந்திரன் தெரிவித்தார்.

இதேவேளை -

நேற்றைய போராட்டத்தினால் மேற்படி தவறணை மூடப்பட்டுக் கிடந்தது. (ஐ-17)



தவறணையை மூடக் கோரி மறியலில் ஈடுபட்ட பொதுமக்கள்.

# சுதந்திர தினத்தை நிராகரிப்போம்!

## உயர்தர மாணவர் ஒன்றியம் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.2

தமிழ் மக்கள் முன்னுள்ள தடைகளை அகற்றாதவரை சுதந்திரம் என்பது பொய்ப் பேச்சு. சுதந்திரதினத்தை தமிழ் மக்கள் நிராகரிக்கவேண்டும். - உயர்தர மாணவர் ஒன்றியம் ஸ்ரீலங்காவின் சுதந்திர தினத்தை ஒட்டி விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கை சுதந்திரம் அடைந்து 55 ஆண்டுகளை இன்றுடன் பூர்த்தி செய்கின்றது. இதில் அரைவாசிக்கு மேற்பட்ட காலம் வன்முறை, மோதல், பகைமை என்ற இனக்குரோதங்களுக்குள் அகப்பட்டு இலங்கை சின்னாபின்னப்பட்டுள்ளது. மீதிக் காலப்பகுதியும் இனப்பகைமைக்கும், குரோதத்திற்குமான தயார்ப்படுத்தும் காலப்பகுதியாக முடிந்தது. கல்வி, பொருளாதாரம், தொழில்நுட்பம், வர்த்தகம், மனித மேம்பாடு என்பன எல்லாம் சிங்கள பௌத்த பெரும்பான்மை ஆட்சியாளர்களின் ஒழுங்குமுறைக்குள் அகப்பட்டு சீரழிந்ததே சுதந்திர இலங்கையின் வரலாறாகும்.

சுதந்திரத்திற்கான கொண்டாட்டங்கள் நியாயமற்ற போலியான ஆர்ப்பாட்டங்களேயாகும். தமிழ் மக்களை பொறுத்தவரை சுதந்திரமும் அதன் தினமும் மறக்கமுடியாத வடுக்களாகவே அமைந்திருந்தது. 1948ஆம் ஆண்டு இந்தியத் தமிழரின் குடியுரிமை பறிக்கப்பட்ட நிகழ்விலிருந்து பல ஆண்டுகளை தமிழர்கள் மறக்க முடியாதவர்களாக உள்ளனர். 1958ஆம் ஆண்டு கல்லோயா தமிழ்க்கிராமம் மீது நிகழ்ந்த படுகொலை, 1956ஆம் ஆண்டு தனிச்சிங்களச் சட்டமூலம் அமுலானமை, 1957களில் தமிழ்த் தலைமையும், சிங்களத் தலைமையும் சேர்ந்து உருவாக்கிய உடன்படிக்கை, கட்சி அரசியலுக்காக எரித்த நிகழ்வு தமிழர் சிங்கள புரிந்துணர்வை நாசப்படுத்தத் தொடங்கியது. இது 1950களின் வரலாறாக முடிந்தது.

அதன் தொடர்ச்சி 1960களிலும் நீடித்தது. 1965களில் செய்யப்பட்ட டட்லி - செல்வா உடன்படிக்கையை சிங்கள ஆதிக்க தலைமைகள் எரித்ததனால் எமது ஐக்கியம் பிரிவினைக்கு வழிவகுத்தது. அதுமட்டுமல்ல 1983ஆம் ஆண்டு நிகழ்ந்த ஜூலை இனப்படுகொலை, 1977களில் இந்திய தோட்டத் தொழிலாளர்கள் மீதான படுகொலை எனப் பல படுகொலைகளின் நிகழ்வுகள் சிங்களத் தமிழ் ஐக்கியத்தை உடைத்த வரலாறாக நீடித்தது. தமிழ்மக்கள் ஆயுதத்தையோ, போரையோ தனது இருப்பிற்கும் வாழ்விற்குமாகவே நேசித்தார்களே அன்றி இனவெறியினாலோ, ஆயுத வெறியினாலோ அல்ல என்பதை சிங்களத் தலைமைகள் புரிந்துகொள்ளத் தவறுகின்றன.

பிரித்தானியர் வரைந்த அரசியல் திட்டத்தில் குறைபாடு உண்டு எனக் கூறினாலும் இலங்கையரால் 1972ஆம் ஆண்டு, 1978ஆம் ஆண்டு உருவாக்கிய அரசியல் திட்ட வரைபில் தமிழர்களுக்கு எத்தகைய உரிமையும் வழங்கியதாக ஆதாரங்கள் இல்லை. கல்வி உரிமையை 1972ஆம் ஆண்டு தரப்படுத்தலூடாக நிராகரித்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா இளைஞர்களை ஆயுதப்போருக்கு தூண்டிவிட்டார். அவசரகாலச்சட்டம், பயங்கரவாதச்சட்டம் என்ற அடக்குமுறையையும் பலாத்காரத்தையும் தமிழர்கள் மீது கட்டவிழ்த்துவிட்டு, கொடுமைகளைப் புரிந்தன, மனித உரிமைகளை அரசியல் சாசனங்களில் இணைத்துக்கொண்ட ஆட்சியாளர்கள் தமிழர்களின் அடிப்படை உரிமைகளான வாழ்விடத்தை ஏன் இன்று ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். எமது வாழ்வாதாரத்திற்கும் உலக நாடுகள் பேசும் மனித உரிமைகளுக்கும் தொடர்பில்லையா?

பாடசாலைகள் இல்லை, வீதிகள் பாவனைக்கில்லை, வாழ்வதற்கு வீடுகள் இல்லை உழைத்து வாழ்வதற்கு சொந்த நிலங்கள் இல்லை, கல்வி - கட்டடங்களை அமைப்பதனால் மட்டும் வந்துவிடாது. சூழல் கல்விக்கு ஆதாரமானது. அத்தகைய சூழலை ஏன் தடுக்கிறீர்கள்; எமது உரிமையான கல்வியை ஏன் [illegible]கள். உயர் பாதுகாப்பு வலயம் என்பது தமிழ்மக்களுக்கா? ஸ்ரீலங்கா இராணுவத்திற்கா? உண்மையில் சிங்கள அரசு இயங்குவதற்கும் அதன் இராணுவத்திற்குமே உயர் பாதுகாப்பு வலயங்கள் அவசியமாக உள்ளது போலத் தெரிகிறது.

கொடுமையான வடுக்களைத் தாங்கிய 55 ஆண்டுகளையும் மறந்து இன்று எமக்கு இழைக்கும், இழைத்துக்கொண்டிருக்கும் அயோக்கியத்தனமான ஆக்கிரமிப்புக்கு முன்னால் சுதந்திரதினத்தை நிராகரிப்பதைத் தவிர வேறு மார்க்கம் எமக்கில்லை. இன்றும் நாங்கள் அடிமைகளாகவே. ஆனால் போராடும் சக்தியாகவே உள்ளோம். எமக்கும் சுதந்திரத்தை உருவாக்குவதாக நினைத்தால் எமக்கு முன்னால் உள்ள தடைகளை அகற்ற வேண்டும். அதுவே எமக்கான சுதந்திரம் - என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ)

## மதிப்பீட்டு பணிகள் பூர்த்தி!

உயர்பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியே பொதுமக்களை மீளக்குடியமர்த்துவது பற்றி ஆராய்வதற்கென அமைக்கப்பட்ட முத்தரப்பைக் கொண்ட மதிப்பீட்டுக் குழுவின் மதிப்பீடுகள் எவ்வித தடங்கலுமின்றி திருப்திகரமாக நடைபெற்றுள்ளதாக மதிப்பீட்டுக் குழுவின் இணைப்பாளராகிய வேலணைப் பிரதேச செயலர் எஸ். இரத்தினம் தெரிவித்துள்ளார்.

இம்மதிப்பீட்டுப் பணி தொடர்பாக முழுமையான அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அவ்வறிக்கை பெரும்பாலும் இன்று வெளியிடப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-8)

# புனர்வாழ்வு நிதியில் ரூ.4 கோடி தனியார் நிறுவனத்துக்கு கடன்!

## யாழ்.நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடும் கண்டனம்

யாழ்ப்பாணம்,பெப்.2

புனர்வாழ்வு அகதிகள் மீள் குடியமர்த்துகை அமைச்சுக்கென இவ்வாண்டு ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் இருந்து 4 கோடி ரூபாவை வடபகுதியில் மின்சார விநியோகத்தை மேற்கொண்டுவரும் தனியார் நிறுவனமாகிய 'கூல் ஏயார்' நிறுவனத்துக்கு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன கடனாக வழங்கியுள்ளமை கண்டனத்திற்குரியவை.

- இவ்வாறு நேற்று யாழ்செயலகத்தில் நடைபெற்ற அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கூட்டாகக் கண்டனத்தை வெளியிட்டனர்.

இது தொடர்பாக அவர்கள் கருத்து வெளியிடுகையில் -

புனர்வாழ்வுப் பணிகளுக்கென செலவிடப்படவேண்டிய புனர்வாழ்வு அமைச்சின் நிதி 4 கோடி ரூபாவை அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்மதம் ஏதும் இன்றி கடந்த வாரம் 'கூல் ஏயார்' நிறுவனத்திற்கு கடனாக வழங்கியுள்ளார். இதனை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். அரசினால் அமைச்சுக்கென ஒதுக்கப்படும் நிதியை ஒரு தனியார் நிறுவனத்திற்குக் கடனாக வழங்குவது எவ்வாறு சாத்தியமாகும்? எவருடைய அங்கீகாரத்துடன் இந்நிதி வழங்கப்பட்டது என்பது எமக்குத் தெரியவில்லை.

'கூல் எயார்' நிறுவனத்தின் மின்சார விநியோகம் வடக்கில் சீராக நடைபெறவில்லை என்பது எல்லோருக்கும் தெரியும். அந்நிறுவனத்திடம் உள்ள மின் பிறப்பாக்கிகளும் எதுவித செயற்திறனும் அற்றவை. இந்நிலையில் அந்நிறுவனத்திற்கு இவ்வளவு பெரும் தொகை நிதி ஏன் வழங்கப்பட்டது?

- இவ்வாறு எம்.பிக்கள் கூட்டாக கேள்வி எழுப்பினர். (ஐ-8-10)

# போதிய அரிசி கையிருப்பில் இல்லை நிவாரண விநியோகம் தாமதம்

## யாழ். அரச அதிபர் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.2

குடாநாட்டில் இடம்பெயர்ந்த மக்களுக்கு நிவாரணம் வழங்க போதிய அரிசி கைவசம் இல்லை. இதனால் டிசெம்பர், ஜனவரி ஆகிய மாதங்களுக்கான நிவாரணத்தை வழங்கமுடியாத நிலை உள்ளது என்று அரச அதிபர் செ.பத்மநாதன் தெரிவித்தார்.

குடாநாட்டில் இடம்பெயர்ந்த மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான அரிசி தெற்கில் இருந்தே எடுத்துவரவேண்டியுள்ளது. இந்த அரிசியை புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சே அனுப்பி வருகின்றது.

கடந்த இரு தடவைகள் கப்பல்கள் மூலம் அனுப்பப்பட்ட அரிசி தொடர்பாக சிக்கல்கள் எழுந்ததால் போதிய அரிசி கையிருப்பில் இல்லாதுபோனது.

சில மாதங்களுக்கு முன்னர் கொழும்பில் இருந்து கப்பல் மூலம் அனுப்பப்பட்ட 3 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை விநியோகம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. அந்த அரிசி தரம் குறைவானதாகவும் பழுதடைந்த நிலையிலும் இருந்ததால் அந்த அரிசி களஞ்சியத்தில் வைக்கப்பட்டுள்ளது. அந்த அரிசியில் 500 மெற்றிக் தொன் மட்டும் நிவாரணத்துக்கு விநியோகம் செய்யப்பட்டது. எஞ்சிய அரிசியை அரிசி குற்றும் ஆலையில் கொடுத்து துப்புரவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன் பின்னர் இந்தியாவில் இருந்து கப்பல் மூலம் எடுத்துவரப்பட்ட 2 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியிலும் 549 மெற்றிக் தொன் அரிசி குறைவாக இருந்தது. இது தொடர்பாக உயர்மட்ட அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளேன்.

இந்தக் காரணங்களால் இடம்பெயர்ந்த மக்களுக்கான டிசெம்பர், ஜனவரி மாதங்களுக்கான நிவாரணத்தை வழங்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தற்சமயம் கையிருப்பில் உள்ள அரிசியைக் கொண்டு டிசெம்பர் மாதத்துக்குரிய முதல் இரு வாரங்களுக்கான நிவாரணத்தை வழங்க ஏற்பாடு செய்துள்ளோம்.

குடாநாட்டு மக்களின் நிவாரணத்துக்குத் தேவையான அரிசியை வன்னிப்பெருநிலப்பரப்பில் இருந்து எடுத்துவந்து விநியோகிக்க அனுமதிக்குமாறு கோரிக்கைகள் விடுக்கப்பட்டன. அக்கோரிக்கைகளுக்கு சாதகமான முடிவு எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இதற்கான அனுமதி கிடைக்கும் பட்சத்தில் நிவாரண விநியோகத்தை குறிப்பிட்ட காலப்பகுதிகளுள் வழங்க முடியும் என நம்புகின்றேன். - இப்படி அரச அதிபர் தெரிவித்தார். (ஐ-3)

# யாழ். பொது நூல் நிலையம் 14ஆம் திகதி திறக்கப்படுமாம்

யாழ். பொது நூலகம் எதிர்வரும் 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது. யாழ்நகர மேயர் செ.கந்தையன் தலைமையில் காலை 10 மணிக்கு நடைபெறவுள்ள இந்நிகழ்வில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வீ.ஆனந்தசங்கரி கலந்துகொண்டு நூல் நிலையத்தைத் திறந்துவைப்பார். இத்திறப்புவிழாவில் கலந்துகொள்வதற்கு அமைச்சர்கள் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் அழைப்பிதழ் அனுப்பிவைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

திறப்புவிழா ஏற்பாடுகளை மேற்கொள்வது பற்றி ஆராய்வதற்கென மேயர் செ.கந்தையன் தலைமையிலான குழு நேற்று யாழ்நூல் நிலையப் பகுதிக்கு விஜயம் செய்தது. (ம-8)

புனரமைக்கப்பட்ட யாழ்.நூலகம்



# வழமையான நடைமுறைப்படியே இந்திய அரிசி தருவிப்பு!

## அமைச்சர் ஜயலத் அறிக்கை

கொழும்பு,பெப்.2

குடாநாட்டுக்கு பொருள்களை எடுத்துவரும் வழமையான கொள்வனவு நடைமுறைகளுக்கு அமைவாகவே இந்தியாவில் இருந்து அரிசியை பருத்தித்துறைக்கு எடுத்துவந்தோம் என்று புனர்வாழ்வு அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன் தெரிவித்தார்.

இந்தியாவில் இருந்து 'சஜித்த' கப்பல் மூலம் எடுத்துவரப்பட்ட 2 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியில் 549 மெற்றிக் தொன் அரிசி காணாமற்போயுள்ளமை தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

குடாநாட்டு மக்களுக்கு நிவாரணம் வழங்கத் தேவையான அரிசியை கொள்வனவு செய்ய அரச நடைமுறையின்படி கேள்விப் பத்திரம் கோரப்பட்டது. அதன் அடிப்படையில் ஒரு நிறுவனத்துக்கு உத்தரவு வழங்கப்பட்டது. 4 ஆயிரம் மெற்றிக்தொன் அரிசிக்கு உத்தரவு வழங்கப்பட்டிருந்தது. அதன்படி முதற்கட்டமாக 2 ஆயிரம் மெற்றிக்தொன் எடுத்துவரப்பட்டிருந்தது.

அந்த அரிசி கப்பலில் இருந்து இறக்கப்பட்ட பின்னர் அதில் 549 மெற்றிக்தொன் அரிசி குறைவாக உள்ளதாக அரச அதிபர் அறிவித்திருந்தார். இதன் காரணமாக சம்பந்தப்பட்ட நிறுவனத்துக்கு கொடுப்பனவு வழங்கப்படவில்லை.

இந்த விவகாரம் தொடர்பாக பிரதமர், விசாரணைக்குழு ஒன்றை அமைத்துள்ளார். பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோனும் தனியான விசாரணைகளை மேற்கொண்டுள்ளார் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஐ-3)

# ஊரெல்லாம் இதே பேச்சு...!



முதல் உலகக் கிண்ணத்தை வென்ற மகிழ்வில் மே. இந்திய அணித் தலைவர் கிளைவ் லொயிட்.

## அணிகளின் விவரம்

### இலங்கை

சனத் ஜெயசூரிய (தலைவர்), மார்வன் அத்த பத்து (துணைத் தலைவர்), மஹேல ஜெயவர்த் தன, குமார் சங்ககார, அரவிந்த டி சில்வா, ரஸல் ஆர்னல்ட், ஜெஹான் முபாரக், அவிஸ்க குணவர்த் தன, ஹசான் திலகரத்ன, முத்தையா முரளிதரன், சமிந்த வாஸ், தில்ஹார பெர்னாண்டோ, புலஸ்தி குணரட்ண, பிரமாத் நிஷங்க, புத்திக பெர்னாண்டோ.

### ஆஸ்திரேலியா

ரிக்கி பொண்டிங் (அணித் தலைவர்), அடம் கில்கிறிஸ்ட், மைக்கல் பெவன், அண்டி பிக்கல், ஜேசன் கிலெஸ்பி, மத்தியூ, ஹெய்டன், ப்ராட் ஹொக், பிரெட் லீ, டெரன் லீமன், ஜிம்மி மஹேர், டேமியன் மார்ட்டின், க்ளென் மெக்ராத், அண்ரூ சைமண்ட், ஷேண் வோர்ன், ஷேன் வாட்சன்

# இன்னும் 6 நாள்களில் திருவிழா ஆரம்பம்!

கொழும்பு,பெப்.2

கிரிக்கெட் பிரியர்கள் ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி ஆரம்பமாக இன்னும் 6 நாள்களே இருக்கின்றன. இம்மாதம் 8ஆம் திகதி முதல் தென்னாபிரிக்கா, கென்யா மற்றும் சிம்பாவே நாடுகளிலுள்ள பல்வேறு மைதானங்களில் ஆட்டங்கள் நடைபெறவுள்ளன.

கென்யா மற்றும் சிம்பாவே மைதானங்களில் ஆட ஆஸ்திரேலியா, இங்கிலாந்து மற்றும் நியூசிலாந்து போன்ற முன்னணி அணிகள் தயங்குகின்றன. அங்குள்ள அரசியல் சூழ்நிலைகள் இதற்குக் காரணம் இதனால் கென்யா, சிம்பாவே மைதானங்களில் நடைபெறவுள்ள ஆட்டங்களை ரத்துச் செய்யுமாறு இந்த அணிகள் கோரின. ஆனால் ஐ.சி.சி.அதற்கு இணங்கவில்லை.

இந்த அறிவித்தலையும் மீறி இங்கு நடக்கும் ஆட்டங்களைப் பகிஷ்கரிக்கும் அணிகள் சர்வதேச கிரிக்கெட் சங்கத்துக்குக் கூடிய அளவு பணம் தண்டமாகச் செலுத்த வேண்டிவரும்.

இத்தகைய ஒரு சூழ்நிலையிலேயே இந்த எட்டாவது உலகக் கிரிக்கெட் கிண்ணம் ஆரம்பிக்கின்றது. இதுவரை நடைபெற்று முடிந்த 7 உலகக் கிண்ணப் போட்டிகளில் முதல் இரண்டு போட்டிகளிலும் மேற்கிந்திய தீவுகள் அணி வெற்றி பெற்றது. (1975 - 1979) ஏனையவற்றில் முறையே இந்தியா (1983), ஆஸ்திரேலியா (1987), பாகிஸ்தான் (1992), இலங்கை (1996), ஆஸ்திரேலியா (1999) கிண்ணங்களைச் சுவீகரித்தன.

கிரிக்கெட் உலகைப் பொறுத்தவரையில் முக்கியத்துவம் வாய்ந்ததாக உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் காணப்படுகின்றன. ஒவ்வொரு அணியும் உலகக் கிண்ணத்தை வெல்வதை குறிக்கோளாகக் கொண்டு அவற்றை வெல்வதற்கு பகீரதப் பிரயத்தனம் செய்கின்றன.

இம்முறை உலகக் கிண்ணத்தை வெல்லும் அணி எது என்று திட்டவட்டமாகக் கூறமுடியாதுள்ளது. கிரிக்கெட்டில் எதுவும் நடக்கலாம். என்பது கடந்த பல ஆண்டுகளில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

பெரும்பாலான கிரிக்கெட் ஆர்வலர்களின் கணிப்புப் படி இம்முறை உலகக் கிண்ணத்தை வெல்லக் கூடிய அணிகளில் ஆஸ்திரேலிய, தென்னாபிரிக்க அணிகளே முன்னணியில் உள்ளன.

அதற்கு அடுத்த படியாக இலங்கை, இந்தியா இங்கிலாந்து மற்றும் நியூசிலாந்து அணிகளும் உலகக் கிண்ணங்களை வெல்லக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. கிரிக்கெட்டில் எதுவும் நடக்கலாம் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

இம்முறை உலகக் கிண்ணக் கிரிக்கெட்டில் பங்குபற்றும் 14நாடுகளில் ஏ பிரிவில் ஆஸ்திரேலியா, இந்தியா, பாகிஸ்தான், இங்கி லாந்து, சிம்பாவே, நெதர்லாந்து மற்றும் நமீபியா ஆகிய நாடுகள் பங்குபற்றுகின்றன. இப்பிரிவில் பங்குபற்றும் அணிகளில் ஆஸ்திரேலியா, இந்தியா, பாகிஸ்தான், இங்கிலாந்து மற்றும் சிம்பாவே ஆகிய அணிகளுக்கிடையிலான போட்டிகள் முக்கியமானவை.

'பி' பிரிவில் தென்னாபிரிக்கா, இலங்கை, நியூசிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள், பங்களாதேஷ், கனடா மற்றும் கென்யா ஆகிய நாடுகள் பங்குபற்றுகின்றன. இப்பிரிவில் இலங்கை தென்னாபிரிக்கா மற்றும் நியூசிலாந்து அணிகள் பெரும்பாலும் "சுப்பர் சிக்ஸ்" போட்டிக்கு தெரிவு செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இருந்த போதும் இப்பிரிவில் உள்ள மேற்கிந்திய தீவுகள் அணியின் அண்மைக்கால பெறுபேறுகளை பார்க்கும்போது அந்த அணியையும் குறைத்து மதிப்பிட முடியாது.

எது எப்படி இருப்பினும் மார்ச் 4ஆம் திகதிக்கு முன் எந்த அணிகள் சுப்பர் சிக்ஸ் போட்டிக்கு தெரிவு செய்யப்படும் என்பது தெரிந்துவிடும். அதுவரை சற்றுப் பொறுமையாக இருப்பதே நம்கடன்!

*- வசந்தன்*

## நினைவில் நின்றவை

**இன்னும் ஆறே நாள்களில் கிரிக்கெட் திருவிழா ஆரம்பமாகிவிடும். 57 நாள்களுக்கு ஒரே கொண்டாட்டம்தான். இந்தக் கொண்டாட்டத்தில் உங்கள் உதயனும் மகிழ்வுடன் இணைந்து கொள்ளவுள்ளான்.**

**இந்தத் தருணத்தில் நடந்து முடிந்த கிரிக்கெட் உலகக் கிண்ணங்கள் பற்றிய பார்வையை மீட்பது சிறந்தது என்று நினைக்கின்றேன். அந்த வகையில் நினைவில் நின்றவைகளை மீட்டுத்தர முயன்றுள்ளேன். உலகக் கிண்ணங்கள் பற்றிய முழு விவரங்களையும் தர இங்கே இடம்போதாது. அதனைக் கேட்டால் ஆசிரியபீடத்தினர் என்னை உதைக்க வரக்கூடும். எனவே சுவையான, சுவாரஸ்யமான, முக்கியமான விடயங்கள் பற்றி முடிந்த வரையில் இங்கே எனது நினைவுகளை மீட்டுவதே நோக்கம்.**

## முதலாவது உலகக் கிண்ணம்

முதலாவது உலகக் கிண்ண இறுதிஆட்டம் இங்கிலாந்தின் லோட்ஸ மைதானத்தில் 1975ஆம் ஆண்டு ஜூன மாதம் 21ஆம் திகதி நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான பார்வையாளர்கள் அந்த ஆட்டத்தைக் காணத் திரண்டிருந்தனர்.

ஆஸ்திரேலியா - மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற ஆஸ்திரேலிய அணித் தலைவர் இயன் சேப்பல், மே.இந்தியத் தீவுகள் அணியை முதலில் துடுப்பெடுத்தாடப் பணித்தார்.

ஆரம்ப ஆட்டக்காரராகக் களமிறங்கினார் மே.இந்திய அணியின் அதிரடி ஆட்டக்காரர் ராய் ஃபிரெட்ரிக்ஸ். ஆஸி வேகப்பந்து வீச்சாளர் டென்னிஸ் லில்லியின் முதல் பந்தையே அலாக்காகத் தூக்கி எல்லைக் கோட்டுக்கு வெளியே பறக்கவிட்டார். அபாரமான ஆரம்பம்; ஆனால், விதி! லில்லியின் மற்றொரு பந்தையும் தூக்கி அடிக்க முற்பட்ட ராய் 'கிட் வ்க்கெட்' முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து ஆடவந்த ஆல்வின் காலிச்சரணை மறுமுனையில் பந்து வீசிய கேரி கில்மர் வீழ்த்தினார். அன்றைய உலகின் சிறந்த வேகப் பந்து வீச்சாளரான ஆஸி.வீரர் ஜெ.ஃப் தொம்ஸன் மே.இந்திய வீரர் கிரினீட்ஜை வந்தவேகத்தில் திருப்பியனுப்பினார். ஆகமொத்தத்தில் 50 ஓட்டங்களை பெறுவதற்குள் மே.இந்திய அணி 3 விக்கெட்டுக்களைக் காவுகொடுத்தது.

ஆனாலும், சளைக்கவில்லை அந்த அணி. அடுத்துக் களமிறங்கிய ரோஹன் கனாயும், அணித் தலைவர் கிளைவ் லொய்டும் 4ஆவது விக்கெட்டுக்காக இணைந்து, அபாரமாகத் துடுப்பெடுத்தாடி 149 ஓட்டங்களைக் குவித்தனர்.

அன்று கிளைவ் லொய்ட் ஆடிய ஆட்டம் வரலாற்றுப் பதிவானது. 85 பந்துகளை மட்டும் எதிர்கொண்ட லொய்ட் 2 சிக்ஸர்கள், 12 பௌண்ரிகள் அடங்கலாக வேகமான சதம் ஒன்றைக் குவித்தார். மறுமுனையில் கனாய் நின்று நிதானமாகத் தடுத்தாடினார். 105 பந்துகளில் 8 பௌண்ரிகள் அடங்கலாக 55 ஓட்டங்களைப் பெற்றார் அவர்.

இவர்கள் இருவரின் விக்கெட்டுக்களையும் அடுத்தடுத்து வீழ்த்தினார் கேரி கில்மர். அடுத்து வந்த ரிச்சர்ட்ஸையும் ஆட்டமிழக்கச் செய்தார். அணியின் கடைசி வரிசை ஆட்டக்காரர்களான கெய்த் பாய்ஸ், பெர்னார்ட் ஜூலியன், டெரிக் முர்ரே ஆகியோரின் உதவியுடன் மே.இந்திய அணி 60 ஓவர்களில் 291 ஓட்டங்களைக் குவித்தது.

அப்போதெல்லாம் ஒரு நாள் ஆட்டங்களில் 60 ஓவர்களே ஆடப்பட்டு வந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

292 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கியது ஆஸி. அணி. இலக்கு சற்றுப் பெரியது தான் என்றாலும், அதைக் கண்டு மலைக்கும் அளவுக்கு ஆஸி. அணி இல்லை.

ஆரம்பம் முதலே ஆஸி. அணி வீரர்கள் மிகச் சிறப்பாக நிதானமாக ஆடினார்கள். 6 விக்கெட் இழப்புக்கு அந்த அணி 220 ஓட்டங்களைக் குவித்திருந்தது. இருந்தாலும் விவியன் ரிச்சர்ட்ஸின் அசத்தலான களத்தடுப்புக் காரணமாக ஆலன் டர்னர், இயன சேப்பல், கிரெக் சேப்பல் ஆகியோர் 'ரன்அவுட்' ஆகினர்.

அதன் பின்னர் ஆஸி. அணிக்கு சோதனைக் காலம் ஆரம்பமானது. மே.இந்திய வீரர் கெய்த் பாய்ஸின் பந்து வீச்சு ஆஸி. வீரர்களுக்கு சவாலானது. 12 ஓவர்கள் பந்து வீசிய அவர் 50 ஓட்டங்களை மட்டும் கொடுத்து 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இதனால், 233 ஓட்டங்களுக்கு தனது 9ஆவது விக்கெட்டைப் பறிகொடுத்தது ஆஸ்திரேலியா.

கடைசி விக்கெட்டுக்காக இணைந்த லில்லியும் தொம்ஸனும் பெரும் போராட்டத்தின் மத்தியில் 41 ஓட்டங்களை அணிக்காகப் பெற்றனர். வெற்றிபெற இன்னும் 18 ஓட்டங்களே தேவை. அவர்கள் நின்றாடும் திறத்தைப் பார்த்தால் வெற்றி ஆஸி. அணியின் பக்கம் சென்றுவிடுமோ என்ற அச்சம். கிடைத்த சந்தர்ப்பத்தை மிகச் சரியாகப் பயன்படுத்தினார் மே.இந்திய வீரர் காலிச்சரண். தொம்ஸனை அவர் 'ரன்அவுட்' செய்தார். ஆஸி. அணி 58.4 ஓவர்களில் 274 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தது.

மேற்கிந்திய அணி 17 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று முதல் உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியது. அந்த அணியின் தலைவர் கிளைவ் லொயிட் ஆட்டநாயகனாகத் தெரிவானார். உலகின் முதலாவது கிரிக்கெட் கிண்ணத்தையும் அவரே பெற்றுக்கொண்டார்.

அன்றைய ஆரம்பமே இன்று கிரிகெட் காய்ச்சல் வரை கொண்டு சென்று விட்டுள்ளது.

*- கனிமொழி.*

கிரிக்கெட் உலகக் கிண்ணம் 2003

World Cup 2003

## உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

**இன்று முதல் உங்கள் உதயனுடன் இணைந்திருங்கள் நம்பமுடியாதவைகளை நம்பவேண்டிவரும்**

**கணக்குப் பதிவு செய்ய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

*க.பொ.த. (உயர்தரம்) வர்த்தகப் பிரிவில் சித்தியடைந்த 25 வயதுக்குட்பட்ட பெண்களிடமிருந்து விண்ணப்பங்கள், யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல வர்த்தக நிறுவனத்தால் எதிர்பார்க்கப்படுகின்றது.*

விண்ணப்பங்கள் 10.02.2003ஆம் திகதிக்கு முன்னர் விள.இல. 1765, C/o உதயன், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பவும். (13966)

**தவறிவிட்டது**

நயினாதீவிலிருந்து புங்குடுதீவு வழியாக புளியங்கூடல் வருகையில் வீடியோகமரா, ஸ்ரீல்கமரா, வோக்மன், கெசற் ஆகியன அடங்கிய கறுப்புப்பை (Bag) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் குறிப்பிட்ட விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

ச.கனகாம்பிகை,
இல.14, கலைப்புலவர் வீதி, யாழ்ப்பாணம்.
(13962)

**சுயதொழிற்பயிற்சி**

**ஸ்கிறீன் பிரிண்டிங் வகுப்புகள்!**



தென் தமிழகத்திலிருந்து வருகைதருகின்றார் அச்சுக்கலை நிபுணர் R.பரதன் D.P.Tech. 14.02.2003இல் வகுப்புகள் (9.00a.m.) ஆரம்பமாகின்றன. முன்கூட்டியே பதிவுகளைச் செய்யவும்.

**CAREER.COM INSTITUTE,**
79, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
(0777 108423, 0777 706334 இணைப்பாளர்)
(13990)

**POST OF SALES PROMOTIONAL OFFICER**
**JAFFNA & KILINOCHI DISTRICTS**

J.L.Morison Son & Jones(Ceylon) Limited have a vacancy for an Agrochemical Sales Promotion Officer in the Jaffna & Kilinochi Districts.

Applicants must be well recommended and possess the following qualifications:

- ✦ At least 2 years experience in similar field.
- ✦ Diploma in Agriculture from a recognised school of Agriculture or a degree in Agriculture.

Applications with the names of 2 non related referees must reach the undersigned before 10th February 2003.

**The Director,**
**J.L.Morison Son & Jones(Cey.)Ltd.,**
**P.O.Box 430,**
**Colombo.**
(13974)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிவயோகம் மகாலிங்கம்

புங்குடுதீவு 11ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும்கொண்ட இளைப்பாறிய ஆசிரியை திருமதி சிவயோகம் மகாலிங்கம் 26.01.2003 அன்று லண்டனில் சிவபதமடைந்தார்.

இவர் காலஞ்சென்ற சுப்பையா மகாலிங்கம்(கிராமசேவையாளர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான செல்லையா-கண்மணி தம்பதியினரின் அன்பு மகளும் சுப்பையா - பொன்னாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும் பர்வதாதேவி, கனகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் விஜயலிங்கம்(பிரான்ஸ்), யோகலிங்கம்(கனடா), கனகநாதன்(நோர்வே), சிவகலா(லண்டன்) ஆகியோரின் அருமைத் தாயாரும் அதிஜா, வசந்தினி, ரூபா, சந்திரமோகன் ஆகியோரின் அன்பு மாமியாரும் அகல், ஜெகன், கபிலன், ஆனந்தன், அரவிந், பிரணவன், வராகன், ரூபன் ஆகியோரின் அன்புப் பாட்டியும் காலஞ்சென்றவர்களான முருகேசு(கனகலிங்கம்), பஞ்சலிங்கம் மற்றும் தியாகலிங்கம் மங்கயர்க்கரசி ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30.01.2003 வியாழக்கிழமை லண்டன் இந்து மயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

*தகவல்:*

*சு.தியாகலிங்கம் (மைத்துனர்)*
*37/4, சிவகுருநாதர் லேன்,*
*பிறவுண் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(13979)

பூ.சந்திரமோகன் *(மருமகன்)*
*25, Torbay Road,*
*South Harrow,*
*Middle Sex, U.K.*

### திருமதி கந்தையா செல்லம்மா

புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி கந்தையா செல்லம்மா 31.01.2003 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற காட்டுமுத்தர் - பார்வதிப்பிள்ளையின் அன்பு மகளும் காலஞ்சென்ற கந்தையாவின் பாசமிகு மனைவியும் செல்வராணி, காலஞ்சென்ற கோபாலபிள்ளை (முன்னாள் வர்த்தகர், கோபால் அன்சன்ஸ், யாழ்ப்பாணம்) மற்றும் கமலாதேவி, ஜெகநாதன் (துரை - வர்த்தகர், புங்குடுதீவு) ஆகியோரின் அன்புத் தாயாரும் நாகலிங்கம், கமலாதேவி (கனடா), மகேந்திரன் (நீர்கொழும்பு), ஜெயமணிகமலா ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்ற யோகம்மா மற்றும் தங்கம்மா (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் நாகேஸ்வரி, ராதா, சௌந்தரராஜன் (பிரான்ஸ்), லதா(சுவிஸ்), சுந்தரராஜன் (லண்டன்), அன்பன் (வர்த்தகர், கொழும்பு), ஜெயந்தன் (கனடா), தர்சினி (சுவிஸ்), சயந்தன் (கனடா), சுகன்யா (கனடா), தீபன் (கனடா), கரன் (சுவிஸ்), பவான் (சுவிஸ்), பாமா (சுவிஸ்), ஜீவன் (பிரான்ஸ்), மதியன், பாமினி, பத்மநாதன், பத்மப்பிரியா, ஜெயப்பிரியா, பத்மசீலன், பத்மரூபன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து இறுதிக்கிரியைகளின் பின்னர் தகனக்கிரியைக்காக இன்று (02.02.2003) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10மணியளவில் கேரதீவு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*4ஆம் வட்டாரம்,*
*புங்குடுதீவு.*
(13994)

தகவல்: ஜெகநாதன்
(துரைராசா - மகன்).

## வீதிவிளக்குகள் இல்லை; பாதசாரிகள் சிரமம்

கரவெட்டி,பெப்.2

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய வீதி மின் விளக்குகளின்றி இரவுவேளைகளில் இருளில் மூழ்கிக் கிடக்கின்றது.

இதனால், மேற்படி வீதியூடாக இரவு வேளைகளில் பயணம் செய்வோர் பெரும் சிரமத்தை அனுபவிக்கின்றனர் எனக் கூறப்படுகிறது.(எ-70)

## வடமராட்சியில் 'கண்நோய்' பரவுகிறது

கரவெட்டி,பெப்.2

வடமராட்சியில் பல்வேறு பகுதிகளிலும் கண் நோய் பரவ ஆரம்பித்துள்ளது. இதுவரை கண் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளோரின் எண்ணிக்கை உயர்ந்துள்ளதால், மேலும் பலர் இதனால் பீடிக்கப்படலாம் என அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.(எ-70)

## திருமறைக் கலாமன்ற மாதாந்த ஒன்றுகூடல்

திருமறைக் கலாமன்ற கலைஞர்களுக்கான மாதாந்த ஒன்றுகூடல் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30மணிக்கு மன்ற கலைத் தூது மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் மன்ற அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (எ-4)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



தொல்புரம் மேற்கு யா/169
கிராம உத்தியோகத்தர்

**திரு.இ.நிரஞ்சன்**

அவர்கள் கிராம உத்தியோகத்தர் தரம் - I இற்குப் பதவியுயர்வு அடைந்தமையையிட்டு அவரைப் பாராட்டி எமது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு, இன்று (02.02.2003) ஞாயிறு மாலை 6.00 மணியளவில் தொல்புரம் மத்திய சனசமூக நிலைய முன்றிலில் பாராட்டுவிழா நடைபெறும் என்பதையும் அறியத்தருகிறோம்.

*தொல்புரம் மத்தி,*
*சுழிபுரம்.*
(13975)

தொல்புரம் கொட்டியம்பதி ஸ்ரீ ஆதிமுத்து மாரிஅம்பாள் ஆலய பரிபாலனசபையும்,
தொல்புரம் மத்திய சனசமூக நிலையத்தினரும்.

**தேவை**

எமது ஸ்தாபனத்துக்கு அனுபவமுள்ள விற்பனையாளர்களும், பழக விரும்புபவர்களும் தேவைப்படுகின்றனர்.

வயது 18 - 28

உடன் நேரில் வரவும்.

**த.குமாரசாமி அன் சன்ஸ்**
248/1, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
(13988)

**SHOTOKAN KARATE ACADEMY**
**Affiliated to: I.U.M.A. Colombo, J.D.K.A. Jaffna**



R.வித்தியானந்தன், *(1ஆம் கறுப்புப் பட்டி)* M.மக்ஸ்மிலன், *(1ஆம் கறுப்புப் பட்டி)* D.அன்ரோ டினேஸ், *(பிரதம ஆசிரியர்)* N.சுரேஷ்குமார், *(2ஆம் கறுப்புப்பட்டி)*

சென்செய் D.அன்ரோ டினேஸ், *M.T.SK.(5TH DAN) அவர்களால் மேற்படி மாணவர்கள் தரமுயர்த்தப்பட்டமையையிட்டு கழக ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகிய நாம் பெருமகிழ்வடைகின்றோம்.*

★ புதிய மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

S.K.A.ஆசிரியர்கள், மாணவர்கள்.
18/5, மாட்டீன் வீதி, யாழ்ப்பாணம். (13995)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



*சங்கானை, மீசாலை, உடுவில், கொழும்பு ஆகிய இடங்களில் வசித்தவரான*

திருமதி

**கனகசபாபதி இலட்சுமி அம்மாள்**

மலர்வு 25-02-1912 உதிர்வு 18-01-2002

திதி: 06.02.2003

**ஆண்டு ஒன்று உருண்டு ஓடியும், உங்கள்**
**அன்பு முகம் எங்களைவிட்டு மறையவில்லையே அம்மா!**
**தீங்கு என்னும் சொல்லைக்கூட விரும்பாத தெய்வமே!**
**அல்லும் பகலும் மெழுகாய் உருகி இறை அருளுடன்**
**எங்களை அரவணைத்த தாயே!**
**அன்பின் பொக்கிஷமே!**
**எம் இதயம் நிறைந்த அம்மாவே!**
**உங்கள் ஆத்மா சாந்தியடைய**
**திருச்செந்தூரானைப் பிரார்த்திக்கின்றோம்.**

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்:
மகன், மகள், பெறாமக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

தகவல்:
S.K.V.விமலராச,
K.C.விக்கினராச,
திருமதி தருமானந்தம். (C-26311)

உதயன்

# முஸ்லிம்களின் தலைமைக்கு முக்கிய காலகட்டம் இது!

இந்த நாட்டில் ஐந்து தசாப்த காலமாக நீடித்து வரும் இனப்பிரச்சினை கடந்த இரு தசாப்த காலத்தில் மிக மோசமான ஆயுதப் போராக உருவெடுத்தது.

ஆயுதப் போராட்டமும் அதன் வெளிப்பாடாகத் தொடர்ந்த கொடூரங்களும் சிங்களவர்களையும் தமிழர்களையும் எதிரெதிராக இரண்டு அந்தங்களில் கொண்டு போய் நிறுத்தின.

இந்த இரண்டு இனங்களுக்கும் இடையிலான முரண்பாடு, மூன்றாவது இனமாகத் தன்னை வகைப் படுத்திக் கொண்ட முஸ்லிம்களுக்கு மிகவும் வாய்ப்பாக அமைந்ததுதான் கடந்த கால அனுபவம்.

தமிழ் பேசும் மக்கள் என்ற வகைக்குள் முஸ்லிம்களும் அடங்குவர். வடக்கு - கிழக்கில் வாழ்ந்த முஸ்லிம்களில் கணிசமானோர் தமிழர்கள் தமது உரிமைகளுக்காக அஹிம்சை ரீதியில் போராட்டம் நடத்திய காலத்தில் தமிழர் இனத்துடனேயே சேர்ந்து செயற்பட்டனர்.

ஆனால், அஹிம்சை வழிப் போராட்டம் சரிப்பட்டு வராது என்பதை உணர்ந்து தமிழர் தேசியம், ஆயுதப் போராட்டத்தின் வழி திரும்ப, முஸ்லிம்களும் தங்களை வேறுபடுத்தி வேறு திசையில் திருப்பிக் கொண்டனர்.

இரண்டு தசாப்த இனப்போருக்கு மத்தியில் - தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையில் யுத்தம் பூதாகரமாக வடிவெடுத்த வேளையில் - இரண்டுக்கும் நடுவில் நின்றவாறு தமது இனநலனை வளர்ப்பதில் முஸ்லிம்கள் பெருவெற்றி கண்டனர்.

தங்களுடைய தனிப்பட்டதும் தங்களது இனத்தினதும் நலனைப் பேணுவதற்காக ஆட்சியில் இருந்த சிங்கள பேரினவாத அரசுகளுக்கு முஸ்லிம்களின் தலைமைகள் முண்டுகொடுத்து வந்தன. ஆட்சிகள் மாறமாற தாங்கள் சார்ந்திருக்கும் கூட்டணிகளையும் மாற்றிக் கொண்டு ஆளும் தரப்பைத் தாங்கிப் பிடிக்கும் கைங்கரியத்தை முஸ்லிம் தலைமைகளே செய்து வந்தன.

'தொத்துப் பொறியில்' ஆட்சிக் கட்டில் ஏறி ஈழத் தமிழர்களுக்கு எதிராக பெரும் இராணுவக் கொடூரங்களைப் புரிந்த சந்திரிகா அரசைக் கூட சரிந்து விடாமல் தாங்கிப் பிடித்துக்கொண்டிருந்தது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்தான். அந்தக் கட்சி, சந்திரிகா அரசுக்குத் தான் வழங்கி வந்த ஆதரவை என்று வாபஸ் பெற்றதோ அன்றுடன் சந்திரிகா அரசு ஆட்டம் கண்டு அடியோடு சரிந்தது.

இப்படி தமிழருக்கு எதிரான கொடூர அரசுகளுக்கு முட்டுக் கொடுத்து வந்த முஸ்லிம் தலைமைக்கு -

தமிழர்களுக்கும், சிங்களவர்களுக்கும் இடையிலான பூசல், பிரச்சினைகளுக்கு நடுவில் - மத்தியில் - புகுந்து - லாபம் ஈட்டிக் கொண்டிருந்த முஸ்லிம் தலைமைக்கு -

இப்போது தமிழரும் சிங்களவர்களும் பூசல்களை மறந்து - பிரச்சினைகளுக்கு அமைதி வழியில், சுமுகத் தீர்வுகாண - இணங்கிப் போவதைக் கண்டு பொறுத்துக்கொள்ள முடியவில்லை.

இரு தரப்பும் தொடர்ந்து சண்டையிட்டால் இடையில் வாய்ப்பாகப் பிடுங்கிக்கொள்ளலாம் என்ற தங்கள் எதிர்பார்ப்பு அடிபட்டுப் போனதாக அவர்களுக்குக் கவலை.

அதனால்தான் தற்போதைய சமாதான முயற்சிகளுக்கு வேட்டு வைக்கும் நகர்வுகளை அவர்கள் மேற்கொள்கின்றார்கள்.

தமிழர் தங்கள் உரிமைகளுக்காக இரத்தம் சிந்தி, பல்லாயிரக்கணக்கில் உயிர்களைத் தியாகம் செய்து, உடைமைகள், சொத்துக்களை இழந்து, உயிர்ப் போராட்டம் நடத்தியபோது அவர்களுடன் சேர்ந்து தங்கள் உரிமைக்குக் குரல் கொடுக்க மறந்தவர்கள்.

தமிழரின் போராட்டத்தை நசுக்கும் சக்திகளுடன் கூடிக்குலாவி, அற்ப சொற்ப சலுகைகளுக்காக அணி மாறி நின்றவர்கள் -

இப்போது தியாகப் போராட்டத்தின் பயனாக - அமைதி வழியில் - தீர்வு கிடைக்க வாய்ப்பு ஏற்படுகின்றபோது, தங்கள் உரிமை என்று பேசி அதனைக் குழப்ப முனைகிறார்கள்.

போராட்டம் செய்ய வராதவர்கள் - போராட்டத்துக்கு எதிரான சக்திகளுடன் கைகோர்த்து நின்றவர்கள் - போராட்டத்தை அழிக்கத் துணைபோனவர்கள் - இன்று போராட்டத்தின் விளைவாகக் கிடைக்கப் போகும் தீர்வில் மட்டும் உரிமைப் பங்கு கேட்டு வந்து நிற்கின்றார்கள்.

சரி. நடந்தவை நடந்தவையாகட்டும். அவர்களும் தமிழ் பேசும் மக்களே என்ற அடிப்படையில் முஸ்லிம்களையும் அரவணைத்துக் கொண்டு - அவர்களின் அடிப்படை உரிமை மற்றும் அபிலாசைகளையும் மதித்து நிறைவு செய்யும் ஒரு தீர்வுக்காகச் செயற்பட தமிழர்கள் தயாராகி நிற்கின்றனர்.

ஆனால், தமிழரின் இந்தத் தாராள மனப்பாங்கையும் புறம் ஒதுக்கிவிட்டு துள்ளிக் குதிப்பதில் முஸ்லிம்களின் தலைமை துடியாய் இருப்பதாகத் தெரிகின்றது.

இது நல்லதற்கல்ல. முஸ்லிம் தலைமை பொறுப்புடன் - யதார்த்தப் புறச் சூழ்நிலைகளின் ஆழ அகலத்தை உணர்ந்து - நிதானத்துடன் செயற்படுவது நல்லது.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்தக் கட்டத்தில் ஏற்படக்கூடிய சிறு சறுக்கலும் சரித்திரத்தையே மீள முடியாத ஒரு திசைக்கு மாற்றிவிடும். அத்தகைய ஆபத்து நிலைமையை முஸ்லிம்களின் தலைமை உய்த்துணர வேண்டிய இக்கட்டான காலகட்டம் இதுவாகும்.

# ஆயிரம் ரூபா கள்ள நோட்டு தாராளமாகப் புழக்கத்தில்!

## பொதுமக்கள் எச்சரிக்கப்படுகின்றனர்

யாழ்ப்பாணம்,பெப்.2

குடாநாட்டினுள் ஆயிரம் ரூபா கள்ள நோட்டுகள் தாராளமாக புழக்கத்திற்கு வந்திருக்கின்றன என்று பொதுமக்கள் எச்சரிக்கப்படுகின்றனர்.

திருநெல்வேலி, பரமேஸ்வராச்சந்திப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையமொன்றுக்கு கொடுக்கப்பட்ட பணத்தில் ஆயிரம் ரூபா கள்ளநோட்டு ஒன்று இருந்ததை அந்த வர்த்தக நிலைய உரிமையாளர் பின்னர் கண்டுபிடித்தார். சாதாரண பார்வைக்கு வித்தியாசம் தெரியாத வகையில் இந்த கள்ள நோட்டு வடிவமைக்கப்பட்டிருந்தது.

ஏ-9 வீதி திறந்த பின்னர் குடாநாட்டுக்குள் புழங்கத் தொடங்கியுள்ள கள்ள நோட்டுக்கள் குறித்து வங்கி அதிகாரி ஒருவரிடம் கேட்ட போது அவர் தெரிவித்ததாவது:-

நல்ல நோட்டுக்கள் பிரத்தியேகத் தாளில் அச்சிடப்படுவதால் கசங்கினாலும் சேதமின்றி பழைய நிலையை அடையும். ஆனால், கள்ளநோட்டுக்கள் கசக்கப்படும்போது சேதமடையும். நல்ல நோட்டுகள் சற்று மொடமொடப்புடன் இருக்கும். தவிர நோட்டின் நெடுக்குமுகமாக உள்ள பாதுகாப்புக்கோடு மினுமினுப்புடன் காணப்படும். இந்த மினுமினுப்பு அழியாதது. ஆனால், கள்ள நோட்டில் மினுமினுப்பு இருக்காது. அப்படியே இருந்தாலும் அழிந்து விடக்கூடியதாக இருக்கும்.

உண்மையான நோட்டை வெளிச்சத்தில் தூக்கிப் பிடித்துப் பார்த்தால் வெள்ளைப் பகுதியில் வாளேந்திய சிங்கத்தின் படம் நீர் வண்ணத்தில் தெரியும். இது தொடர்பாக அறிய, பொதுமக்களுக்கு உதவ வங்கிகள் தயாராக உள்ளன.

ஆயிரம் ரூபாவில் மட்டுமன்றி மற்றைய நோட்டுகளிலும் கூட கள்ள நோட்டுகள் புழக்கத்தில் இருக்கலாம்.

பொதுமக்களின் விழிப்புணர்ச்சியாலேயே கள்ளநோட்டுகளை ஒழிக்கமுடியும்.

பெரும்பாலும் கட்டுகளாக வழங்கப்படும் பணத்தில் கள்ள நோட்டுகள் இருக்க அதிக சந்தர்ப்பங்கள் உள்ளன.

வர்த்தக நிலையங்களில் சனநெருக்கடியுள்ளதையும் சிறுவர்கள், அனுபவமற்றவர்கள் பணக்கொடுக்கல் வாங்கல்களைக் கவனிப்பதையும் கள்ளநோட்டுக் கும்பல்கள் சாதகமாகப் பயன்படுத்துகின்றன.

முன்பின் அறிமுகமற்றவர்கள் நோட்டுக்களை சில்லறையாக மாற்றித்தரக் கோருமிடத்தில் மக்கள் மிக அவதானமாக இருக்கவேண்டும்.

இதைத்தவிர, மதுபானச்சாலைகள், திருவிழாக்கள் போன்ற சனநடமாட்டம் அதிகமுள்ள இடங்களில் கள்ள நோட்டுக்கள் அதிகம் புழக்கத்தில் விடப்படவும் வாய்ப்புக்கள் அதிகமுண்டு.

ஆகவே, ரூபாநோட்டுக்களை கையாளும்போது அதிக கவனத்துடன் இருந்தால் நஷ்டங்களையோ, வீண் அபாவாதங்களையோ எதிர்கொள்ள நேரிடாது என்று தெரிவிக்கப்பட்டது.

# மீளக்குடியமரும் குடும்பங்களுக்கு ஒரு லட்சம் ரூபா கொடுப்பனவு

## புனர்வாழ்வு அமைச்சு செயலர் தகவல்

யாழ்ப்பாணம்,பெப்.2

குடாநாட்டில் மீளக்குடியமரும் குடும்பங்களுக்கான கொடுப்பனவாக ஒரு லட்சம் ரூபா வழங்கப்படவிருக்கின்றது. இக் கொடுப்பனவில் முதற் கட்டமாக 25 ஆயிரம் ரூபா தற்சமயம் வழங்கப்படும்.

- இத்தகவலை வெளியிட்டார் புனர்வாழ்வு அகதிகள் மீள் குடியமர்வு அமைச்சுச்செயலாளர் கே.ஜெயரத்தினம்.

யாழ்.செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இப்படிக்கூறினார்.

அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் நடந்த கூட்டத்தில் வடக்கு - கிழக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.ரங்கராஜன், புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சின் மேலதிக செயலாளர் எஸ்.குமாரதாஸன், விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட நிர்வாகப் பொறுப்பாளர் விஜிதரன், மாநகர முதல்வர் செ.கந்தையன், யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் எஸ்.சதுர்முகம் மற்றும் பிரதேச செயலர்கள், திணைக்களத் தலைவர்கள், செயலக அதிகாரிகள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

செயலாளர் ஜெயரத்தினம் பேசுகையில் மேலும் கூறியதாவது:-

யாழ்.மாவட்டத்தின் புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் மீள் குடியமர்வு ஆகியவற்றுக்கென அரசு 70 கோடி ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது. புனர்வாழ்வுப் பணிகளை மேற்கொள்ள அரசிடம் எமது அமைச்சு 3 ஆயிரம் கோடி ரூபாவை கேட்டிருந்தது. ஆனால், 222 கோடி ரூபா மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிதியின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டங்கள் எவை என்பது பற்றி அரச அதிபர், திணைக்களத்தலைவர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளிடம் கேட்டுள்ளோம். அவர்கள் தெரிவிக்கும் திட்டங்கள் பரிசீலிக்கப்பட்டு உடன் மேற்கொள்ளவேண்டிய விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படும்.

மீளக்குடியமர்ந்து வரும் மக்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு உலக வங்கியிடம் இருந்து ஆலோசனை கேட்டுள்ளோம். இதன் படி 10 கோடி அமெரிக்க டொலர்களை புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கு வழங்க உலக வங்கி ஒப்புக்கொண்டுள்ளது. ஐரோப்பிய ஒன்றியமும் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு வீடுகளை அமைத்துக்கொடுப்பதற்கும் சேதமடைந்த வீடுகளை புனரமைத்துக் கொடுக்கவும் முன்வந்துள்ளது.

இனிவரும் காலங்களில் புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகள் 'சிரான்' அலுவலகத்தின் ஊடாகவே மேற்கொள்ளப்பட உள்ளதால் எமது அமைச்சினால் பெருமளவு நிதி ஒதுக்கப்படமாட்டாது. ஆயினும் எமது அமைச்சுக்கு கிடைக்கும் நிதியின் மூலம் மீள் குடியமர்வுக் கொடுப்பனவு மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கான நஷ்டஈட்டுக் கொடுப்பனவு ஆகியவற்றிற்கே முன்னுரிமை வழங்கப்படவுள்ளது. எந்தக் காரணம் கொண்டும் யாழ். குடாநாட்டு மக்களுக்கு வழங்கப்படுகின்ற உலர் உணவு நிவாரணங்கள் நிறுத்தப்படமாட்டாது - என்றார்.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி தனது உரையில் தெரிவித்ததாவது:-

அரசில் அங்கம்வகிக்கின்ற அமைச்சர்கள் பலரும் இங்கு வந்து செல்கிறார்களே தவிர எதையும் உருப்படியாக எமது மக்களுக்குச் செய்வதில்லை. இவ்வாறானவர்கள் இங்கு வருவதைவிட வராதிருப்பதே மேல்.

உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் எமது மக்கள் தமது சொந்த இடங்களில் குடியமர்வதற்கு படையினர் தடை விதித்து வருகின்றனர். இது விடயம் தொடர்பாக புனர்வாழ்வு அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சு ஏன் எதுவித நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை?

மக்களின் மீள்குடியமர்வுக்கு உயர் பாதுகாப்பு வலயம் பெரும் தடையாக உள்ளது. இது உடனடியாக அகற்றப்பட வேண்டும் - என்றார். இல்லையேல் பலாத்காரமாக எங்கள் வீடுகளில் நாம் சென்று குடியேறவேண்டி வரும் - என்றார்.

(ம-5-10)

| நாளை |
| --- |
| தை 20 |
| திங்கட்கிழமை |
| (03.02.2003) |
| திதி : துதியை |
| மாலை 5.45 வரை. |
| நட்சத்திரம் : சதயம் |
| பின்னிரவு 4.36 வரை. |
| சுபநேரம் : 12.35 - 2.05 |
| ராகுகாலம் : 8.05 - 9.35 |
| (பழைய நேரப்படி) |

**உதய வாக்கு**

தாமதங்களுக்கு ஆபத்தான முடிவுகள் உண்டு.

- ஷேக்ஸ்பியா

# பனை அபிவிருத்திச்சபை ஊழியர் சுயவிருப்பில் ஓய்வு பெறலாம்

## புதிய திட்டம் அறிமுகம்

யாழ்ப்பாணம்,பெப்.2

பனை அபிவிருத்திச் சபையில் 10 வருடங்களுக்கு மேல் பணியாற்றிய உத்தியோகத்தர்கள் தமது சுயவிருப்பின் பேரில் ஓய்வு பெறும் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு சுயவிருப்பின் பேரில் ஓய்வு பெறுவோருக்கு அவர்களது பணித் தகைமைக்கு ஏற்றவாறு நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவு வழங்கப்படும் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இதன்படி அதிகாரிகள் தரத்தைச் சேர்ந்தவர்களுக்கு தலா 5 லட்சம் ரூபாவும், நடுத்தர உத்தியோகத்தர் ஒருவருக்கு நாலரை லட்சம் ரூபாவும், சாதாரண பணியாளர்களுக்கு 4 லட்சம் ரூபாவும் நஷ்டஈடாக வழங்கப்படும் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

சபையில் ஆள்க்குறைப்புச் செய்வதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக பனை அபிவிருத்திச் சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(எ-4)


# இதுவும் - சிறுவர் இம்சை தான்!!



ஒவ்வொரு பிள்ளையும் ஒவ்வொரு வகை திறமையைத் தம்மகத்தே கொண்டிருப்பார்கள்.

அந்த வீதத்தில் ஒவ்வொருவரும் தனித்துவமுடையவர்களாகவே இருக்கிறார்கள்.

உங்கள் பிள்ளைகளது திறமைகளை மட்டம் தட்டுவதும், அவர்களது கருத்துக்களைக் குறைத்து மதிப்பிடுவதும்கூட சிறுவர் துஷ்பிரயோகமாகவே கருதப்படுகிறது.

உங்கள் தொடர்புகளுக்கான எங்கள் முகவரி:
மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு,
அறை எண் - 30,
யாழ்.போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம். : T.P.:222- 2261 Ext.274

வெளியீட்டு அனுசரணை: SC (UK)
(சி-26302)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

SONY T.V., NATIONAL T.V. (29", 21",20",19",18",14") மற்றும் DECK, RADIO SET என்பன உத்தரவாதத்துடன் விற்பனைக்குண்டு. (அனைத்தும் ஜப்பான் நாட்டு தயாரிப்பு) தொடர்பு: இல.142, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (13875)

யாழ்ப்பாணம் நகருக்கு அருகிலுள்ள அமைதியான நல்ல சூழலில் வீடுகள் அமைந்த பகுதியில் நான்கு பரப்பில் வரவேற்பறைகள், 4 படுக்கை அறைகள், சமையலறை மற்றும் இடவசதி கொண்ட வீடு வெறும் நிலங்களுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: வி.இல.1761, C/o உதயன் யாழ்.(13828)

கைத்தொலைபேசி ஒன்று விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.284, நாவலர் வீதி (இராசாவின் தோட்ட வீதிச் சந்தி அருகில்), யாழ்ப்பாணம்.(13984)

யாழ்.முனியப்பர் கோயில் வீதியில் 41/2பரப்புக் காணியும் சுன்னாகம் கந்த ரோடையிலும் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.No.08-385595. (சி-26314)

நல்ல நிலையிலுள்ள Vespa LML 126-5000தொடரிலக்கமுடைய வெள்ளை நிற ஸ்கூட்டர் (எலக்ரோனிக்) விற்பனைக்குண்டு. தொடர்பு: ம.தணிகாசலம், ஏழாலை மேற்கு, சுன்னாகம். T.P. 0777-119579. (13916)

SONY 14", 21" T.V. விற்பனைக்கு உண்டு. 1415-12000/-, 2192-20000/-,2197-24000/-, G21-21000/-, Sony National Radio Cassette 3000/- Box கழற்றக் கூடியது. தொடர்பு: R.S. மகேஸ்வரன், கே.கே.எஸ்.வீதி, (சிறுவா பூங்கா RDS முன்பாக) மல்லாகம். (13978)

நல்ல நிலையில் வைத்தியர் ஒருவரின் பாவனையிலுள்ள Chaly மோட்டார் சைக்கிளும் சிங்கர் தையல் மெசினும் (England) விற்பனைக்குண்டு. தொடர்பு: 70(34), கோயில் வீதி, யாழ்ப்பாணம். T.P.No.2225401. (13950)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்குண்டு. தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: சிவா, இராமலிங்கம் வீதி, முடமாவடி, திருநெல்வேலி கிழக்கு, (முடமாவடி சந்திக்கும் பூங்கனிச் சோலைக்கும் இடையில்). (13922)

Prima Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி சுத்தம் செய்து உங்களுக்குத் தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை) தொடர்பு: (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி நல்லூர். (13977)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler குஞ்சுகள், அதி விசேட Prima பேட்டுக் குஞ்சுகள். 06-02-2003 அன்று விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்யவும். தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (13783)

## காணி தேவை

முகமாலையிலிருந்து இயக்கச்சி வரை A-9 வீதியில் அல்லது அண்மித்த பகுதியில் தென்னந்தோட்டம் அல்லது ஏற்ற வெற்றுக்காணி உடன் தேவை (அல்லது பரந்தன் முல்லைத் தீவு வீதியை அண்மித்த தேவிபுரம் வள்ளிபுனம் பகுதியும் விரும்பத்தக்கது). தொடர்பு: மா.கிருஷ்ணர் (அன்றி அப்பா), பட்டின சபை வீதி, சங்கானை. (13779)

## மணமகள் தேவை

கிறிஸ்தவ கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, கொழும்பு அரச வைத்திய சாலையில் பணிபுரியும், 29 வயது, அத்த நட்சத்திர, M.B.B.S. டாக்டருக்கு அழகிய, படித்த மணமகள் தேவை. இந்துக்களும் விரும்பப்படுவர். தொடர்பு: 383/7, நாவலர் லேன், ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (13985)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, கொழும்பிலுள்ள பிரபல வர்த்தக நிறுவனத்தில் மேற்பார்வையாளராகக் கடமையாற்றும், 35 வயது மணமகனுக்கு ஓரளவு கல்வியும் நல்லொழுக்கமும் நிறைந்த மணமகள் தேவை. தொடர்பு: விளம்பர இல.1760, C/o உதயன், யாழ்ப்பாணம். (13809)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

பொமேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.6, மதவடி ஒழுங்கை, திருநெல்வேலி. (13991)

## தவறிவிட்டது:

செல்லன் செல்லம்மா என்பவரின் 447961814V இலக்கம் கொண்ட தேசிய அடையாள அட்டை நாவற்குழியில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு வரும்வழியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் தயவு செய்து கொடுத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். தொடர்பு: பொ.பாஸ்கர், நாவற்குழி வடக்கு, செல்வநகர், கைதடி. (13943)

## கண்ணீர் அஞ்சலி

எமது கலாசாலை இரண்டாம் வருட ஆரம்பநெறி B பிரிவைச் சேர்ந்த ஆசிரிய மாணவி திருமதி பி.தவராணி அவர்களின் தந்தையார்

**வை.கந்தசாமி**

அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலைச் சமூகத்தினர்.

(13971)


# றிச்சாட் ரூ.200,000/=

**அப்பியாசப் புத்தகங்கள்**

## மாபெரும் மாணவர் நலத் திட்டம்

நீங்கள் செய்யவேண்டியது இவ்வளவுதான்! றிச்சாட் அப்பியாசப் புத்தகங்களோடு கிடைக்கும் கூப்பனை நிரப்பிக் கீழே காணப்படும் எந்தவொரு றிச்சாட் வர்த்தகச் சின்னங்கள் 3 உடன் அனுப்புவது மாத்திரமே.





விரையுங்கள்!
இப்போதே நுழையுங்கள்!

(1) முதலாம் பரிசு :- பணமாக ரூ. 10,000/= ரூ.5,000/= பெறுமதியான றிச்சாட் தயாரிப்புகள் றிச்சாட் தயாரிப்புகளுக்கான ஓராண்டு டிஸ்கவுன்ட் வவுச்சர் } 15,000/= +

(2) இரண்டாம் பரிசு :- பணமாக ரூ. 5,000/= ரூ.3,000/= பெறுமதியான றிச்சாட் தயாரிப்புகள் றிச்சாட் தயாரிப்புகளுக்கான ஓராண்டு டிஸ்கவுன்ட் வவுச்சர் } 8,000/= +

(3) மூன்றாம் பரிசு :- பணமாக ரூ. 3,000/= ரூ.2,000/= பெறுமதியான றிச்சாட் தயாரிப்புகள் றிச்சாட் தயாரிப்புகளுக்கான ஓராண்டு டிஸ்கவுன்ட் வவுச்சர் } 5,000/= +

(4) நான்காம் பரிசு :- பணமாக ரூ. 2,000/= ரூ.1,000/= பெறுமதியான றிச்சாட் தயாரிப்புகள் றிச்சாட் தயாரிப்புகளுக்கான ஓராண்டு டிஸ்கவுன்ட் வவுச்சர் } 3,000/= +

போனஸ் பரிசு :- ஆகக்கூடுதலான றிச்சாட் வர்த்தகச் சின்னங்கள் அனுப்புபவருக்கு பணமாக ரூ.10,000/= உடன் ரூ.5,000/= பெறுமதியான அப்பியாசப் புத்தகங்கள் } 15,000/= +

ஆறுதல் பரிசுகள் :- பணமாக ரூபா 1,000/= வீதம் 150 பேருக்கு பணப்பரிசுகள் } (150,000/=) +

**றிச்சாட் அப்பியாசப் புத்தகம் — கூப்பன்**

கூப்பன்களை அனுப்பவேண்டிய கடைசித் திகதி 2003 பெப்ரவரி 15 வரை மட்டுமே.

Richard றிச்சாட்

**மாபெரும் மாணவர் நலத் திட்டம்** (ரூ.200.000/=)

றிச்சாட் அப்பியாசப் புத்தகங்கள் வெள்ளை வெளிறற்ற தாளிலேயே தயாராகின்றன.

பெயர் :- ..................

முகவரி:- ..................

..................

பாடசாலையும் முகவரியும்:- ..................

தரம் :- .................. வயது:- ..................

உங்கள் விற்பனையாளரது பெயர் முகவரி (இருப்பின் மாத்திரம்)

மேலதிக கூப்பன்கள் தேவையானால் கையால் தயாரித்த கூப்பன்களை அனுப்பலாம்.

றிச்சாட் அப்பியாசப் புத்தகங்கள் .................. தாளிலேயே தயாராகின்றன.

கையொப்பம்:- .................. திகதி:- ..................

- சகல கூப்பனோடும் றிச்சாட் அப்பியாசப் புத்தகம் அல்லது றிச்சாட் காகிதாதிகளில் காணப்படும் இதுபோன்ற எந்தவொரு வர்த்தகச் சின்னங்கள் 3ஐ வெட்டி அனுப்பவேண்டும்.
- இதில் கல்வி பயிலும் மாணவர் மட்டுமே நுழையலாம்.
- றிச்சாட் டிரேடிங் நிறுவனம், பதிபா விளம்பர நிறுவனம் சார்ந்த குடும்பத்தார் பங்குகொள்ளமுடியாது.
- நடுவர் குழுவின் முடிவே இறுதியானது.

றிச்சாட் அப்பியாசப் புத்தக

Richard Quality Stationery

Richard Quality Stationery

நீங்கள் அனுப்பும் கூப்பன்களைக் குலுக்குதல் மூலம் வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவர்.

கூப்பன் அனுப்ப கடைசித் திகதி

**2003 பெப்ரவரி 15 வரை மட்டுமே.**

கூப்பன்களை அனுப்பவேண்டிய முகவரி:

**றிச்சாட் மாணவர் நலத்திட்டம்**

**எஸ்.ஜே. அன்ட் பி ட்ரேட் ஏஜென்ஸி**

39, 3ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 021 2222549

உங்கள் பாடசாலைக்கும், விற்பனை நிலையத்துக்கும் பரிசுகள்

மேலதிக கூப்பன்கள் தேவையானால் கையால் தயாரித்த கூப்பன்களை அனுப்பலாம்.

(10822)

உ
சிவமயம்

# ருதுசோபன நன்னீராட்டுவிழா அழைப்பு

**அன்புடையீர்!**

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான சித்திரபானு வருஷம் தைமாதம் 20ஆம் நாள் நாளை (03.02.2003) திங்கட்கிழமை காலை 7.00 மணிதொடக்கம் 8.30 மணிவரையுள்ள (பழைய நேரம்) சுபமுகூர்த்தத்தில்

**மாதகல் பிரம்மஸ்ரீ கதிர்செல்லப்பாக் குருக்களின்** பௌத்திரியும் எமது ஏக புத்திரியுமாகிய திருநிறைசெல்வி

## கஜேந்தினிக்கு

ருதுசோபன மங்கள நன்னீராட்டு வைபவம் நடத்தப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டிருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சமேதராக வருகைதந்து செல்வியை ஆசீர்வதித்து வைபவத்தைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சுபமஸ்து

*மாதகல் கிழக்கு,*
*மாதகல்.*

தங்கள் நல்வரவை நாடும்:
**பிரம்மஸ்ரீ செ.நகுலேஸ்வரக் குருக்கள் - யாழரசி தம்பதிகள்.**

வரவேற்பாளர்கள்:
பிரதிஷ்டா சிரோன்மணி குடும்பத்தினர்,
சிவஸ்ரீ கதிர் செல்லப்பாக்குருக்கள் – *மாதகல்,*
சிவஸ்ரீ ப.இரகுநாத ஐயா குடும்பத்தினர் – *களபூமி, காரைநகர்.*

(13980)

**வண.பிதா தோமஸ் (அ.ம.தி.) அடிகளாரால் ஆரம்பித்து வைக்கப்பட்ட செபமாலைத்தாசர் சபையின்**

## பவள விழா

செபமாலைத்தாசர் சபையின் 75ஆவது ஆண்டு நிறைவின் பவளவிழாவை முன்னிட்டு அருள் ஆச்சிரமத்தில் இன்று (02.02.2003) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களின் தலைமையில் பவளவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

*அருள் ஆச்சிரமம்,*
*5, கோயில் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

- அதிபர்.

(C/26304)

## கண்ணீர் அஞ்சலி

வதிரி, கரவெட்டியைச் சேர்ந்த ஓய்வுபெற்ற அரச அலுவலரும், தன்னலம் கருதாத சமூக சேவையாளருமாகிய

### ஆறுமுகம் நடராஜா

அவர்கள் காலமான செய்தி அறிந்து மிகவும் துயரமடைகின்றேன். அன்னாரின் இழப்பால் துயரமடைந்திருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

*யாழ்.சாலை,*
*நுணாவில் மேற்கு,*
*சாவகச்சேரி.*

(13960)

எஸ்.ஆர்.மகேந்திரன்,
*முன்னாள் அதிபர்.*

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



உதயம்
15 - 12 - 1924

அஸ்தமனம்
03 - 01 - 2003

### அமரர் சவரி தேவசகாயம்

*அன்பும் அறமும் கொண்டு – எம்மை*
*பாசமாய் வழிநடத்தி – தாங்கள்*
*பார்போற்ற வாழ்ந்தீர்கள் – நாங்கள்*
*பாங்குடனே பிரார்த்திக்கின்றோம் - அடைக*
*சாந்தி உங்கள் ஆத்மாவென்றே*

இன்று (02.02.2003) ஞாயிற்றுக்கிழமை இவரது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்தில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*இல.367, 4ஆம் குறுக்குத்தெரு,*
*பருத்தித்துறை.* (13944)

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை.

## புலோலி பாடசாலை புனரமைப்புக்கு நிதி

புலோலி சைவப்பிரகாச வித்தியாலய கட்டடப் புனரமைப்புக்கென புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் வித்தியாலயத்தின் பழைய மாணவர்கள் ரூபா 60ஆயிரத்தை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

பருத்தித்துறை திருநாவலூர் சனசமூக நிலையம் ஊடாக மேற்படி நிதி வழங்கப்பட்டுள்ளது. பழைய மாணவர்களின் நிதியுதவியுடன் பாடசாலையில் கட்டடப் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகச் சனசமூக நிலையத் தலைவர் ச. செல்வராசா தெரிவித்தார். (எ-180)

## தொலைக்காட்சிப் பெட்டி திருட்டு!

சனசமூக நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த ரூபா 60 ஆயிரம் பெறுமதியான தொலைக்காட்சிப் பெட்டி இரவு வேளை திருட்டுப் போயுள்ளது.

இச்சம்பவம் கடந்த வாரம் பருத்தித்துறை - திருநாவலூர் நாவலர் சனசமூக நிலையத்தில் இடம்பெற்றுள்ளது.

சனசமூக நிலையத்தின் கூரையைப் பிரித்து உள்ளிறங்கிய திருடர்கள் தொலைக்காட்சிப் பெட்டியைத் திருடிச் சென்றுள்ளனர் எனப் பருத்தித்துறைப் பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (எ-180)

## சட்டவிரோத மின் பாவனை அதிகரிப்பு

இருபாலை கிழக்கு, வசந்தபுரம் கிராமப் பகுதியில் சட்டவிரோத மின் பாவனையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

இது குறித்து சம்பந்தப்பட்டவர்களுக்குப் பலமுறை அறிவித்தும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் -

சட்டவிரோத மின்பாவனை காரணமாக ஏற்படும் மின் விபத்துக்கள் அதிகரித்துச் செல்லும் நிலையில், இது தொடர்பாக உடன் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் -அப் பகுதி மக்கள் வேண்டுகோள்விடுத்துள்ளனர். (எ-9)

## அனுமதிப்பத்திரமின்றி மரக்குற்றி ஏற்றிவந்தோர் பொலீஸாரிடம் சிக்கினர்!

அனுமதிப்பத்திரம் இன்றி ஒரு தொகுதி மரக்குற்றிகளை லான்ட் மாஸ்ரரில் ஏற்றிவந்த இருவர் கோப்பாய் பொலீஸாரால் நேற்றுமுன்தினம் யாழ்.நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

மரக்குற்றிகளை ஏற்றிவந்த சமயம் கோப்பாய் பகுதியில் வைத்து கடந்த வியாழனன்று இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் இருவரையும் தலா 15 ஆயிரம் ரூபா ஆட்பிணையில் செல்ல அனுமதித்த நீதவான் இதனிக்னராஜா குறிப்பிட்ட மரக்குற்றிகளையும் லான்ட் மாஸ்ரரையும் மன்றில் ஒப்படைக்குமாறு பொலீஸாருக்கு உத்தரவு பிறப்பித்தார்.

தாவடி தெற்கைச் சேர்ந்த செல்லத்துரை ஜெகதாசன் இணுவில் மேற்கைச் சேர்ந்த அருளையா ஜீவதாசன் ஆகிய இருவருமே மன்றில் ஆயர் செய்யப்பட்டவர்களாவர்.

இது தொடர்பான வழக்கு விசாரணை எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (எ-10)

## முகவரி மாற்றம்

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்
தலைமைச் செயலகம்

**இல.74, பிறவுண் வீதி, நீராவியடியில் செயலாற்றி வந்த சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத் தலைமைச் செயலகம் 21.01.2003 தொடக்கம் யாழ். - பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தியில் இயங்கும் இந்துகலாசார அமைச்சு குருகுலத்தில் இனி செயலாற்றும் என அறியத்தருகின்றோம்.**

(13958)

பிரம்மஸ்ரீ கா.சந்திரசேகரசர்மா
பொதுச் செயலாளர்.

## சேவையால் உயர்ந்தோய் சிறப்புடன் வாழ்க!



திரு.
### சின்னையா சிவராஜா
(SLEAS)
*(ஓய்வுபெற்ற மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்)*

வளம் மிகுந்த நல்லறிஞர் மலிந்தே தோற்றும்
வடமராட்சி தனிலுதித்த வணிக மாணி
சிவராஜா நீயெனவே சிறப்பாய்ப் போற்ற
சிறுவர்க்கு ஆசானாய் அடி யெடுத்து
வட்டாரக் கல்வி யதி காரியாகி
கோட்டக் கல்விப் பணிப் பாளரானாய்
கடமைதனைக் கண்ணாகச் செய்த தாலே
யாழ்.வலயம் இரண்டின் பணிப் பாளரானாய்
சேவைதனில் ஓய்வுபெறும் வேளை தன்னில்
மேலதிக மாகாணக் (கல்விப்) பணிப் பாளராகி
பாரறியச் சேவை செய்த பண்பா வாழ்க!
பலவளமும் மேன் மேலும் பெற்று வாழ்க!
சீர்பெருகும் சிவராஜா குடும்பம் என்றும்
சிறப்புறவே பேசிடவே சிறந்து வாழ்க!

**யாழ்.மாவட்ட மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் மற்றும் வலயக் கல்விப் பணிப்பளர்களும், பதவிநிலை உத்தியோகத்தர்களும்.**

(C/26297)

## சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின் நன்றிப் பெருக்கு

20.01.2003இல் சர்வதேச இந்துமத குருபீடாதிபதி அதிவந்தனீய பிரம்மஸ்ரீ ஐ.மகேஸ்வரசிவாச்சாரியார் அவர்களின் ஆசியோடு இந்து சமய விவகார அமைச்சு எம்மிடம் கையளிக்கப்பட்ட அந்தண மாணவர்களுக்கான வேதசிவாகம குருகுல கலாசாலையைப் பெருமகிழ்வுடன் ஏற்றுப் புளகாங்கிதமடைகின்றோம். இக்குருகுலத்தைப் பாரிய பொருட்செலவில் அமைத்து, அதற்கு வேண்டிய சகல வசதிகளையும் உருவாக்கி செயலாற்றுகின்ற மாண்புமிகு இந்து விவகார அலுவல்கள் அமைச்சர் உயர்திரு.தி.மகேஸ்வரன் அவர்களுக்கும் இக்கட்டடத்தை அழகாகவும் விரைவாகவும் அமைத்துத் தந்த கட்டட நிர்மாணப் பொறியியலாளர் திரு.சண்முகநாதன் அவர்களுக்கும் கட்டடத்தைத் திறந்துவைத்த எதிர்க்கட்சித் தலைவருக்கும் இந்நிகழ்வில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இக்கட்டடத்தை நிர்மாணிப்பதற்குப் பல வழியிலும் உதவிய அரச அதிகாரிகளுக்கும் மற்றும் பிரமுகர் யாவருக்கும் எமது உளங்கனிந்த நன்றிகள். மேலும் அமைச்சின் செயலாளர் திரு.பரமேஸ்வரன் அவர்களுக்கும், பணிப்பாளர், உதவிப்பணிப்பாளர் ஆகியோருக்கும் விழாவைச் சிறப்புற நடத்துவதற்கு நிதி உதவி அளித்த எமது அமைப்பின் அந்தணப் பெருமக்களுக்கும், யாழ்.பல்கலைக் கழகத் துணைவேந்தர், கலைப்பீடாதிபதி மற்றும் பேராசிரியர்கள், மேலதிக அரச அதிபர், நல்லைக்குருமணி, அருட்கவி , சிவாச்சாரியப் பெருந்தகைகள், சமயப் பெரியோர்கள், நலன் விரும்பிகள், இவ்விழா செய்திகளை அழகுறத் தந்த ஊடகவியலாளர்களும், ஒளி/ஒலி அரங்கு, அமைப்பாளர்கள், வீதி ஒழுங்குகளை நெறிப்படுத்திய பொலீஸ், பாதுகாப்புப் படையினருக்கும் குறிப்பாக அன்றையதினம் மதியபோசனத்துக்குத் தேவையான பொருள்களைத் தந்துதவிய திரு.கங்கைவேணியன அவர்களுக்கும் எமது அமைப்பின் சார்பில் அனைவருக்கும்

நன்றி நன்றி!! நன்றிகள் பல!!!
(நன்றி மறப்பது நன்றன்று)

**சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம், (தலைமைச் செயலயம்) யாழ்ப்பாணம்.**

(13959)

உ
ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நம
ஸ்ரீ காமாட்சி அம்பாள் துணை

## திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் சுபமங்களகரமான சித்திரபானு வருடம் தைத்திங்கள் 20ஆம் நாள் நாளை (03.02.2003) திங்கட்கிழமை. காலை 9.44 மணிமுதல் 10.38 மணிவரையுள்ள சதய நட்சத்திரமும் துதியை திதியும் மீனலக்கினமும். சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த சுபவேளையில்.

எமது ஏகபுதல்வன் திருவளர் செல்வன்
**ஆனந்**
*(மக்கள் வங்கி, யாழ். ஸ்ரான்லி வீதிக்கிளை)*
**அவர்களுக்கும்**

எமது புத்திரி திருவளர் செல்வி
**சுகந்தினி**
*(யாழ். பல்கலைக்கழகம்)*
**அவர்களுக்கும்**

இறைவன் திருவருள் துணைகொண்டு யாழ்ப்பாணம், நாச்சிமார் கோயில் வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலய திருமண மண்டபத்தில் திருமாங்கல்ய தாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

*வரவேற்புபசாரம்:* **04.02.2003 செவ்வாய்க்கிழமை பி.ப.4.00** மணியளவில் மணமகன் இல்லத்தில் நடைபெறும்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்:

திரு.திருமதி தெய்வேந்திரம் தம்பதிகள்
மீனாட்சி அம்மன் கோவில் வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி,
(இந்திரன் நகைமாடம், யாழ். - சாவகச்சேரி),
971/1, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

திரு.திருமதி தெட்சணாமூர்த்தி தம்பதிகள்
551, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(இரு வீட்டார் அழைப்பு)

(13940)

# ஆனந்தக் கண்ணீர் சொரிய வைத்த பிஞ்சுக் கால்களின் தமிழ்ச் சலங்கை

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரும் தற்போது நியூயோர்க்கில் வசித்து வருபவருமான திரு.திருமதி தேவதாசன் தம்பதியின் இளைய புத்ரி இராதிக்கா தேவதாசனின் (ஐந்து வயது) பரத நாட்டிய அரங்கேற்றம் குறித்த தொகுப்பு இது.



இராதிக்கா தேவதாசன்

ஆடல் அரங்கில் அகவை ஐந்தில் உலக வரலாறு ஒன்று திரும்பவும் கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி நியூயோர்க் நகரிலே படைக்கப்பட்டது. இரு வருடங்களுக்கு முன் அதே வயதில் அதே மண்டபத்தில் அரங்கேறி உலக வரலாறு படைத்த தேவிக்கா தேவதாசனின் தங்கையும், "ஆலம் விழுதுகள்" 'மாம்பூக்கள்' ஆகிய நூல்களின் ஆசிரியரும் 'மாம்பழமும், கலையகம்' என்னும் நடனப் பள்ளியின் நிறுவுனரும், ஆசிரியருமாகிய மதிவதனி பெற்றடுத்த இனிய இளைய மகள் இராதிக்கா தேவதாசனே இவ்வரலாற்றைப் படைத்தவராவார். இவர் திருமதி சந்திரக்கலா இராகவனின் மாணவி.




தனது தமக்கைக்கோ வேறு எவர்க்கோ தான் எவ்விதத்திலும் இளைத்தவளல்ல என்பதை ஸ்ரீ விநாயகர் கோயில் அழகு நிறை கலையரங்கில் அன்றைய நாள் தன் தளிர்க் கால்களில் தமிழ்ச் சலங்கை குலுங்க தனது ஆடலைத் தானே துய்த்து மகிழ்ந்த வண்ணம் ஆடி மக்கள் நிறைந்து வழிந்த அம்மண்டபத்திலே எவ்வித ஐயத்திற்கும் இடமின்றி இராதிக்கா அனைவருக்கும் எண்பித்தாள்.

திரையுலகிலும் நாட்டிய உலகிலும் அன்று கோலோச்சியவரும் அவளது தாய் மதிவதனியின் நடன ஆசிரியருமாக விளங்கும் 'உலக நாட்டிய பேரொளி' திருமதி பத்மினி இராமச்சந்திரன் தலைமையில் திரு. திருமதி சண் நாகேந்திரா சிறப்பு விருந்தினராக விளங்க இறை வழிபாட்டுடன் அரங்கேற்றம் ஆரம்பமாகியது. தாயின் உணர்ச்சிமிக்க வரவேற்புரையைத் தொடர்ந்து 'மயில் மாமகள்' தேவிக்கா தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் தன் தங்கையை பெருமையுடன் அவையோர்க்கு அறிமுகம் செய்து முன்னிலைப்படுத்தி வைக்க மணிச்சலங்கை குலுங்க ஆடி வந்தாள் மலர்க்குழந்தை இராதிக்கா.

வியத்தகு முகபாவம் உணர்ச்சிகளை அள்ளி வீச அவளது குருத்தொத்த சித்திரக் கைகள் கண்களோடு இணைந்து கதைசொல்ல, விதிமுறை தவறாது, இழையும் பிசகாது, தாளக்கட்டு குலையாது, கட்டுப்பாடு கலையாது, தேர்ச்சிதிறம் படைத்தவளாக, வடிவியலுக்கிணங்க, முகத்தில் அழகு பொங்க, அகத்தில் அமைதி தங்க தெய்வத் திருத்தாய் மாதா அமிர்தானந்தமயிதேவியின் (அம்மாச்சி) மலரடிகளில் தன் அரங்கேற்றத்தைக் காணிக்கையாக்கி புன்னகை சிந்திய வண்ணம் ஆடினாள்.

இதைப் பார்த்து மகிழ்ந்த பலரது கண்கள் நீரைச் சொரிந்தன; வேறு பலர் உணர்வலைகளுக்கு முற்றிலும ஆட்பட்டவர்களாய் வியப்பால் விழிகள விரிய அவளது ஆடல் அழகைக் கலையுணர்வுடன் சுவைத்து மகிழ்ந்தனர். இந்நிகழ்ச்சியின் பல்வேறு கடடங்களில் மக்கள் கூட்டம் மகிழ்ச்சி தாளாது உரத்த கரவொலி எழுப்பி அவளது ஆடற்றிறனைப் பாராட்டிய காட்சி மெய்சிலிர்க்க வைத்தது.

இராதிக்காவுக்கு 'சலங்கை அரசி' என்ற சிறப்புப் பட்டத்தை அளித்து உரையாற்றிய திருமதி பத்மினி இராமச்சந்திரன், தேவிக்கா, இராதிக்கா சகோதிரிகள் சாதாரண குழந்தைகள் அல்லர். அவர்கள் தெய்வீகக் குழந்தைகள்" என்று புகழாரம் சூடக் கேட்டதும் அவையோர் தம் கருத்தொற்றுமையைத் தெரிவிக்க பலத்த கரவொலி எழுப்பினர். மேலும் அவர் தனது வாழ்த்துச் செய்தியில் "பரத நாட்டியத்தைப் பற்றி நன்கு அறிந்தவர்கள் அரங்கேற்றம் காண்பதற்கு வளர்ந்தவர்களே எத்தகைய திறமை உள்ள உறுதி, கட்டுப்பாடு, கடின உழைப்பு, ஆற்றல் ஆகிய குணநலன்களைக் கொண்டிருக்க வேண்டும் என பதை நன்கு உணர்வர். எனவே, தமகையும் தங்கையும் பரதக்கலை பயின்று அகவை ஐந்தில் அரங்கேறி அடைந்த செயல் வெற்றி இத்துறையைச் சார்ந்த வல்லுநர்களையும், கலைத் தொழில்களையும் கட்டாயமாக சிந்தை தடுமாற வைக்கும் என்றும் குறிப்பிட்டார்.

பல்வேறு பேரறிஞர்களும், பெரியோர்களும் இராதிக்காவைப் பாராட்டி அனுப்பியிருந்த வாழ்த்துச் செய்திகள் அவையோர் முன்னிலையில் படிககப்பட்டன. தமிழ்கூறும் நல்லுலகில் பெயர்பெற்ற ஆடற்கலைஞரும் பேரறிஞருமான பத்மஸ்ரீ முனைவர் (செல்வி) பத்மா சுப்பிரமணியம், ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி பீடத்தின் தலைவர் தெய்வத்திரு சைதன்யானந்தா (கரன் ஐயா), தனிப்பெரும் தமிழர் தலைவர் மேதகு பழ நெடுமாறன், உலகத் தமிழர் உரிமைக் குரல் வை.கோபாலசாமி (இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்), நந்தன் ஆசிரியர், மாண்புமிகு அருணாசலம் போன்றோர் அனுப்பியிருந்த செய்திகள் குறிப்பிடத்தக்கன.

தமிழீழ அரசவைக் கவிஞர் மான மிகு. காசியானந்தன் அவர்கள் அன்புடன் "இராதிக்கா ஆடுகின்றாள்" என்ற தலைப்பில் எழுதி அனுப்பிய கவிதையும் இந்நிகழ்ச்சிக்கென ஒலிப்பதிவு செய்து அனுப்பிவைத்த சிறப்புரையும் தமிழ் நெஞ்சங்களை மிகவும் கவர்ந்தன. கலைகள் பிறந்த தமிழீழத்தின் கருவில் பிறந்தவள் இராதிக்கா. தோற்றத்தில் சின்னஞ்சிறியவளாக இருந்தாலும் ஆற்றலில் அவள் விலை மதிப்பில்லா முத்து - தமிழீழ மண்ணின் சொத்து. முகையாக இருக்கிறாள். ஆனாலும், மலராகத் திகழ்கிறாள். பிறையாக இருக்கிறாள் ஆனாலும் முழு நிலவாய் ஒளிர்கிறாள். இராதிக்காவின் முத்திரை காட்டும் சித்திரக் கைகளை நான் வாழ்த்துகிறேன். அவள் விழி இரண்டிலும் பாயும் ஒளி அழகினை நாட்டியத்தின் மொழி அழகினை, நான் வாழ்த்துகிறேன். பஞ்சுக் கால்களில் சலங்கை கொஞ்ச ஆடும் பிஞ்சுத் தமிழ்மகள் இராதிக்காவை நெஞ்சம் மகிழ மீண்டும் மீண்டும் வாழ்த்துகிறேன்.

ஆடு மகளே ஆடு! அமையட்டும் தமிழீழ நாடு! என்று தன் நெஞ்சும் நினைவும் இனிக்க வாழ்த்தி இராதிககாவுக்கும் அவள் தமக்கை தேவிக்காவுக்கும் இருக்கும் சிறப்பு உலக நாட்டியப்பேரொளி திருமதி பத்மினி இராமச்சந்திரனின் வாழ்த்துப் பெற்றவர்களாக அந்த மாமேதையின் வழிவந்தவர்களாக இவர்கள் இருப்பதுதான். கதிரவனின் ஒளிபட்ட காலைப் பூக்கள் இவர்கள். கலை வல்ல சிற்பியின் உளிபட்ட அழகுச் சிலைகள்" என வாயினிக்கக் கூறுகிறார்.



தேவிக்கா தேவதாசன்

ஸ்ரீவிநாயகர் கோயில் அறங்காப்பாளர் குழுத்தலைவியும் மருத்துவருமாகிய திருமதி உமாமைசூரேக்கர் அவளது ஆடற்றிறனைக் கண்டு வியந்து" இவளது ஆடலைக் கண்டவர் மட்டுமே நம்ப முடியும்" என்று அவளுக்குப் புகழ்மாலை சூட்டினார்.

உலகத் தமிழர் பேரவையைச் சேர்ந்த சட்டத்தரணி திரு.உருத்திரக்குமார் உரையாற்றி ஒரு சிலையையும் அவ்வியக்கத்தின் பெயரால் அன்பளிப்பாக வழங்கினார். தமிழீழ எழுபுகழ் தேவிக்கா, இராதிக்கா சகோதரிகள் என விழித்து ஈழத்தமிழர் பெயரால் அவர்கள் கலைத் திறனைப் பாராட்டி திரு. யேசுதாசன் அவர்கள் ஒரு பதக்கப் பலகையையும் அவர்களுக்கு வழங்கினார்.

**செபமாலை யேசுராசா**

இறுதியில் இராதிக்காவின் அன்புத் தந்தை தனது நன்றியுரையில் தன் இரு பிள்ளைகளும் தமது கலைத் திறனாலும் பேரன்பினாலும் பெற்றோருக்கு அளித்த பெருமைக்கு அவர்களை கட்டி அணைத்து நன்றி கூறியபோது கலங்காத கண்களும் கலங்கின. ஈற்றில் சுவையான இரவுணவு அனைவருக்கும் வழங்கப்பட விழா இனிது முடிவுற்றது.

# வீதிகளில் விழுந்தெழுவது யாழ். மக்களின் தலைவிதி

ஒரு காலத்தில் தொலைபேசி ஆடம்பரப்பொருளாக இருந்தது. இன்று அத்தியாவசியப் பொருளாகிவிட்டது. அதுவும் குடும்பத்தில் ஒருவராவது வெளிநாட்டில் உள்ள நிலையில் யாழ். மக்களுக்கு தொலைபேசி அத்தியாவசியமானதொன்றாகிவிட்டது.

யாழ்.மக்களின் தொலைபேசித் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்குடன் ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனம் தொலைபேசிக் கேபிள்களை நிலத்தின்கீழாகவும் தொலைபேசித்தூண்கள் (கம்பங்கள்) வாயிலாகவும் வழங்கும் பணியில் இரவுபகலாக ஈடுபட்டு வருகிறது. ஸ்ரீலங்கா ரெலிகொமின் சேவை பாராட்டுக்குரியது.




தொலைத்தொடர்புக் கேபிள்களைப் பொருத்துவதற்குத் தடையாகவுள்ள மரங்களின் கொப்புகளை ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனம் தறிக்கும் வேலையிலும் ஈடுபட்டுள்ளது. தறித்த மரக் கொப்புகளை அப்புறப் படுத்துவது ரெலிகொம்மின் வேலையல்லவே. தொலைபேசி இணைப்பு வழங்குவது மட்டும்தான் ரெலிகொம்மின் வேலை. ரெலிகொம் நிறுவனம் தறித்த மரக்கொப்புகள், முட்கொப்புகள் போன்றன வீதியில் கிடந்து போக்குவரத்திற்கு இடையூறு விளைவித்தால் அதற்கு ரெலிகொம் பொறுப பல்ல என்பதை யாழ்.மக்கள் அறிந்து கொள்ளவேண்டும்.

ரெலிகொம் நிறுவனம் தறித்த மரக்கொப்புகளை மாநகரசபையாலும் உடனடியாக அப்புறப்படுத்த முடியாது காரணம், மாநகரசபையின் உழவு இயந்திரம் இரண்டு வாரங்களுக்கொரு முறையோ வாரமொருமுறையோதான் அந்த வீதியை எட்டிப்பார்க்கும். அப்படி சிலவேளை அந்த வீதிக்கு வந்தாலும் ரெலிகொம் நிறுவனம் தறித்து வழ்த்திய மரக்கொப்புகள் அவ்வளவையும் ஓர் உழவு இயந்திரத்தில் ஏற்ற முடியாது. எனவே, பொதுமக்கள்தான இவற்றையெல்லம் சகித்துக்கொண்டு இலாவகமாக முட்கொப்புகளில் வீழ்ந்து விடாமல் ஏனைய வாகனங்களுக்கு வழிவிட்டு போக்குவரத்து செய்யப் பழகிக்கொள்ளவேண்டும்.

இதேபோல் நிலத்தின் கிழான கேபிள் இணைக்கும் வேலையிலும் ரெலிகொம் நிறுவனம் இரவு பகலாக உழைத்துவருகிறது. ரெலிகொம்மின் சேவையை வார்த்தைகளில் வர்ணிக்க முடியாது. யாழ்ப்பாண நகரத்தின் பிரதான வீதிகள் யாவற்றிலும் நிலத்தின் கீழ் கிடங்குதோண்டி கேபிள் அமைக்கும் பணியில் ரெலிகொம் நிறுவனம் ஈடுபட்டுள்ளது. நிலத்தில் தொலைபேசிக் கேபிளைப் புதைத்த பின் வெட்டிய கிடங்கை ஒழுங்காக மூடிச் சீர்செய்ய வேண்டியது ரெலிகொம்மின் வேலையல்லவே. எனவே, வீதி பிட்டியாக இருந்தாலென்ன பள்ளமாக இருந்தாலென்ன அதைச் சீராக்கவேண்டியது மாநகரசபையின் வேலைதான். மாநகரசபையாலும் இந்த பள்ளந்திட்டிகளைச் சீர்செய்ய முடியாது. ஏனென்றால் மாநகரசபையிடம் நிதி இல்லை. அவர்கள் வந்த நிதியையும் செலவழிக்காமல் திருப்பி அனுப்பிவிட்டார்கள் என்று பத்திரிகைகளில் செய்திவந்தது.

யாழ்.மக்கள் சகிப்புத் தன்மை மிகுந்தவர்கள். எனவே அவர்கள்தான் வீதிகளுக்கேற்றவாறு தமது வாகனங்களைச் செலுத்தப்பழகிக் கொள்ள வேண்டும். கச்சேரியடியால் செல்வோர் பிட்டிக்கு மேலாலும் ஆஸ்பத்திரி வீதியால் செல்வோர் பள்ளத்திற்குள் விட்டும் தமது வாகனங்களைச் செலுத்தப் பயிற்சி பெற்றுக்கொள்ள வேண்டும். யாழ்ப்பாணத்தில் வாகனம் ஓட்டுவதற்கு பயிற்சியளிப்பவர்களும இவற்றையும் கருத்திலிருத்திப் பயிறசி வழங்கவேண்டும்.

மாநகரசபையைவிட யாழ்ப்பாணத்தில் வீதி அபிவிருத்தி அதிகாரசபை, வீதி அபிவிருத்தித் திணைக்களம் போன்றவற்றின் அலுவலகங்களும் இயங்குகின்றன.இவர்களாலும் இது விடயத்தில் தலையிட முடியாது. இவர்கள் இந்த விடயங்களில் தலையிடுவதற்கு சட்டமும் சுற்று நிருபங்களும் தடையாகவுள்ளன.

**பரதேசி**

எனவே எத்தனையோ இழப்புகளைத் தாங்கி மரத்துப்போன யாழ். மக்களுக்கு இலகுவான அல்லது சொகுசுப் போக்குவரத்து என்பது அத்தியாவசியமற்ற ஒன்றே. ★

# வாசகர் திருமுகம்

## வங்கி வட்டி விகிதங்களும் லொத்தர்களும்

'பல வாரங்களுக்கு முன்பு 'வங்கிகள் லொத்தர் நடத்துவதனால் குறைந்த வட்டியையே வைப்புச் செய்தவர்களுக்கு வழங்குகின்றன' என்று ஒரு வாசகன் எழுதியிருந்தார். இது சரியல்ல. மத்திய வங்கியின் வட்டி விகிதத்தை ஒட்டியே வர்த்தக வங்கிகள் வட்டி விகிதத்தைத் தீர்மானிக்கின்றன. இருந்தபோதும் பணத் தேவையை ஒட்டி அவை கூட்டிக்குறைக்கின்றன. முதலில் ஒரு தனியார் வங்கியே லொத்தர் நடத்த ஆரம்பித்தது. வேறு வழியில்லாமல் ஒவ்வொன்றாக பின்பற்றி அநேகமாக பெரிய வங்கிகள் எல்லாம் இப்பொழுது லொத்தர் நடத்துகின்றன.

முன்பு சாஸ்திரம் பார்த்து சொல்வார்கள் லொத்தர் விழப்போகின்றது என்று. உடனே அடிக்கடி லொத்தர் எடுத்து பரிசு கிடைத்ததா, இல்லையா என்று பேப்பரைப் பார்க்கவேண்டும். இப்பொழுது அந்தப்பிரச்சினை இல்லை. சில வங்கிகளில் ரூபா 10,000 சேமிப்பு கணக்கில் போட்டால் லொத்தர் கிடைத்தால் வீட்டுக்கு அறிவிப்பார்கள். இதை விளம்பர செலவில் கழித்துக்கொள்வார்கள்.

**- சி.குமாரலிங்கம்**

*செட்டித்தெரு, நல்லூர்.* (ஓய்வுபெற்ற வங்கியாளர்).

## ஓய்வூதியம் பெற என்ன வழி?

அரச உத்தியோகம் சிறந்தது. 'கோழி மேய்த்தாலும் கொரணமேந்தில் மேய்க்கவேணும்' என்று ஒரு நாட்டுப்பழமொழி தமிழில் இருந்தது. இப்போது உண்மையில் அரச உத்தியோகம் செய்தவர்களுக்கு தெரியும் எதற்கும் இழுத்துப்பிடித்துக் கடைசிவரை எழுத்துமூலம் சிரமப்பட்டுத்தான் எல்லாவற்றையும் பெறவேண்டியிருக்கிறது என்பது.

'இப்போது கொம்பியூட்டர்மூலம் செய்து ஓய்வூதியத் தினத்திலன்றே பணம் கொடுத்து அவர்களை இளைப்பாறச்செய்யலாம்' என்ற செய்தியை நான் பத்திரிகைமூலம் வாசித்து அறிந்து மகிழ்ச்சியும் அடைந்தேன். அது அவ்வளவுதான். யாழ்ப்பாணத்தவரின் ஓய்வூதியம் கச்சேரியில் நடைமுறைப படுத்தப்பட்டு வந்தது உண்மை. எல்லாம் நடைமுறை சரியாய் வந்துவிட்டதெனக்கூறி இப்போது கொழும்பில் செய்யும்முறை அனுசரிக்கப் பட்டுவருகிறது. இது எதற்காக? 60-65 வருடம் சேவை ஆற்றிய பின்பு எல்லாத் தகவல்களையும் கொண்டு அவ்விடம் சென்றால் அங்கே "நாங்கள் புதிது", "இது இப்போதுதான் செய்கிறோம்.", "எங்களுக்கு இது கிடைக்கவில்லை. வரவில்லை." என்று கூறித்தட்டிக்கழித்து அலைய விடுகிறார்கள்.

இதனைத் தட்டிக்கேட்க எங்கள் புதிய அரச அதிகாரிகள் அத்துடன் தமிழரின் உரிமைகளை தட்டிக்கேட்பவர்களிடம் முறையிட்டு ஒரு வழிவகுத்து, ஓய்வூதியம் பெறஇருப்பவர்களின் அவல நிலைகளை சொல்லியழ இடம் வகுத்து கொடுப்பவர் யார்? மரணம் கலைத்துக்கொண்டு வரும்போது பையில் ஒன்றும் இல்லையென்றால் பயணஞ்செய்து பையைத் தொலைத்துவிட்ட கதைதான். இதனை எங்கள் அதிகாரிகள் உடனடியாகக் கவனிப்பார்களா?

**- நேசன்.**

# வெளிச்சத்தின் புதிய இதழ்




விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழகத்தின் வெளியீடான 'வெளிச்சம்' சஞ்சிகையின் எண்பதாவது இதழ் வெளிவந்திருக்கிறது.

இந்த இதழில் தமிழீழத் தேசியத் தலைவரின் கருத்துரையுடன் மாலிகா, அமரதாஸ், அநாமிகன், கருணைரவி, பளை கோகுலராகவன், செல்வம், சத்திய மலரவன், ப.அருள்நேசன், மருதம் கேதீஸ், தேஜாமயன், பொன்.காந்தன், சாந்தி முஹியித்தின், யாத்திரீகன், ஆத்மரிஷி, சந்திரபோஸ் சுதாகர், சு.விஸ்வரெத்தினம், புதுவை இரத்தினதுரை, சித்தாந்தன், த.ஜெயசீலன், சோ.சி.கலைக்கதிர், அ.அன்ரனி ஆகியோரின் கவிதைகளும் ப.புஸ்பரட்ணத்தின் வரலாற்றுக்கட்டுரை ஒன்றும் இடம்பெற்றிருக்கின்றன.

இவற்றுடன் நந்தி, தீபா குமரேஸ், ராணி ஸீதரன், செங்கை ஆழியான் ஆகியோரின் சிறுகதைகளும் மானுடத்தின் தமிழ்க்கூடல் பற்றிய புகைப்படங்கள் மற்றும் பதிவுகள், வெளிப்பாடுகள் என்பனவும் மலைமகள், சிவாஜினி சிவசங்கர் ஆகியோரின் களவெளிப்பாட்டுப் படைப்புக்களும் சு.மகேந்திரன் (மயன் - 2) நேர்காணலும், சோ.பத்மநாதன், வின்சென்ற் புளோரன்ஸ் ஆகியோரின் மொழிபெயர்ப்பிலான கவிதைகளும் தூது பகுதியும் இந்த இதழில் இடம்பெற்றுள்ளன.

ஓவியங்களை கிக்கோ, கோபாலி ,நிலாந்தன், முல்லைக்கோணேஸ், பயஸ் ஆகியோர் வரைந்திருக்கின்றனர்.

# கூட வருதல்

போக மறுக்கிறாய் நீ
பிடிவாதமாய் என்கூடவே
வரவேண்டும் என்பதில்...
எழுதி வைத்த கவிதைகளுக்கிடையில் இருக்கும்
சில கிறுக்கல்கள் போல...
நடந்து போன சுவடுகளில்
தெரியாமலே தங்கியிருக்கும்
ரேகைகள் போல...
உறக்கத்துக்குள் அர்த்தப்படாமல்
எட்டிப்பார்க்கும் குட்டிக்கனவு போல...
உனதின் வழியில்
என்னைப்பிரிக்காத
என்'விதி'யே...
காதலுக்குக்கூட இல்லாத
கரிசனையாய்...
கடைசிவரைக்கும்.
மரணத்தின் வாசலுக்கும்
அதற்கும் அப்பாலும்...
என்னோடு வருதலில்
என்றும் தயங்காமல்
நீ.......!

- தாட்சாயணி

# மனசு செதுக்கி மனிதம் சிருஷ்டிப்போம்

"வெளிச்ச ஸ்பரிசிப்பிற்காய்
தேசம் வெளுத்துக் கிடக்கையில்.....,
இருட்டுத் தூரிகையால்
இன்னமும் மனிதர்கள்
மனசெழுதிக் கொண்டிருக்கிறார்கள்.
முடிந்த நூற்றாண்டில்
தொலைத்த மனிதத்தை
பிறந்த நூற்றாண்டு தேடித் தருமா.....?
வெறும் கால வருகைக்கு
நாமகரணம் சூட்டி.....
மனசிருட்டுக்குள் மறைந்திருப்பதை
தேச இருட்டுக்குள்
தேடிக்கொண்டிருக்கிறார்கள் மனிதர்கள்
ஒரு நிமிஷம்......!
எல்லா மனுஷரும் விழிமூடி
உள்ளே தேடுவோம்.
மௌனம் சிதறி வார்த்தைகளாய்
மற்ற மனசு குத்தும்
மார்க்கங்கள் தவிர்த்து;
அரிவாளேந்தி நிற்கும் குரோதமும்
அன்பு தகிழ்ந்த மனசுப் பிரதேசமும்
விலக்கி......, அங்கே
குருதி மூடி குற்றுயிராய் கிடக்கும்
மனிதம் எடுத்து
மனசுக்கு உயிர் கொடுப்போம்.
தேரில் பாகனாய் தெய்வம் மொழிந்ததை
போரின் நிலமெலாம் பயிராய் விதைப்போம்.
இனியேனும்......,
சுயம் மீறி பிறனுக்காய்
அகம் பொங்க அழுது கொள்வோம்.
ஈரம் விடும் விழி கண்டு
நாளைச் சூரியன்
நம் நிலம் உரசி வெளிச்சம் விதைப்பான்
மனசுக்குள் மட்டுமல்ல.....,
தேச தேகத்திலும் கூடவே!"

– நிலா.

# மனிதம் முடி சூடட்டும்!

உதயன்!
உதையடா! 'உதை!
பண்பாட்டுச் சீரழிவைத் தின்று கொழுத்த
பகிடி வதை அரக்கனின் வயிற்றிலே
எட்டி உதையடா உதை!
புதையடா! புதை!
புனிதக் குருதியில் குளித்த நிலத்திலே
மனிதக் குரங்குகளின் மலத்தை
அள்ளிப் புதையடா புதை!

விழுத்தடா விழுத்து!
பொங்கு தமிழுக்கு வேராய் இருந்து
விழுதெறிந்த விருட்சத்தில் தொங்கும்
குருவிச்சைகளை வெட்டி
விழுத்தடா விழுத்து!

வீசடா வீசு!
ஊமையாய்க் கிடந்த குடாநாடு குமுறி எழ
கூர் வாளாக நிமிர்ந்த கோட்டையில்
ஒட்டியிருக்கும் சில உண்ணிகளைப் பிடுங்கி
வீசடா வீசு!

வீசடா வீசு!
உயிரைத் துச்சமென் றெண்ணித் தீ சுமந்தோர்
மத்தியில் போலியாய்த் திரியும் சில
துச்சாதனர்களின் கச்சைகளைப் பிடுங்கி
வீசடா வீசு!

எறியடா எறி!
வெந்த புண் ஆறுமுன்னே இந்தா பார் பாரென்று
மீண்டும் மீண்டும் மனிதத்தைக் குதறும்
வெறி நாய்ப் பற்களைப் பிடுங்கி
எறியடா எறி!

கொளுத்தடா கொளுத்து!
பலத்தைப் பெருக்க உழைக்கும் தருணத்தில்
குலத்திற்கீனமாய் நடக்கும் வழக்கத்தை
கொளுத்தடா கொளுத்து!

எரியடா எரி!
கந்தகத்தைக் கட்டி வெடிக்கும் 'கரும்புலிகளின் நாட்டிலே
தட்டிக் கேட்க ஆருமில்லை என்ற ஆணவத்தில்
கூத்தாடும் மன்மதக் குஞ்சுகளின் எச்சங்களை
கூட்டிவாரி
எரியடா எரி!

அடியடா அடி!
சத்தம் கேட்கவில்லை யென்றால் யுத்தம்
செத்துவிட்டது என்று அர்த்தப்படாது
நீறு பூத்த நெருப்பாய் இருக்கும் தேசத்தைப் புரியாமல்
"பிடில்" ஊதித்திரியும் நீரோக்களின் நெஞ்சிலே
ஓங்கி அடியடா அடி!

பகிடிவதைக்கு மகுடி ஊதுவோர் ஊதட்டும்
பல்லக்குத் தூக்குவோர் தூக்கட்டும்
பண்பாட்டுப் போர் மூளட்டும்
சாகாவரம் பெற்ற பகிடி வதைச் சாத்தான்
செத்தொழியும் வரை சத்தியப் போர் தொடரட்டும்!

இது எம் மண்ணுக்குள் கண்ணுறங்கும்
மான மைந்தரின் தேசம், அவர்
வாச மெங்கும் வீசட்டும்!
மனிதம் முடி சூடட்டும்!!

வன்னியிலிருந்து நாகபுத்திரன்.

# கவிதைக் கணங்கள்....

## காட்டி மரம்

இது இன்னும்
விடியாத விடியல்
ஒரு புலராத புலரி
காற்று தன்
போக்குமாறாது
தென்றலாகவே வீசுகிறது
திறக்கப்பட்ட
சாளரம் வழியாக அது
ஒவ்வொரு முறையும்
உள் வந்து உலவும்!
புயலொன்று குடிசைக்குள்
வீசியதால் – இனி
எதிர்ப்புறச் சாளரமும்
திறக்கக்கூடும்!
அப்போது தென்றல்
தரிக்காது செல்லும்!
இது விடியாத விடியல்
ஒரு புலராத புலரி!

நேற்றுவரை மரம்
ஒரு கைகாட்டியாய் வழிகாட்டியது!
இன்று விழுந்து கிளைமுறிந்து
சாலையின் குறுக்காக அது!
இனி அதை நிமிர்த்தி
மீண்டு கொடுத்துக் கட்டிவிடுவர்.
அது மீண்டும் வழிகாட்டும்!
ஆனால்...
யாரும் போவதற்கில்லை...
எந்தக் கணத்திலும்
அது விழக்கூடும்!

வே.சாரங்கன்.

## பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம்
(வரையறுள்ளது)

48/0857 இலக்க லொறிக்கு உடற்கோப்பு அமைத்தலுக்கான

# கேள்வி விண்ணப்பம் கோரல்

மேற்படி சங்கத்தின் 48/0857 இலக்க அசோக் லேலண்ட் லொறியினது உடற்கோப்பை அகற்றி புதிய உடற்கோப்பு அமைப்பதற்கான கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேற்படி வேலைத்திட்டம் சங்கப் பணிமனை வளவில் வைத்து மேற்கொள்ளப்பட வேண்டும்.

உடற்கோப்பு தொடர்பான வேலை விவரங்கள் விவரிக்கப்பட்டுள்ள கேள்வி விண்ணப்பப் பத்திரங்களை சங்கப் பணிமனை வேலை நாள்களில் முற்பகல் 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணி வரை மீளளிக்கப்படும் வைப்புப் பணம் 1000 ரூபாவும் விண்ணப்பப்பத்திரத்திற்கு 100 ரூபாவும் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் பத்திரங்கள் 14-02-2003 ஆம் திகதிக்குப் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக *பொது முகாமையாளர், பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ. சங்கம், பண்டத்தரிப்பு* எனும் முகவரிக்கு பதிவு அஞ்சல் மூலம் அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

பொது முகாமையாளர்,
பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம்,
பண்டத்தரிப்பு.

(சி-26265)


# ஓராண்டு நினைவலைகள்



தோற்றம் 31 - 05 - 1918

மறைவு 13 - 02 - 2002

## அமரர் சரவணமுத்து இராசநாயகம்
(இளைப்பாறிய ஆசிரியரும், பிரபல சோதிடரும், ஆராய்ச்சியாளரும்)

*திதி: பிரதமை, ஞாயிற்றுக்கிழமை 02.02.2003*

நெஞ்சின் அலைகளிலே அன்பை வளர்த்தீர்கள்
பண்பாகப் பாசத்துடன் நாம் வாழ நல்ல பணி செய்தீர்கள்
பாவிகளாய் நாமிருக்க, பரிதவிக்க விட்டுச் சென்று விட்டீர்கள்
கண்ணீரால் நாம்வாட, கலங்க விட்டு எங்கு சென்றீர்கள்?

*'ஒரு நொடிப் பொழுதில் உங்கள் மறைவு*
*ஒவ்வொரு நிமிடமும் உங்கள் நினைவு'*

*அளவெட்டி தெற்கு.*
*அளவெட்டி.* (13887)

உங்கள் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 02 - 01 - 1962

விண்ணில் 12 - 02 - 2002

## திருமதி தர்மராசா விஜயாவதி

*திதி: 02.02.2003*

பாங்காக வாழ்ந்த பத்தினியே விஜயாவதி
நீங்காது உம் நினைவு நித்தமும் எம் மனதில்!
பெறுக ஆத்ம சாந்தி!

(13867)

ச.தர்மராசா (கணவர்),
*கோப்பாய் மத்தி, கோப்பாய்.*

அன்புக், கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## கிராம அலுவலர் உள்ளக இடமாற்றம்

காரைநகர் பிரதேசத்தில் பணியாற்றி வரும் 9 கிராம அலுவலர்களில் 5 பேருக்கு உள்ளக இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

ஒரே பகுதியில் தொடர்ந்து 15 வருடங்கள் இவர்கள் கடமையாற்றி வந்தமை கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்தே யாழ்மாவட்ட அரச அதிபரினால இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது. (எ-10)

## ஐக்கிய நாணய சங்கத்திற்கு விரைவில் புதிய கட்டடம்

சரசாலை வடக்கு ஐக்கிய நாணய சங்கத்துக்கு புதிய கட்டடம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

புதிய கட்டடத்திற்கான அத்திவாரக் கல் இன்று ஞாயிற்றுக்கிழமை நடுகை செய்யப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

## அதிபர் நியமனம்

கைதடி சேதுகாவலர் கனிஷ்ட வித்தியாலயத்துக்கு திருமதி சிவஞானசிவம் இராஜேஸ்வரி அதிபராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் இதுவரை காலமும் கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயத்திலே உதவி அதிபராகக் கடமையாற்றி வந்தவர். (எ-75)

## கைதடி மத்தியில் திருடர்தொல்லை

கைதடி மத்திப் பகுதியில் இரவு வேளைகளில் திருடர் நடமாட்டம் அதிகரித்திருப்பதாக இப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

அண்மையில் இரண்டு திருட்டு முயற்சிகள் இப்பகுதி மக்கள் விழிப்பாக இருந்தமையினால் தடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் மேற்படி திருட்டு முயற்சிகளை ஒழிக்கக்கூடிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-75)


## விற்பனைக்கு

*நிறை கூடிய புறொயிலர், கல்ரேட் என்பன சுத்தம் செய்து திறமும் பெற்றுக்கொள்ளலாம். புறொயிலர் மொத்தமாகவும் விற்பனை செய்யப்படும். வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.*

தொடர்பு: -

மல்ரி பாம் சென்ரர்
21/61, இராமநாதன் வீதி, கலட்டி
(மீனெனிபர் மெஸ்ரோறல் முன்பாக)
கிளை: ஸ்ரான்லி வீதி,
(முட்டாசு கடைச்சந்திக்கருகில்)

(13866)

## அலுவலகப் பணியாள் (பியோன்) தேவை

எமது அலுவலகத்துக்கு க.பொ.த. சா/தரம் தேர்ச்சி பெற்ற, சுயமாக, சுறுசுறுப்பாக வேலை செய்யக்கூடிய 20 வயதுக்குட்பட்ட பணியாள் (பியோன்) தேவை. நற்சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும்.

தொடர்பு: இயக்குநர்,
புறோமோட்டேர்ஸ் என்ஜினியரிங்
கம்பனி லிமிட்டெட்,
இல. 844, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

## ஓட்டோவும் சாரதியும் தேவை

எமது ஸ்தாபனத்தில் காலை 8 மணிமுதல் இரவு 7 மணிவரை வாடகைக்கு வேலை செய்யக்கூடிய AUTO(Tri - Show)வும் சாரதியும் தேவை. மாதாந்த அடிப்படையில் கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

தொடர்பு: இயக்குநர்,
புறோமோட்டேர்ஸ் என்ஜினியரிங்
கம்பனி லிமிட்டெட்,
இல. 844, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

## சமையலாள் தேவை

எமது ஸ்தாபனத்தின் இயக்குநர்களின் வதிவிடத்தைப் பராமரிப்பதற்கும் சமையல் வேலை செய்வதற்கும் அனுபவம் வாய்ந்த சமையலாள் தேவை. மேல் நாட்டவருக்கு ஏற்ப சமையல் செய்யத் தெரிந்தவருக்கு முன்னுரிமை வழங்கப்படும். சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும்.

*தொடர்பு:-*

இயக்குநர்,
புறோமோட்டேர்ஸ் என்ஜினியரிங்
கம்பனி லிமிட்டெட்,
இல. 844, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

## பூந்தோட்டப் பராமரிப்பாளர் தேவை

எமது ஸ்தாபன வளாகத்திலும் இயக்குநர்களின் வதிவிடத்திலுமுள்ள பூந்தோட்டங்களை வடிவமைத்துப் பராமரிப்பதற்கு அனுபவம் வாய்ந்த பூந்தோட்டப் பராமரிப்பாளர் தேவை. அனுபவச் சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும்.

*தொடர்பு:-*

இயக்குநர்,
புறோமோட்டேர்ஸ் என்ஜினியரிங்
கம்பனி லிமிட்டெட்,
இல. 844, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(C/26254)

## புறோமோட்டேர்ஸ் என்ஜினியரிங் கம்பனி லிமிட்டெட்

# வெற்றிடங்கள்

எமது ஸ்தாபனம் பொறியியல்துறையில் கடந்த 25 வருடங்களாக யாழ்.மக்களுக்கு சேவைசெய்து வந்துள்ளது. எமது ஸ்தாபனத்தின் கூட்டமைப்பு இத்துறையில் பல சாதனைகளைப் புரிந்து, தெற்காசிய பிராந்தியத்தில் ஒரு முன்னணி நிறுவனமாகத் திகழ்கின்றது. எமது கூட்டமைப்பு, உற்பத்தி செய்யும் இயந்திர சாதனங்களின் சிறந்த தராதரத்தினால் அவற்றுக்கு சர்வதேச சந்தையில் கிராக்கி ஏற்பட்டு, அவை இந்தியா, இந்தோனேஷியா, பாகிஸ்தான், துருக்கி, உக்கிரேன் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இப்பொழுது நாம் சர்வதேச தராதரமுள்ள இயந்திரங்களை யாழ்ப்பாணத்தில் தயாரித்து ஏற்றுமதி செய்யவுள்ளோம். இம்முயற்சியில் ஈடுபட்டிருக்கும் எமது அமைப்பில் பின்வரும் வெற்றிடங்கள் உள்ளன.

1. கடைச்சல் இயந்திர இயக்குநர் (லெத்மன் - Lathe Man)
2. மில்லிங்மெசின் இயக்குநர் (Milling Machine Operator)
3. தகட்டு வேலைத் தொழிலாளி (Sheet Metal Worker/ Fabricator)

மேற்படி வெற்றிடங்களுக்கு சுயமாகச் சிந்தித்துச் செயற்படும் ஆற்றலுள்ள, சுறுசுறுப்பு மிக்க, குறைந்தது 10வருட அனுபவமுள்ள, தரமான, வேலை செய்வதில் ஆர்வமுள்ள தொழிலாளர் தேவை.

நற்சாட்சி விவரம் கோரக்கூடிய உறவினர் அல்லாத இருவரின் பெயர் விலாசத்துடன் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்ப முடிவு திகதி: 10.02.2003

நிர்வாக இயக்குநர்,
புறோமோட்டேர்ஸ் என்ஜினியரிங்
கம்பெனி லிமிட்டெட்,
இல.844, பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(C/26255)

## புறோமோட்டேர்ஸ் என்ஜினியரிங் கம்பனி லிமிட்டெட்

# வெற்றிடங்கள்

எமது ஸ்தாபனம் பொறியியல் துறையில் கடந்த 25 வருடங்களாக யாழ்.மக்களுக்கு சேவைசெய்து வந்துள்ளது. எமது ஸ்தாபனத்தின் கூட்டமைப்பு இத்துறையில் பல சாதனைகளைப் புரிந்து தெற்காசிய பிராந்தியத்தில் ஒரு முன்னணி நிறுவனமாகத் திகழ்கின்றது. எமது கூட்டமைப்பு, உற்பத்தி செய்யும் இயந்திர சாதனங்களின் சிறந்த தராதரத்தினால் அவற்றுக்கு சர்வதேச சந்தையில் கிராக்கி ஏற்பட்டு, அவை இந்தியா, இந்தோனேசியா, பாகிஸ்தான், துருக்கி, உக்கிரேன் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இப்பொழுது நாம் சர்வதேச தராதரமுள்ள இயந்திரங்களை யாழ்ப்பாணத்தில் தயாரித்து ஏற்றுமதி செய்யவுள்ளோம். இம்முயற்சியில் ஈடுபட்டிருக்கும் எமது அமைப்பில் பின்வரும் வெற்றிடங்கள் உள்ளன.

★ **Engineering Assistant (Mechanical)**

N.D.T. Mechanical Engineering தேர்ச்சியுடன் தனியார் துறையில் குறைந்தது 5 வருடம் Fabrication workshop இல் வேலைசெய்த அனுபவத்துடன் சுயமாகச் சிந்தித்து செயற்படுபவரும் வேலையாள்களைச் சிறந்தமுறையில் வழிநடத்தும் ஆற்றலுமுடையவர்கள் விண்ணப்பிக்கலாம்.

★ **கணக்காளர் (Accountant)**

சுயாதீனமாக சகல கணக்குப் புத்தகங்களையும் எழுதி கணக்காய்வுக்கு உட்படுத்தக்கூடிய ஆற்றலுடையவராக இருக்கவேண்டும். முகாமைத்துவத்துக்குத் தேவைப்படும் கணக்குத் தகவல்களைச் சீராகவும், தகுந்த நேரங்களிலும் வழங்கும் ஆற்றல் மிக அவசியமானது. ஆங்கிலத்தில் ஆற்றலுள்ளவர்களுக்கு (Fluency in English) முன்னுரிமை வழங்கப்படும்.

அங்கீகரிக்கப்பட்ட கணக்கியல் துறையில் பகுதிச் சான்றிதழ்களுடன் 3 வருடத்துக்குக் குறையாத அனுபவமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

*விண்ணப்ப முடிவு திகதி:* 10.02.2003

நிர்வாக இயக்குநர்,
புறோமோட்டேர்ஸ் என்ஜினியரிங்,
கம்பனி லிமிட்டெட்,
இல.844, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(சி-26256)


# மரண அறிவித்தல்

## திருமதி கணபதிப்பிள்ளை பாக்கியம்

கட்டப்பிராயை பிறப்பிடமாகவும் நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கணபதிப்பிள்ளை பாக்கியம் 30.01.2003 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் மற்றும் கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை (முன்னாள் வாகனத் திருத்துநர், மன்னார்ச் சாலை), சேதுப்பிள்ளை (பறுவதம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் குணலட்சுமி லோகநாதன், நித்தியலட்சுமி, நவரட்ணம் (கண்ணன்-கனடா), வரதலட்சுமி (வாசுகி - கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சுந்தரலிங்கம் (கல்வியங்காடு), சத்தியதேவி (நாவற்குழி), பஞ்சாச்சரம் (வன்னேரிக்குளம்), பவானி (கனடா), ஜீவா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.02.2003) ஞாயிற்றுக்கிழமை காலை 9மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நீர்வேலி தெற்கு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வீரபத்திரர் கோவிலடி,*
*நீர்வேலி தெற்கு, நீர்வேலி.* (13907)

தகவல்:
க.கணபதிப்பிள்ளை (கணவர்)

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு

புதிய உயர் கல்லூரியில் இன்று (02. 02. 2003) ஞாயிற்றுக் கிழமை நடைபெற இருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்கமுடியாத காரணத்தினால் 16. 02. 2003 ஞாயிற்றுக் கிழமை அதிர்ஷ்டம் பார்க்கப்படும் என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆனைக்குளம் சந்தி,
யாழ்ப்பாணம். (13987)

**புதிய உயர் கல்லூரி மாணவர் ஒன்றியம்**



## விற்பனை முகவர்கள் தேவை

**DSI** சில்லுறைகளையும் காற்றுக் குழாய்களையும் தயாரித்து ஏற்றுமதி செய்யும்

**சம்சன் றபர் இன்டஸ்றீஸ் (பிறைவேற்)**
ஸ்தாபனத்தார்

☆ கிளிநொச்சி ☆ முல்லைத்தீவு ☆ மன்னார்
பிரதேசங்களுக்கு
விற்பனைகளை மேற்கொள்ளக்கூடிய
முகவர்களை எதிர்பார்க்கின்றார்கள்.

☛ குறித்த பிரதேசங்களில் நன்கு நிலை நிறுத்தப்பட்டிருக்கும் விநியோக சேவைகளையும் சுத வசதிகளையும் வங்கி உத்தரவாதத்தினையும் நிறைவாகக் கொண்டுள்ள வர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.

தொடர்புகளுக்கு

விற்பனை முகவர்,
**சம்சன் றபர் இன்டஸ்றீஸ் (பிறைவேற்) லிமிடெட்**
***(DSI சில்லுறைகளும் காற்றுக் குழாய்களும்)***
ஜினசேன மாவத்தை,
மகர கடவத்தை.
தொலைபேசி : 01 - 926065, 920131
தொலைநகல்: 01 - 925179
*E.mail: dsityre @ dsityre.lk.*
(சி-26305)



## INTERNATIONAL INSTITUTE OF MUSIC, SPEECH & DRAMA

**37, 5th Lane, Colombo - 3,**
**Tel / Fax:(94-1) 575053**
**E-Mail: jferdinando@mail.ewisl.net**

## Free Workshop & Seminar

Will be held on Monday February 3rd
At The Jaffna Hindu College at 2.30pm
on The Sri Lanka Festival of
*Music, Dance & Drama*
Affiliated to the British & International
Federation of Festivals UK to be held in
**Jaffna on April 19th 2003**
**Adjudicator Mr.Timothy McCarthy(Ireland)**
Offers scholarships to the
British Youth Camp in Colombo
Offers the Syllabus, Workbooks etc.,
For Music, Speech & Drama Festival,
Local & Foreign Examinations.
All Teachers, Students & Parents are Welcome.
Director: **Joy Ferdinando** LTCL.LRSM.Hon.Member ROSL.UK

**இலவசப் பயிற்சிப்பட்டறையும் கருத்தரங்கும்**
**சங்கீதம், பேச்சு, நாடகம்**
விடயம்: சங்கீத, பேச்சு, நாடக விழா மற்றும் பரீட்சைகள் தொடர்பான விளக்கம்
இடம்: **யாழ். இந்துக் கல்லூரி**
காலம்: நாளை (03.02.2003) திங்கட்கிழமை
நேரம்: மாலை 2.30 மணி.
*பயிற்சிப் புத்தகங்கள் மற்றும் பாடத்திட்டங்களும் வழங்கப்படும்.*
*ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்களை அழைக்கின்றோம்.*
இயக்குநர்: **ஜோய் பேர்டினன்டோ**
*LTCL.LRSM.Hon.Member ROSL.UK* (13965)



## கண்ணீர் அஞ்சலி

எமது கலாசாலை தமிழ்ப் பிரிவைச் சேர்ந்த ஆசிரிய மாணவி
*செல்வி கி.மணிமேகலை அவர்களின் தந்தையார்*
**த.கிஸ்ணன்**
அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(13932) கோப்பாய் ஆசிரிய கலாசாலைச் சமூகத்தினர்.


### கொடுப்பனவுக்கு முன்னுரிமை பெற்றோர் விவரம் பார்வைக்கு

வலி.மேற்கு,பெப்.2

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியமர்வுக் கொடுப்பனவு ரூபா 25 ஆயிரம் பெறுவதற்கென முன்னுரிமைப்படுத்தப் பட்டவர்களின் பெயர் விவரங்கள் சகல பொது இடங்களிலும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள 25 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் இருந்து, கிராமிய புனரமைப்புக் குழுவினரால் முன்னுரிமைப்படுத்தப்பட்டவர்களின் பெயர் விவரங்களே கிராம உத்தியோகத்தர் பணிமனைகள், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகள், சனசமூக நிலையங்கள், கிராம முன்னேற்றச் சங்க அலுவலகங்கள் போன்றவற்றில் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

(எ-175)

### 'நிகொட்' உதவியுடன் பாடசாலைகளுக்கு கட்டடங்கள்

வரணி,பெப்.2

வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் (நிகொட்) உடுத்துறை மகா வித்தியாலயத்துக்கு வாசிகசாலை, விஞ்ஞான ஆய்வுகூடம் உட்பட மூன்று வகுப்பறைக்கட்டடங்களும் -

ஆழியவளை கத்தோலிக்க தமிழ கலவன் பாடசாலைக்கு விஞ்ஞான கூடம், வாசிகசாலை உட்பட மூன்று வகுப்பறைகளும் -

வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்துக்கு ஆசிரியர் விடுதியும், மூன்று வகுப்பறைகளும் அமைக்கப்படவுள்ளன.

மருதங்கேணி கிராமிய வைத்திய சாலையைப் புனரமைக்கவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது. (எ-170)

### சுழிபுரத்தில் இம்முறை பெரும்போகம் நல்ல விளைச்சல்

சுழிபுரம்,பெப்.2

சுழிபுரம் பகுதியிலும் நெல் அறுவடை செய்யும் பணிகள் ஆரம்பமாகியுள்ளன.

குறைந்த மாத நெற் பயிர்கள் வளர்ந்து முற்றியதை அடுத்து அறுவடை ஆரம்பமாகியுள்ளது.

சுழிபுரம் பகுதியில் இம்முறை பெரும்போக நெல் அறுவடை நல்ல விளைச்சலைத் தந்துள்ளது என விவசாயி ஒருவர் தெரிவித்துள்ளார்.

(எ-28)


**வான் (VAN) தேவை**

எமது சோப் வகைகளை விற்பனை செய்வதற்கு சிறிய டீசல் வான் (VAN) தேவை. குத்தகைக்கு ஓட விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம்.
**மில்க்வைற் சோப் தொழிற்சாலை,**
**525/2, கே.கே.எஸ்.வீதி,**
(சி-26315) **யாழ்ப்பாணம்.**



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இணுவில் மேற்கு J/191
கிராம உத்தியோகத்தர்
**திரு.க.இரவீந்திரன்**
அவர்கள் கிராம உத்தியோகத்தர் தரம்-I இற்குப் பதவியுயர்வு அடைந்ததையிட்டு அவரைப் பாராட்டி எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

இணுவில் மேற்கு
இணுவில். (சி-26312)
**இசை வேளாளர் சங்கம் நாதசுர, தவில் கலைஞர்கள்.**



## Nurse Wanted

AGE 35 TO 40 YEARS OLD. HIGH LEVEL DEGREE QUALIFIED LICENCED FEMALE NURSE WITH MINIMUM 3 YEARS EXPERIENCE ON SERIOUS PATIENTS INTENSIVE CARE ATTENDANCE TO GAIN EMPLOYMENT IN U.S.A. AN AMERICAN IS HELPING WHO REQUIRES LIFELONG HEALTH CARE LOVING PARTNER. SHE THE NURSE SHOULD BE VERY FAIR AND LOVELY PERSON, JAFFNA HINDU TAMIL SOFT ADJUSTABLE HOMELY. MARRIAGE IS REQUIRED TO GET AMERICAN BENEFITS.

*ADVERTISER NO.* ***1763***
***C/O UTHAYAN, JAFFNA.***



## விற்பனை முகவர்கள் தேவை

Ranpa பெயர் கொண்ட உற்பத்திகளான பாதணிகளைத் தயாரிப்பவர்களான

**சம்சன் மனுவக்சறேர்ஸ் லிமிடெட்**
ஸ்தாபனத்தாருக்கு
பின்வரும் பிரதேசங்களில் விற்பனைகளை மேற்கொள்ளக்கூடிய முகவர்கள் தேவைப்படுகின்றார்கள்.

- ☆ யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவும்
- ☆ வவுனியாவும் மன்னாரும்
- ☆ மட்டக்களப்பு
- ☆ கல்முனை
- ☆ மூதூரும் கிண்ணியாவும்

மேற்குறிப்பிட்ட பிரதேசங்களில் நன்கு நிலை நிறுத்தப்பட்டுள்ள விநியோக சேவை நிலைகளையும் சுத வசதிகளையும் வங்கி உத்தரவாதமுடையவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.

*பிறவிவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.*

உதவி விற்பனை முகாமையாளர்
**சம்சன் மனுவக்சறேர்ஸ் லிமிடெட்**
**24, தலுகம களனிய**
தொலைபேசி: 074 - 816936
(சி-26308) தொலைநகல்: 01 - 915067



உ
கணபதிதுணை

## உபநயன சுபமுகூர்த்த அழைப்பு

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான சித்திரபானு வருடம் தைமாதம் 20ஆம் நாள் (03.02.2003) திங்கட்கிழமை சதய நட்சத்திரமும் அமிர்தசித்தயோகமும் கூடிய 6 மணிமுதல் 7 மணிவரையுள்ள மிதுன லக்கின சுபமுகூர்த்தவேளையில்

வீரகத்தி விநாயகர் ஆலய குரு பிரம்மஸ்ரீ பஞ்சாட்சரக் குருக்களின் பௌத்திரனும்
வீரகத்தி விநாயகர் ஆலய குரு பிரம்மஸ்ரீ ப.வைத்தியநாதக் குருக்கள் - இலட்சுமி அம்மாவின் தௌஹித்திரனும்

எமது சீமந்த புத்திரனுமாகிய
சிரஞ்சீவி **வை.கணேசமூர்த்தி சர்மாவுக்கு**

எல்லாம் வல்ல விநாயகப் பெருமானினது திருவருள் கைகூடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் யஞ்ஞோபவீததாரண பிரம்ம உபதேசம் நிகழ்த்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் சகல அந்தணர்களையும் உற்றார், உறவினர்கள் அனைவரையும் செவ்வனே வாழ்த்துமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*உபநயன பிரம்ம உபதேசக் குரு:*
**சிவஸ்ரீ ப.மனோகரக்குருக்கள்**
வல்வை சிவன் தேவஸ்தானம், வல்வெட்டித்துறை.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:
பிரம்மஸ்ரீ வைத்தியநாதக் குருக்கள் - இலட்சுமி அம்மா தம்பதியினர் - வீரகத்தி விநாயகர் ஆலயம்,
பரமேஸ்வர சர்மா - சாந்தி தம்பதியினர் - நெடுந்தீவு முருகன் தேவஸ்தானம்,
சண்முகானந்த சர்மா - ஆனந்தி தம்பதியினர் - தான்தோன்றி அம்மன் தேவஸ்தானம், ஊர்காவற்றுறை,
பாலசதீஸ் சர்மா - ஜெனனி தம்பதியினர் - கற்கோவளம், கும்பி அம்மன் தேவஸ்தானம், பருத்தித்துறை.
சுபமங்களம்
*தும்பளை வீதி, சிவன் கோயிலடி, பருத்தித்துறை.* (13983)

ஐம்பது ஆண்டு அரசியல் மோதல். இருபது ஆண்டு இரத்தம் தோய்ந்த யுத்தம். நாம் அடைந்த நன்மை தான் என்ன? வெறுப்புணர்வைத் தவிர எதுவும் கிடைக்கவில்லை. வெறுப்புணர்வுக்கு வெறுப்புணர்வே பதிலாகக் கிடைத்தது. நாம் விட்டுக் கொடுக்க இணங்கவில்லை. சிறிதளவைக் கொடுத்து பெரும்

# கை நழுவிய சந்தர்ப்பம்

பங்கை வைத்திருக்கவே விரும்பினோம். அல்லது பெரும் பகுதியை கேட்டு அடம்பிடித்தோம். குரூரமான சித்தாந்தங்களினால் நாம் குருடர்களாகினோம். பரஸ்பரம் ஒருவர் ஒருவரின் தேவைகள், அபிலாஷைகள், இனத் தனித்துவத்திற்கு மதிப்பளிக்கத் தவறினோம். பல்வேறு மோதல்களில் ஏற்பட்டது போன்று பல பொன்னான சந்தர்ப்பங்கள் கிடைத்தன. சமாதானம் கைக்கு எட்டுமளவுக்கு நெருங்கியது. அதனை என்ன செய்தோம்? நாம் அவற்றை எல்லாம் முர்க்கத்தனமாகவும் வெட்கமில்லாமலும் உதைத்துத் தள்ளினோம். பாரதூரமான தேசிய பிரச்சினைகளை விட குறுகிய அரசியல் நோக்கங்களுக்கு அடிமையானோம். வேதனையைத் தரக்கூடிய சட்டங்களை இயற்றினோம். ஒப்பந்தங்களை கிழித்தெறிந்து எதிர்ப்புகளுக்குத் தூபமிட்டோம். வன்முறைகள் தீர்வுகளை ஏற்படுத்தும் என்று நம்பி கலவரங்களைத் தூண்டிவிட்டோம். வருடா வருடம் நாம் தொடர்ந்தும் இனவாதம், பிரதேச வாதம், பிரிவினை வாதத்திற்கு ஊக்கமளித்தோம். இத்தகைய தவறுகளுக்குத் தண்டனையாக நாம் வன்முறையையும், மரணத்தையும் அழிவையும் பெற்றோம். உடன்பாடு மற்றும் கருத்தொற்றுமைக்கு நாம் இடம் அளித்திருந்தால் இந்த நீண்ட கொடிய யுத்தத்தை தவிர்த்து இருக்கலாம். ஆனால் நாம் பகைமையைத் தெரிவு செய்கிறோம். இதனால் ஏற்படும் விளைவுகள் தான் என்ன?



சமாதான நடைமுறையைக் கூட்டிணைப்பதற்கான செயலகம்

PHOENIX O&M 2024

| | | | |
|---|---|---|---|
| | | சனி. ராகு | |
| | இராசிச் | சக்கரம் | வியா. |
| கு. சந். | | | |
| வெ. புத. | செவ். கேது | | |

# இந்த வார இராசி பலன்

மகாதேவா ஜோதிடம்

## 02-02-2003 - 08-02-2003

**அரசியலில் தொடர்ந்து பேச்சுக்கள் நடக்கும். எதிர்க்கட்சி மெல்ல மெல்ல பலமடையும். வடக்கு-கிழககில் திடீர்திடீர் மாற்றங்கள். தெற்கு அரசியல் வாதிகள் இரண்டுபட்டு ஒருவரை ஒருவர் குற்றம் சுமத தியபடி இருப்பர். இந்தியா மறைமுக அழுத்தங்கொடுக கும். தொடர்ந்து மத்திய கிழக்கில் பதற்றநிலை நீடிக்கும். யுத்த நடவடிக்கைகள் தாமதப்படுத்தப்பட் டாலும் பயம் தீராது. திடீரென அமெரிக்கா நடவ டிக்கை எடுக்க சந்தர்ப்பங்கள் உண்டு. அத்திலாந் திக் சமுத்திர பிராந்திய நாடுகளில் பதற்றநிலை ஏற்படும் எனக் கிரகநிலைகள் காட்டுகின்றன.**

### மேடம்

வளர்ந்து வரும்பொழுது பலர் சில சந்தர்ப்பங்களை தவறவிடுகிறார்கள். உங்கள் தொழில்ஸ்தானத்திலும் பல சந்தர்ப்பங்கள் இருந்தும் ஏன் தவறவிடுகின்றீர்கள். வாக்குத்தவறுதல், திடீர்பொருள் வரவு, விழுந்து எழும்புதல், தூரத்து எதிர் பார்ப்பு, அதிகயோசனை, கெட்டபெயர் எடுத்தல், அயலவர்களின் உதவிகளால் மாற்றங் கள் ஏற்படும். அளவுடன் எதையும் செய்வதால் அவதிகளைத் தவிர்த்து இலாபம் அடைவீர்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:- திங்கள், புதன், வெள்ளி.*

### இடபம்

பலவீனங்களைச் சிலர் பாவித்து அவமானங்களை ஏற்படுத்துவர். எதிர்பார்த்தது நடக்காமல் போகும். அதிக பிரயாசை, வீடுவாசல் தேடிவரல். பொதுத தொண்டால் புகழ், வீட்டில் சுகவீனம், மருந்தால் - விருந்துச் சுகம் குறையும். வீண்சந்தேகம், மறதி, பணப்பயம், புதிய நண்பர் வருகை. வாசனைப் பொருள்களில் நட்டம், காயங்கள வரல என்பன இருக்கும். ஓடித்திரிந்த நீங்கள் கொஞ்சம் உறுதியாக இருக்கும் காலம். காய்ச்சல் என்ற ஏக்கம், எதிர்பாலார்கள் குறை கூறுவர். இடமாற்றங்களை நிதானமாகச்செய்யுங்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்:- திங்கள், புதன், வெள்ளி.*

### மிதுனம்

பலன்மாறும்போது மனித மனங்களும் மாறும். செவ் வாய்க்கிரகத்தில் வேகம் உண்டு. அடிக்கடி கோபம், பதற்றம், மற்றவர்கள் கருத்தை ஏற்றுக கொள்ளாதநிலை, அரசபயம், பெற்றவரும் உற்றவரும் உறுதி கூறுவர். காசுவரும். நல்ல கருத்துக்களைச் சொல்லமுடியாதநிலை தோன்றும். தொழில் ஸ்தானத்தில் எதிர்கள் வலிமைப்பட்டு தொல்லைகள் தரு வார்கள். குருந் தொழில், செய்தித்தொழில் செய்பவர்கள் அடிக் கடி நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:- திங்கள், புதன்.*

### கடகம்

மாப்பிள்ளைதேடும்போது பொருத்தத்தைப் பார்க்கலாம். பலனும் சேர்த்துப்பார்ப்பத னால் பாவக்கிரகங்களின் எதிர்த தாக்கத்தை அறியமுடிவதைப் போன்று எதிலும் கொஞ்சம் விசாரித்துப்பார்ப்போம் என அடிக் கடி எண்ணுவீர்கள். அரசஉதவிகள் தொழிலில் புதியநடைமுறை, பழையபாக்கிகள் வரல், பிரயாணத்தடைகள் ஏற்படல், முதுகு நோ, சளித்தொல்லைவரும், பெரியவாகளைப்பகைக்காமல் காரியங்களைச்செய்து வாருங்கள். அரசியல் வாதிகளின் செல வாக்கு நன்மைகள் கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்:- திங்கள், புதன், வியாழன்.*

### சிங்கம்

நேர்மைவழி செல்லும் உங களைப் புகழ்ந்து, புகழ்ந்து சிலர் உங்களை அறியாது பல காரியங்களைச் சாதகப்படுத்தி விடுவார்கள். தொழில்ஸ்தானத் தில் திட்டமிட்ட நடவடிக்கைகள் தொடரும். பணவரவு, புதிய பொறுப்புக்கள், சொற்சித்தி, உறவினர்கள் வருகைகள், அரச ஆதரவு அதிகரிக்க இடமுண்டு. மந்தநிலை, சலவருத்தம், மனச்சஞ்சலம் வந்துபோகும். தெய்வதரிசனம் நல்லது. வியா பாரத்துறை, மருந்துத்துறை, தரகுத்துறை போன்றவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும். மாணவர்கள் சித்திகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:-புதன், வியாழன்.*

### கன்னி

பிறருக்கு ஓடிஓடி உதவும் நீங்கள் பெரியபெரிய உதவி களைச் செய்தாலும் சிறுசிறு விஷயங்களை நடைமுறைப் படுத்த மிகக்கவனம் எடுப்பீர் கள் தொழில்ஸ்தானத்தில் பணவரவு அதிகரிக்கும். இனஜ னக்கொண்டாட்டம், பெரியவர்கள் உதவி, சகோதரங்களுக்கு நன்மைகள் ஏற்படல், குடும்ப வைத்தியச் செலவு அதிகரிக்கும். சளித்தொல்லைகொடுகக்கும். மனதிற்கு விரோதநடவடிக்கை களை குடும்பத்தவர்செய்து புகைச்சலை ஏற்படுத்துவர். குருத் தொழில், செய்தித்துறையினருக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்:- புதன், வியாழன், வெள்ளி.*

### துலாம்

சமநீதி தர்மத்தைபோதிக் கும் நீங்கள் எதற்கும் அஞ் சாது தொழிற்படுவீர்கள். சட் டம், தர்மத்தை அனுசரித்து செயற்பட்டபடி இருப்பீர்கள். தொழில்ஸ்தானத்தில் படிப்படியான மாற்றங்கள் கொடுக்கும் விரோதிகளும் பலமடையவிடாது செயற்படுங்கள். வருமானம் சுமாராக இருக்கும். எதிர்பாராமல் அந்நிய இடங்களில் இருந்து உதவிகள் கிடைக்கும். சளித் தொல்லை, உடற்சோர்வு, கை கால் உளைவு கொடுக்கும். பொருள் தவற இடமுண்டு. சட் டத்துறை, ஆராய்ச்சித்துறை, பிரயாணத்துறையினருக்கு நன்மை கள் கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்:- புதன், வியாழன், வெள்ளி.*

### விருச்சிகம்

உங்கள் நேர்மையான செயற்பாடு களை சிலர் எதிர்பார்கள். எதற்கும் அஞ்சாது உங்கள் கருத்துக்களை வெளிவிட்டு மற்றவர்களின் மனக்குறை களை ஏற்றுக்கொள்வீர்கள். தொழிலி டத்தில் நல்ல வரவேற்பு, பொருள் வர வுக்குக் குறையாத செலவு, சமூகத் தொண்டு செயய்தல், வீடுமனைச்சிறப்பு வரும், தொண்டை, நாசி, அடிவயிறுநோ தாக்கும். பாதுகாப்புத் தேடவும். தெய் வத்திருப்பணி தொடரும். தொழில்நுட்பத்தைதுறை, வியாபாரத் துறையினர் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்ட நாள்கள்:- புதன், வியாழன், வெள்ளி.*

### தனுசு

நேற்றுவரை உதவியாக இருந்தவர் இன்று ஏன் மாறி னர்? எல்லாம் மறைமுகச் செல் வாக்குத்தான். அதனால் அவர் களுக்கும் இழப்புக்கள் வர இடம் உண்டு. அரசியல் செல்வாக்கு, மறைமுக அழுத்தம், பிரயானத் தடைகள் ஏற்படும். பொருளால் வேதனை வரும். இனஜனக் கொண்டாட்டம், கால்வருத்தம், மனச்சலிப்பு ஏற்ப டும். வாகனங்களில் மிக அவதானமாக இருக்கவும், பாதை களில் பல இடங்களில் இன்னும் பள்ளங்கள் நிரப்பப்படவில்லை.

*அதிர்ஷ்ட நாள்கள்:- திங்கள், புதன், வியாழன், வெள்ளி.*

### மகரம்

ஓடிப்போன செல்வாக்கை சிலர் தேடிப்பிடிக்க என்னவெல் லாம் செய்கிறார்கள். பதவி ஆசை எவரையும் விடாது போலும். களத்தில் நின்றால் தான் அதன் சுமைபுரியும் என அடிக்கடி சிந்திப்பீர்கள். ஆறுத லாக கண்டிப்பானவர் என முடிவெடுக்கும் நீங்கள், இப்பொழுது சிலருக்கு உதவிசெய்யப்போய் உபத்திரப்பட இடம் உண்டு. காலில் நோ, சிலருக்கு உருப்படியான ஆலோசனை, உதவிசெய் தல். இடமாற்ற யோசனை அடிக்கடி மனதில் வந்துபோகும். நெஞ்சுச் சளியும் விட்டுவிட்டுக்கொடுக்கும். மாணவர்களுக்கு இடமாற்றங்கள் ஏற்படும்.

*அதிர்ஷ்ட நாள்கள்:- திங்கள், வியாழன், வெள்ளி.*

### கும்பம்

சந்தர்ப்பவாதம் உங்களுக் குப் பிடிக்காது. நன்மைகள் செய்துவரும் குணங்கொண்ட உங்களுக்கு சிலரின் வன்சொற் கள் பிடியாது வேதனைப்படுவீர் கள். நாரிநோ, கல்நோ, சளித் தொல்லை வரும். புதிய பொறுப்புக்கள் வரும். அடிக்கடி ஓடியா டித் திரிவீர்கள். தூரத்துச் செய்திகளால் மனம் வேதனைப் படும். நண்பர்கள் ஏமாற்றுவார்கள். மாணவர்களுக்கு உதவிகள் கிடைத்தாலும் ஒரு மந்தநிலை கொடுக்கும். அரசியல்துறை, குருத்துறை யினருக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்ட நாள்கள்:- திங்கள், வியாழன்.*

### மீனம்

வருங்காலத்தை அறிய எல்லோருக்கும் ஆசையுண்டு. ஆனால் வருங்கால முன்னேற் றத்திற்கு ஒவ்வொருதரும் ஆறும பாடுபடல் வேண்டும். படிப்படி யான ஏற்றம் உறுதிநிலையைக் கொடுக்கும். வீடு மனைச்சிறப்பு வரும். வீண்பகை கொடுக்கும். மாணவர்கள் சில இழப்புக்களை சந்திப்பார்கள். சளித்தொல்லை, தடுமாற்றம் கொடுக்கும். தூரத்தி லிருந்து நற்செய்திகள் வரும். சிலருக்கு பிரயானத் தடை கொடுக் கும். உத்தியோக உயர்வு கொடுக்கும் காலமாகும்.

*அதிர்ஷ்ட நாள்கள்:- திங்கள், வியாழன்.*

# தவத்திரு தோமஸ் அடிகளின் பரிசாக யாழிற்குகிடைத்த செபமாலைத்தாசர் சபை

## இன்று 75ஆவது ஆண்டு நிறைவு விழா

இறை அன்பினாலும் செபதப வாழ்விற்கும் தியான யோக ஆச்சிர மப் பணிக்கும் தனது வாழ்வாலும், இறை பணியாலும் சாட்சியம் பகர இறைவனால் அழைக்கப்பட்ட தவத்திரு. அவ.தோமஸ் அமதி அடிகளாரினால் 1928ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி நிறுவப்பட்ட செபமாலைத் தாசர் துறவு சபை இன்று 75ஆவது ஆண்டு பவளவிழாவைக் கொண்டாடு கின்றது.

யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலை மையில் இன்று காலை 11மணிக்கு யாழ் கோவில் வீதியில் அமைந்துள்ள

### ஞாயிறு நற்பிரசாதம்

அருள் ஆச்சிரமத்தில் நடைபெறும் நன்றிப்பெருவிழாவில் செபமாலைத்தா சர் சபையின் உயர் தலைவர் அருட் திரு. கே.பி. சேவியர் சே.தா. அடிகளா ரும், இந்தியாவிலிருந்து வருகை தந் துள்ள செபமாலைத்தாசர் சபைக்குருக களும் பங்குபற்றுகின்றமை குறிப் பிடத்தக்கது.

1928ஆம் ஆண்டு வணபிதா தோமஸ் அமதி அடிகளாரினால் 7 சந்நியாசிகளைக் கொண்டு உருவாக கப்பெற்ற இச்சபை இன்று எட்டுத்திக் கும் பரந்து பூரணமடைந்து பெற்று விளங்குகின்றது. இப்போது இலங்கை யிலும், இந்தியாவிலும் 15 மறைமா வட்டங்களிலும் 19 ஆச்சிரமங்களைக் கொண்டு இச்சபை இயங்குகின்றது.

இதேபோன்று, பெண்களுக்கென் றும் செபமாலைக் கன்னியர் சபை 1948ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்தில வசாவிளானில் ஆரம்பித்துவைக்கப் பட்டது. இச்சபையினரும் தற்போது 18 இடங்களில் மடங்களை அமைத்து



இயங்கி வருகின்றனர். யாழ். மண் ணின் மைந்தனாகிய தவத்திரு வ.அ. தோமஸ் அடிகளால் நிறுவப்பெற்ற இச்சபையின் செயற்பாடுகள் இன்று யாழ் குடாவில் பெரும் பாலான இடங் களில் விஸ்தரிக்கப் பெற்றுள்ளது.

உலக வாழ்வில் சுகபோகங் களை அனுபவிக்க வேண்டியவர்கள அவற்றை எல்லாம் வெறுத்து, துறவு வாழ்வை மேற்கொள்வது இறைவனின் மீதுள்ள விசுவாசமேயாகும். அந்த வகையில் துறவு வாழ்வை மேற் கொள்ளவென தோமஸ் அடிகள் யாழ்ப் பாணத்திற்கு விட்டுச் சென்ற பரிசா கவே செபமாலைத்தாசர் சபை கருதப் படுகிறது.

இந்தச் சபையினரின் வாசஸ்தல மாக விளங்கும் யாழ.கோவில் வீதி யில் அமைந்துள்ள அருள் ஆச்சிரமம் ஓர் அமைதியான இயற்கை எழில் உள்ள சூழலில் அமைந்தள்ளமை

**இ.அ.தேவராஜன்**

யும் இந்து, கிறிஸ்தவ வேறுபாடுகள் இன்றி அனைத்து மதமக்களும் அங்கு சென்று வழிபடுவதும் மேலும் ஒரு பெருமைககுரிய விடயமாகும்.

இறைவனின் இடைவிடாத அருளி னால் இச்சபை மென்மேலும் வளர்ச்சி பெற்று தனத பணிகளை இப்புவியில் திறம்பட ஆற்ற இந்நாளில் பிரார்த் திப்போமாக.

★

# புதிய தபால் பெட்டி அமைப்பு

கொழும்புத்துறை கிழக்கில் மீளக் குடியமர்ந்த மக்கள் தமது தபால்க ளைச் சேர்க்க வசதியாக யாழ்பிரதம தபாலகம் புதிதாக தபால் பெட்டி ஒன்றை அங்கு அமைத்துள்ளது.

இந்தத் தபால் பெட்டி கொழும்புத் துறை கிழக்கு மூன்றாம் குறுக்கு வீதி யிலுள்ள வர்த்தக நிலையத்தின் முன்பாக வைக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் மீளக்குடியமர்ந்த மக்களின் வசதி கருதி மக்கள் தமது தபால்களைச்சேர்ப்பதற்கு வசதியாக தபால் பெட்டி ஒன்றை அமைத்துத் தருமாறு கொழும்புத்துறை ச.ச. நிலை யத்தினர் யாழ்பிரதம தபாலகததிடம் கோரிக்கை விடுத்திருந்தனர். (ஐ-17)

## கொழும்புத்துறையில்

# சனசமூக நிலையத்தை புதிதாக நிறுவ ஏற்பாடு

அரியாலை,பெப்.2

யுத்த அனர்த்தங்களினால் பெரிதும சேதப்பட்டிருக்கும் கொழும்புத்துறை சனசமூகநிலையத்தை மீளக்கட்டியெ ழுப்புவதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

கொழும்புத்துறை துறையப்பா மகா வித்தியாலயத்துக்கு முன்பாக அமைந் திருக்கும் இந்த சனசமூகநிலையம் யுத்தத்தினால் பலத்த சேதமடைந்துள் ளது.

இந்த சனசமூகநிலையத்தை மீள வும் மாடிக்கட்டடமாக அமைக்கும் முயற்சியாக தற்போது நிலையத்தின இடிபாடுகளை சனசமூகநிலைய இளை ஞர்கள் வாரத்தில் ஒவ்வொரு ஞாயிற றுக்கிழமைகளில சிரமதானமூலம் அகற்றிவருகின்றனர். (ஐ-17)

# ஈராக் மீதான தாக்குதல் முஸ்தீபை கண்டித்து கொழும்பில் ஆர்ப்பாட்டம்!

## அமெரிக்க ஜனாதிபதியின் கொடும்பாவி எரிப்பு

பேருவளை,பெப்.2

ஈராக்மீதான அமெரிக்கத் தாக்கு தல் முஸ்தீபைக் கண்டித்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஜும் ஆத் தொழுகைக்குப் பின்னர் கொள்ளுப பிட்டியில் மாபெரும் ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றது.

கொழும்பிலுள்ள முஸ்லிம் சமூக நல அமைப்புக்களினால் ஏற்பாடு செய யப்பட்டிருந்த இந்த ஆர்ப்பாட்டத்தில நூற்றுக்கணக்கான முஸ்லிம்களுடன் பௌத்த பிக்குமார்களும் கலந்து கொண்டனர்.

ஜும்ஆத் தொழுகையின் பின் கொள்ளுப்பிட்டி பள்ளிவாசலிலிருந்து அமெரிக்கத் தூதரகத்தை, நோக்கி ஆர்ப்பாட்டக்காரர்கள் செல்ல முயற் சித்தனர். ஆனால், சென் மைக்கல் வீதிக்கு அப்பால் செல்ல பொலீஸார் விடவில்லை.

ஆர்ப்பாட்டக்காரர்கள் ஈராக்கையும சதாம் ஹுசைனையும் ஆதரித்து கோஷமிட்டனர். அமெரிக்காவையும், அமெரிக்க ஜனாதிபதியையும் வன்மை யாகக் கண்டித்தனர்.

ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் அமெ ரிக்காவின் கொடியும் தீயிட்டுக் கொளுத தப்பட்டது.

இதனால், நேற்றுமுன்தினம் கொள ளுப்பிட்டிப் பகுதி எங்கும் பலத்த பாது காப்புப் போடப்பட்டிருந்தது. பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்கள் அமைதியாகக் கலைந்து சென்றனர். (எ)

### கட்டட வேலைகள் பூர்த்தி

மாசேரி கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தின் புனரமைப்பு வேலைகள் முடிவடைந்துள்ளன. யுத்தகால நடவடிக்கையின்போது சேதமடைந்த இக்கட்டடத்தின் புனரமைப்பு வேலை களுக்கு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி பன் முகப்படுத் தப்பட்ட நிதி யில் இருநது இரண்டுலட்சத்து இருபத்தையாயிரம ரூபா வழங்கி யிருந்தார். (எ-170)

## பாரதி சனசமூக நிலையம்

**அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்**

முதலாம் பரிசு - 1346
இரண்டாம் பரிசு - 4093
மூன்றாம் பரிசு - 0121

ஆறுதல் பரிசுகள்

| | |
|---|---|
| 1) 0808 | 6) 4833 |
| 2) 3940 | 7) 0638 |
| 3) 4370 | 8) 1988 |
| 4) 3195 | 9) 1794 |
| 5) 1382 | 10) 3484 |

தலைவர்
*வரணி தாவளை, இயற்றாலை, வரணி.*

(14008)


## நன்றி நவிலல்

**திருமதி யூலியற் யேசுதாசன்** *(பேபி ஆன்)*

05.01.2003 இல் இறைபதம் அடைந்த திருமதி யூலியற் யேசுதாசன் அவர்களின் இறுதிச் சடங்கில் நேரடியாகவும், தொடர்பு சாதனங்கள் வழியாகவும் அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறிய திருமுழுக்கு அருளப்பர் ஆலய பங்கு மக்கள், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினர், அரசசார்பற்ற நிறுவனத்தினர் மற்றும் உற்றார், உறவினர் அனுதாபிகள் யாவருக்கும் எமது உளங்கனிந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் ஆன்ம சாந்திக்காக 04.02.2003 செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்கு சுண்டிக்குளி புனித திருமுழுக்கு அருளப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

*823, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.*

கணவன், பிள்ளைகள்,
தாய், சகோதரர்கள்.

(14005)

## 31 ஆம் நாள் நினைவும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
12 - 05 - 1928



மறைவு
03 - 01 - 2003

**அமரர் முதலி வினாசித்தம்பி** *(அரியகுட்டி)*

சீரும் சிறப்புடனே எமை வாழவைத்த
எங்கள் அன்பின் திருவுருவே!
எம்மிதய மெல்லாம் நிறைந்து நிற்கும்
உங்கள் நினைவுதனை என்றென்றும்
நினைப்பதிலே ஆறுதல் அடைகிறோம்.

எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்தியம் இன்று (02.02.2003) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் இந்நிகழ்வில் கலந்து அன்னாரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்தித்து, மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

தற்காலிக முகவரி:
*வட்டு.வடக்கு, சித்தன்கேணி.*
*நிரந்தர முகவரி:*
*எழுதுமட்டுவாழ்தெற்கு,*
*எழுதுமட்டுவாழ்.*

மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

(14001)

## கட்டாய மதமாற்றத் தடைச் சட்டத்திற்கு எதிராக

# அளுத்மாவத்தையில் ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் ஐயப்பன் ஆலயத்துக்குள் புகுந்து அடாவடித்தனம்!

கொழும்பு,பெப்.2

கட்டாய மதமாற்றத் தடைச்சட்டத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட குழு ஒன்று நேற்று முன்தினம் அளுத்மாவத்தையில் உள்ள ஐயப்பன் தேவஸ்தானத்துள் புகுந்து அட்டகாசம் பண்ணியுள்ளது.

பாதணிகளுடன் ஆலயத்துக்குள் சென்று பூஜையிலிருந்த குருக்களை மிரட்டியது; ஆலயப் பொறுப்பாளரைக் கீழே தள்ளி விழுத்தியது. நேற்று முன்தினம் பகல் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:-

அளுத்மாவத்தையில் உள்ள கிறிஸ்தவ தேவாலயத்துக்கு முன்னால் ஆயிரக்கணக்கானவர்கள் - கட்டாய மதமாற்றத் தடைச் சட்டத்திற்கு எதிராக - நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது ஆர்ப்பாட்டக்காரர்களில் சுமார் ஐம்பது பேர் கொண்ட குழு ஒன்று திடீரென அருகிலிருந்த ஐயப்பன் தேவஸ்தானத்துக்குள் நுழைந்தது.

'திபுதிபு' என உட்சென்றவர்கள் ஆலயத்தின் வாயிலில் வைக்கப்பட்டிருந்த பெயர்ப்பலகையைக் கழற்றி எறிந்தனர். அங்கே - மூலஸ்தானத்தில் பூஜையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த - குருக்களையும் ஆலயப் பொறுப்பாளரையும் தகாதவார்த்தைகளால் திட்டினர்; மிரட்டினர்.

பூஜையில் ஈடுபட்டிருந்த மலையாளக் குருக்கள் சுனில் குமார் நீலகண்டன், அச்சமடைந்து ஆலயத்துக்கு வெளியே வருவதற்கு மூலஸ்தானத்திலிருந்து வெளியே வந்தார். அவருடன் ஆலயப் பொறுப்பாளர் பொன்னையா முத்தையாவும் வந்தார். இருவரையும் கீழே தள்ளி வீழ்த்தியது ஆர்ப்பாட்டக் கும்பல். அங்கு சிறிது நேரம் நின்று உக்கிரதாண்டவம் ஆடிவிட்டு வெளியேறியது அந்தக் கும்பல்.

இது பற்றி அறிந்த கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மனோகணேசன் உடனடியாகச் சம்பவம் நடந்த இடத்துக்குச் சென்றார். கலகக் கும்பல் பற்றி விசாரித்தார்.

சம்பவம் பற்றி மோதறைப் பொலீஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டது. விசாரணைகள் நடைபெறுகின்றன என்று மோதறைப் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி கூறினார். (ஐ)

### யாழ். சோனகதெருப் பகுதிக்கு

## சுகாதார நடவடிக்கையை விஸ்தரிக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.2

யாழ்.மாநகரசபையின் சுகாதாரப் பிரிவினரும், தமிழீழ சுகாதார சேவைப் பிரிவினரும் இணைந்து மேற்கொண்டு வரும் சுகாதார நடவடிக்கைகளை யாழ். சோனக தெரு (முஸ்லீம் பகுதி) பகுதிக்கும் விஸ்தரிக்கவேண்டுமென அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சோனகதெருப் பகுதியல் பெரும் சுகாதாரச் சீர்கேடு நிலவுவதுடன், நுளம்பு உற்பத்தியும் அதிகரித்துள்ளதாகவும் -

இதனால் இப்பகுதியைச் சேர்ந்த பலர் பல்வேறு நோய்க்கு இலக்காவது அதிகரித்து வருவதாகவும் - அவர்கள் தமது வேண்டுகோளில் குறிப்பிட்டுள்ளனர்.

எனவே குருநகர் பகுதியில் அண்மையில் மேற்கொள்ளப்பட்டது போன்று தமது பகுதியிலும் சுகாதார நடவடிக்கைகளை மேற்கொண்டால் தாம் அதற்குப் பூரண பங்களிப்பு வழங்கவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில் - சோனகதெருப் பகுதியில் உள்ள இடிந்த பாழடைந்த கட்டடங்கள் மற்றும் பற்றைகள் ஆகியவற்றுக்குள் இறைச்சிக்காக வெட்டப்படுகின்ற ஆடு, மாடுகளின் எச்ச சொச்சங்களை விசமிகள் சிலர் கொட்டி வருவதாகவும் கூறப்பட்டது. (எ-10)

## மரண அறிவித்தல்

### சின்னையா கண்ணப்பு

கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா கண்ணப்பு நேற்று (01.02.2003) சனிக்கிழமை காலை காலமானார்.

அன்னார் திருமதி ஆச்சிப்பிள்ளையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற திருமதி மங்கையர்க்கரசி தியாகராஜாவின் தந்தையும், காலஞ்சென்ற தியாகராஜாவின் மாமனாரும், செல்வன் (லண்டன்), சங்கர் (லண்டன்) ஆகியோரின் பேரனும், துளசியின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.02.2003) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கட்டை ஆலடி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஆலடி ஒழுங்கை,*
*கோண்டாவில் கிழக்கு.* (14007)

தகவல்:
மனைவி.

### ஓவியம் தொடர்பாக சஞ்சிகை வெளியிட ஏற்பாடு

யாழ்ப்பாணம்,பெப்.2

திருமறைக் கலாமன்ற ஓவியக் கலைவட்டத்தினால் ஓவியத்துறை சார்ந்த மாதாந்த சஞ்சிகை ஒன்று வெளியிடப்படவுள்ளது.

'ஓவியா' என்ற தலைப்பில் வெளியிடப்படவுள்ள இந்தச் சஞ்சிகையில் ஓவியத்துறை சார்ந்த கலைஞர்கள் மற்றும் மாணவர்களது ஆக்கங்கள் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-4)

### கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,பெப்.2

யாழ்.மறைக்கோட்டப் பங்குகளில கத்தோலிக்க திருமறை நெறியைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கும் செயலமர்வும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு 'அகவொளி' மண்டபத்தில் நடத்தப்படவுள்ளது.

மறைமாவட்ட மறைக்கல்வி நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தச் செயலமர்வில் கலந்துகொள்வுள்ள ஆசிரியர்களை 6ஆம்,7ஆம்,8ஆம் தரங்களுக்கான பாடநூல்களையும் தம்முடன் எடுத்துவருமாறு பொறுப்பாசிரியர் கேட்டுள்ளார். (எ-10)

### கட்டுரைப்போட்டி

யாழ்ப்பாணம்,பெப்.2

யாழ்.மறைமாவட்ட இளைஞர் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் திறந்த அடிப்படையிலான கட்டுரைப் போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளது.

'இன்றைய மாணவர்களின் கல்வி நிலையில் பெற்றோரின் பங்கு' என்ற தலைப்பில் இந்தப்போட்டி நடத்தப்படவுள்ளது. (எ-4)

### ஊனமுற்ற மாணவருக்கு உதவி வழங்க ஏற்பாடு

யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் கல்வி கற்கும் வறுமைக் கோட்டுக்குட்பட்ட பிறப்பால் மற்றும் யுத்த அனர்த்தங்களால் ஊனமுற்ற மாணவர்களுக்கு உதவிகள் வழங்கப்படவுள்ளன.

இதில் பயன்பெற விரும்புகின்ற மாணவர்கள் தமது சுயவிவரங்களைத் தாம் கல்வி கற்கின்ற பாடசாலை அதிபரின் சிபாரிசுக் கடிதத்துடன் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்பு தலைவர், மானிப்பாய் ஸ்ரீலங்கா லியோக் கழகம், லயன்ஸ் காரியாலயம், மானிப்பாய் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டுமென கழகத்தலைவர் எஸ்.ரமணன் அறிவித்துள்ளார். (எ-10)


### மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, லண்டனில் பணிபுரியும், விசாகநட்சத்திரம், 1972 இல் பிறந்த, லண்டன் பிரஜாவுரிமையுள்ள மணமகனுக்கு அழகிய 5 அடி உயரமுள்ள மணமகள் தேவை. சாதகக் குறிப்பு, புகைப்படங்களுடன் நேரில் சமுகம் தரவும்.

ப.கிருஷ்ணமூர்த்தி,
தேவி அச்சகம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
(14009) போன் : 2789

காவேரியின் வாடிக்கையாளர்கள்....

மலிவு விற்பனை

பணத்தின் பெருமையறிந்தோர் அவர்களின் தெரிவுக்கென

* பட்டு முதல் இன்றைய புதிய ரக சாறிகள்
* இளம் நங்கையர்களுக்கேற்ற
  - பஞ்சாபி
  - சோளிகிற்
  - ஸ்கேட் அன் பிளவுஸ்
  - கவுண்
  - சீத்தை
  - றெஸ்மெற்றீரியல்
* ஆடவர் விரும்பும் Box சேட் உட்பட பல வகை சேட் வகைகள் - மற்றும்
  - வேட்டி
  - சாறம்
  - ரவுசர் லெந் இவையாவும்

பாதிக்குப்பாதி விலைக்கழிவில்

தொடர்கிறது

காவேரி சில்க்ஸின் மலிவு விற்பனை அகம்
77, பெரியகடை
யாழ்ப்பாணம்.

(சி-26321)

# ஈராக்கின் எண்ணெய் வளமே அமெரிக்காவின் ஒரே இலக்கு!

## எண்ணெய்க் கிணறுகளை எரிப்பாரா சதாம்?

வாஷிங்ரன்,பெப்.2

ஈராக்கின் தலைமைப் பதவியிலிருந்து சதாம் ஹுசேய்னை நீக்குவதுதான் அமெரிக்காவின் முதல் இலட்சியம். என்றாலும் அடுத்த லட்சியம் அதன் எண்ணெய் தொழிலை நேரடியாகக் கட்டுப்படுத்துவதுதான் என்பது வெளிப்படுகின்றது.

அமெரிக்க அரசு நிறுவியுள்ள உயர்நிலை பணிக்குழு இதற்கான வேலைகளில் இறங்கிவிட்டது. ஈராக்கின் எதிர்க்கட்சித் தலைவர்கள், எணணெய்த்துறை நிபுணர்கள், தொழில் நிறுவன அதிகாரிகள் ஆகியோரை அது ஆலோசனை கலந்து வருகிறது.

உலகிலேயே சவூதிஅரேபியாவுக்கு அடுத்தபடியாக அதிக அளவு எண்ணெய் இருப்பைக் கொண்டிருப்பது ஈராக்தான். அதன் வசம் 1500 இற்கும் மேற்பட்ட எண்ணெய்க் கிணறுகள் இருக்கின்றன.

அமெரிக்க ராணுவம், ஈராக்கில் கால்வைக்க ஆரம்பித்தாலோ அல்லது ஈராக் மீது தாக்குதல் தொடுத்தாலோ இந்த எண்ணெய் கிணறுகள பாதுகாப்பாக இருக்குமா என்ற சந்தேகம் சிலருக்கு ஏற்பட்டது. குவைத்தை ஆக்கிரமித்த ஈராக்கை வெளியேறச் சொன்னபோது, குவைத்தின் சில எண்ணெய்க் கிணறுகளுக்கு தீயை வைத்துவிட்டு அது வெளியேறியது. அதேபோல இப்போதும் நடநதால் என்ன செய்வது என்பது அவர்களுடைய கவலை.

எண்ணெய்க் கிணறுகளை எரிக்க சதாம் முடிவு செய்தாலும் அதைச் செய்ய வேண்டிய அதிகாரிகள் தயக்கம் காட்டுவார்கள் என்று அமெரிக்க நிபுணர்கள் சிலர் கருதுகின்றனர். அடுத்த வீட்டுக்கு நெருப்பு வைக்கத் தயங்காதவன், தன் வீட்டுக்கே நெருப்பு வைக்கச் சொன்னால் நிச்சயம் தயங்குவான் என்று உளவியல் ரீதியாக அவர்கள் இக்கருத்தைக் கொண்டுள்ளனர்.

சதாம் ஹுசேனுக்கு பிறகு ஈராக்கின் பொருளாதாரத்தை வலுப்படுத்த வேண்டும். அதற்கு எண்ணெய் ஏற்றுமதியைப் பெருக்க வேண்டும்.

இப்போதுள்ள எண்ணெய்க் கிணறுகளை முழுமையாக பயன்படுத்த வேண்டும்; புதிய கிணறுகளைத் தோண்டவேண்டும்; எண்ணெய் எடுக்கும் பணியை மேலும் நவீனப்படுத்த வேண்டும் என்பது அமெரிக்க அதிகாரிகளின் திட்டமாக இருக்கிறது.

சதாமை இறக்கிவிட்டால் ஈராக்கில் என்னென்ன மாற்றங்கள் வரும் என்று ஊகிக்க முடியவில்லை என்றும் சில அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

## பின்லேடனிடம் கதிரியக்க குண்டு

லண்டன்,பெப்.2

அணுகுண்டு போன்ற ஆபத்தான கதிரியக்கக்குண்டு ஒன்றை பின்லேடன் உருவாக்கியுள்ளார் என்று பிரிட்டிஷ் உளவுத்துறை தெரிவித்திருக்கிறது.

தீவிரவாதப் பயிற்சியாளர்கள் போன்று 'அல் - கெய்டா' பயிற்சி முகாமினுள் ஊடுருவிய உளவுத்துறை ஏஜென்டுகள் இந்தக் கதிரியக்க குண்டு இருப்பதை உறுதிப் படுத்தியிருக்கின்றனர். (ஐ)

## சதாமை சந்திக்க ஆயுத சோதனை தலைவர் தயார்

நியூயோர்க்,பெப்.2

ஈராக் அதிபர் சதாம் ஹுசேய்ன் அழைத்தால் அவரைச் சந்தித்து பேசத்தயார் என்று ஐ.நா. ஆயுதச் சோதனை குழு தலைவர் ஹன்ஸ் பிளிக்ஸ் கூறினார்.

ஐ.நா. சபைக்கு வெள்ளிக்கிழமை வந்த அவர், செய்தியாளர்களிடம் பேசினார். அமெரிக்கா, ஈராக் விவகாரம் அபாயகரமான நிலையில் இருக்கின்றது. அதிபர் சதாமை சந்திக்கும் சூழ்நிலை ஏற்பட்டால் இதை அவரிடம் எடுத்துக் கூறுவேன் என்றார் பிளிக்ஸ். (ஐ)

# உணவில் கலப்படம் செய்ய தீவிரவாதிகள் திட்டமாம்!

## உலகநாடுகளை எச்சரிக்கிறது உலக சுகாதார நிறுவனம்

நியூயோர்க்,பெப்ரவரி2

**உலகெங்கும் உணவு விநியோகத்தில் குழப்பங்களை ஏற்படுத்த சர்வதேச தீவிரவாதிகள் முயற்சிக்கக்கூடும் என்று உலக சுகாதார நிறுவனம் எச்சரித்திருக்கின்றது.**

**இரசாயன, உயிரியல் பதார்த்தங்களை உணவில் கலப்பதன் மூலம் பெரும் உயிர் அழிவுகளை ஏற்படுத்துவது அவர்களது இலக்கு என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.**

தீவிரவாதிகளின் இத்தகைய மறைமுகத் தாக்குதல்கள் குறித்து எச்சரிக்கையாக இருக்குமாறு நாடுகளைக் கேட்டிருக்கிறது. உலக சுகாதார நிறுவனம்.

இரசாயன மற்றும் உயிரியல் பொருள்கள் உணவோடு கலக்கப்பட்டால் பெரும் உயிரிழப்புக்கள் ஏற படுவதுடன், புற்று நோய் போன்ற கொடிய நோய்கள் ஏற்படவும் வழிவகுக்கும் என்று உலகசுகாதார நிறுவனத்தின் அறிக்கை கூறுகிறது.

பாதிப்படைந்த கலப்படம் செய்த உணவுவகைகளை உண்பதால் உலகில் ஆண்டு தோறும் 15 லட்சம் பேர் உயிரிழப்பதாகவும் -


தீவிரவாதக் குழுக்கள் இத்தகைய செயலில் இறங்கினால் இது போன்று பலமடங்கு அழிவுகள் ஏற்படலாம் எனவும் -

உலகசுகாதார நிறுவனம் வெளியிட்ட 45 பக்க கையேடு ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ)



**ஆப்கானிஸ்தானின் கந்தகாரில் பயணிகள் மினிபஸ் தகர்க்கப்பட்ட அனர்த்தம் நிகழ்ந்த இடத்தில் எடுக்கப்பட்ட படம்.**

**டாங்கி எதிர்ப்பு ஏவுகணை மூலம்தகர்க்கப்பட்டதாகக் கூறப்படும் பஸ்ஸின் சிதைவுகளை படத்தில் காணலாம் இச்சம்பவத்தில் 18 பயணிகள் உயிரிழந்தனர்.**



**வட அமெரிக்காவுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை மெக்ஸிக்கொ அரசு புதுப்பிப்பதற்கு எதிர்ப்புத்தெரிவித்து பல்லாயிரக்கணக்கான மெக்ஸிக்கோ விவசாயிகள் தலைநகரில் பேரணி நடத்திய காட்சி.**

**அமெரிக்காவின் இறக்குமதிகள் தங்கள் விவசாய நடவடிக்கைகளை பெரிய அளவில் பாதிக்கும் என்று மெக்ஸிக்கோ விவசாயிகள் அஞ்சுகின்றனர்.**

# சென்னை வான்பரப்பில் அத்துமீறி பறந்த அமெரிக்கப் போர் விமானம்

சென்னை,பெப்.2

அமெரிக்க இராணுவத்திற்குச் சொந்தமான போர் விமானம் ஒன்று, இந்தியாவின் எந்தவித அனுமதியுமின்றி சென்னையில் சுமார் 2மணிநேரம் பறந்துள்ளது.

இச்சம்பவம் வெள்ளிக்கிழமை நடநததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சென்னையில், அமெரிக்க போர் விமானம் ஒன்று நேற்றுமுன்தினம் மதியம் 12 மணிமுதல் 2 மணிவரை பறந்துள்ளது. மேலும், சென்னையில விமானநிலையக் கட்டுப்பாட்டு அறையிலிருந்து அனுப்பப்பட்ட சிக்னல்களுக்கு அந்த விமானத்திலிருந்து எந்த வித பதிலும் தரப்படவில்லை.

சுமார் 35 ஆயிரம் அடி உயரத்தில் பறந்த அந்த விமானம், அதன் பிறகு 'ராடர்' திரையில் இருந்து தப்பிச்சென்றுள்ளது.

அமெரிக்க போர் விமானம் இவ்வாறு அத்துமீறி இந்தியப்பகுதிக்குள் நுழைவது இது இரண்டாவது சம்பவமாகும். (ஐ)

## ஆண் ஆசிரியர்கள் பாடம் நடத்தத் தடை

காபூல்,பெப்.2

ஆப்கானிஸ்தானின் ஹேரத் மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் ஆண் ஆசிரியர்கள் பாடம் நடத்த பெற்றோர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

பெற்றோர்கள் கடிதம் மூலம் தெரிவித்த எதிர்ப்பை அடுத்து ஆண் ஆசிரியர்கள் பெண்களுக்கு பாடம் நடத்த தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

இதற்கு மனித உரிமைகள் அமைப்பு தடை விதித்திருக்கிறது.

## வல்லுறவு புரிந்த 4 பேருக்கு தூக்குத் தண்டனை


ஈரான் நாட்டின் அராக் மாகாணத்தில், பெண்களை நயவஞ்சகமாக டாகசியில் கடத்திச்சென்று கற்பழித்து வந்த 4 பேர் பொது இடத்தில் வியாழக்கிழமை தூக்கில் போடப்பட்டனர்.

டாக்சி சாரதிகள் போலவும், பயணிகளைப் போலவும் நடித்து, ஊருக்குப்போக உதவி செய்கிறோம் என்று கூறி இளம்பெண்களை டாக்சியில் ஏற்றிச்சென்று ஊருக்கு வெளியே அவர்களை வல்லுறவு புரிந்துகொண்டிருந்தது இக்கும்பல்.

மான, அவமானத்துக்கு அஞ்சிய பெண்கள், இதை வெளியே சொல்லாமல் இருந்ததால் இவர்களின் அட்டூழியம் தொடர்ந்து கொண்டிருந்தது. தற்செயலாக இவர்கள் பிடிபட்டனர். அதையடுத்து இந்த 4பேரும் பொது இடத்தில், ஏராளமானோர் பார்த்திருக்க தூக்கில் போடப்பட்டனர்.



**சீனாவில் புத்தாண்டு நேற்றுத் தான் பிறந்தது. லூனர் புதுவருடத்தை சீன மக்கள் கோலாகலமாக கொண்டாடிக்கொண்டிருக்கின்றனர். ஆட்டு வண்டியில் வீதியில் செல்லும் சீனக்குழந்தை.**



உ
கணபதி துணை

## நல்லூர் அருள்மிகு ஸ்ரீ கைலாசபிள்ளையார் கோயில்

## மகா கும்பாபிஷேகம்

ஐங்கரன் அடியார்களே!

நிகழும் சித்ரபானு வருஷம் தைத்திங்கள் 23ஆம் நாள் (06.02.2003) வியாழக்கிழமை காலை மணி 8.55 முதல் 10.26 வரையுள்ள சுபமுகூர்த்தத்தில் மகா கும்பாபிஷேகம் நடைபெற விநாயகப் பெருமானின் திருவருள் கைகூடியுள்ளது.

இன்று (02.02.2003) ஞாயிற்றுக்கிழமை

காலை 9.15 மணிக்கு கர்மாரம்பம், விக்னேஸ்வர பூஜை, புண்யாக வாசனம், அனுக்ஞை, திரவ்யசுத்தி, கணபதி ஹோமம், பூஜை.

மாலை 3.00 மணிக்கு பேரீதாடனம், ரக்ஷோக்ன ஹோமம், கிராம சாந்தி, அஷ்டபலி, பிரவேசபலி, திசாஹோமம், சாந்தி ஹோமம், மூர்த்தி ஹோமம், வாஸ்து சாந்தி.

*அடியார்கள் அருள்பெற வருமாறு அழைக்கப்படுகின்றனர்.*

நல்லூர், யாழ்ப்பாணம். (C/26326) - கைலாச பிள்ளையார் தேவஸ்தானம்.



## கண்ணீர் அஞ்சலி

எமது கலாசாலை இரண்டாம் வருட ஆரம்பநெறி C பிரிவைச் சேர்ந்த ஆசிரிய மாணவி திருமதி கு.இன்பவதி அவர்களின் தாயார்

### இ.அன்னம்மா

அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(13920) கோப்பாய் ஆசிரிய கலாசாலைச் சமூகத்தினர்.



## 31ஆம் நாள் நினைவலைகள்

தோற்றம் 30 - 01 - 1928



மறைவு 03 - 01 - 2003

அமரர்

### இராசதுரை அமரசிங்கம்

*(இளைப்பாறிய சுங்க அதிகாரி)*

*அன்பாய் பண்பாய் ஆதரவாய் வாழ்ந்தீர்! ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்*

எமது அன்புக் கணவரின் வீட்டுக்கிருத்தியம் இன்று (02.02.2003) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்ம சாந்திக்கிரியைகளிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும்வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

டச் றோட், உடுவில். (C/26319) மனைவி சு.அமரசிங்கம்.



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 15 - 09 - 1944



விண்ணில் 13 - 02 - 2002

அமரர்

### ஐயாத்துரை கந்தையா (பாப்பா)

திதி: 02.02.2003

ஓராண்டு சென்றாலும் ஆறவில்லை எம் துயரம்
மறக்கக் கூடியதா உங்கள் உருவம்?
நீங்கள் பிரிந்த இடத்துப் புல் இறப்பதில்லை ஒருபோதும்
இன்று நாம் தவிக்கின்றோம் உங்கள் பிரிவால்!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!!!

பழைய வீதி, ஆறுகால் மடம், ஆனைக்கோட்டை. (c/26320) பிரிவால் துயருறும்: மனைவி, பிள்ளைகள்.


## 'பஞ்சவர்ணக் கதம்பம்' நூல்வெளியீட்டுவிழா

யாழ்ப்பாணம்,பெப்.2

எஸ்.சிறீஸ்கந்தராசா எழுதிய 'பஞ்சவர்ணக் கதம்பம்' நூல் வெளியீட்டு விழா இன்று மாலை 5.15 மணிக்கு வெள்ளவத்தையிலுள்ள கொழும்பு தமிழ்ச்சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ்ச்சங்கத் தலைவர் கலாநிதி இ.சிவகுருநாதன் தலைமையில் நடைபெறும் இந்த வெளியீட்டுவிழாவில் வரவேற்புரையை ஆ.இரகுபதி பாலஸ்ரீதரனும், வெளியீட்டுரையை பேராசிரியர் சோ.சந்திரசேகரனும், சிறப்புரையை உயர் கல்வி அமைச்சின் செயலாளர் உடுவை எஸ்.தில்லைநடராசாவும், மதிப்புரையை கலாநிதி ஜின்னாஹ் செரிபுடீனும் நூல் பற்றிய ஆய்வுரையை இலங்கை வானொலியைச் சேர்ந்த இளையதம்பி தயானந்தாவும் நிகழ்த்துவர். (எ-5)

## இந்து கலாசார அமைச்சரிடம் கோரிக்கை

கைதடி,பெப்.2

மறவன்புலோவில் உள்ள தமது ஆலயத்தை சென்று பார்த்துவர அனுமதி பெற்றுத் தருமாறுகோரி மறவன்புலோ பெரியதம்பிரான் ஆலய நிர்வாகத்தினர் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனிடம் கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (எ-75)

## வெடிகதிர் நோயினால் நெற்பயிர்கள் நாசம்

வரணி,பெப்.2

வரணிப் பகுதியில் நெற்பயிர்கள் வெடிகதிர் நோயினால் பாதிப்படைந்துள்ளன.

இதனால், கதிர்கள் பதர்தன்மை அடைந்துள்ளதுடன் விவசாயிகள் எதிர்பார்த்த அறுவடை கிடைக்காது போகலாம் என்றும் கவலை தெரிவிக்கப்பட்டது.

இந்நோய் மாவிலில் வயல்வெளி, மாசேரி வயல்வெளி உட்பட சில வயல்நிலங்களிலும் பரவியுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (எ-170)


gtz ஜி.ரீ.சற். யாழ். புனரமைப்புத் திட்டம்

## வெற்றிடம்

பகல் - இரவு காவலாளி

வயது : 25 - 40

ஆங்கிலம் பேசும் ஆற்றல் விரும்பத்தக்கது.

சுயவிவரத்துடன் கீழ்க்காணும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

வெளிக்கள அணித்தலைவர்,
ஜி.ரீ.சற். யாழ். புனரமைப்புத் திட்டம்,
இல.11, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

விண்ணப்ப முடிவு திகதி : 08.02.2003 (C/26325)



உலகின் முன்னணி தொழிநுட்ப வல்லுநர்களுடன் பாவிக்கப்படும் இக்குறியீட்டின் அர்த்தம்........ உங்களுக்கு!

### புதிய பிரிவுகள்

பல மாணவர்களின் வேண்டுகோளிற்கு அமைய பின்வரும் கற்கை நெறிகள் ஆரம்பமாகின்றன.



- Dip. in MS Office
- Dip. in Desktop Publishing
- Dip. in Video Mixing
- Visual Basic
- Java Programming

*STP* Computer World (Pvt.) Limited
54A, Kanthanmadam, Jaffna Branch: Sankaththanai, Chavakachcheri.



ARDO ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம்
47/2, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

## ஆண்டு விழா 04.02.2003

மேற்படி தினம் 04.02.2003 செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு நிலைய முன்றிலில் நடைபெறவுள்ளது. அன்று எம்மால் ஆண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. அத்தோடு மாற்று வலுவுடையோரின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

அனைவரையும் விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு:-

விழாவின் முதலாவது நிகழ்வான முச்சக்கரவண்டி, துவிச்சக்கர வண்டி ஓட்டப்போட்டிகள் காலை 7.00 மணிக்கு நிலைய முன்றிலில் இருந்து ஆரம்பமாகும். பங்குபற்ற விரும்பும் மாற்றுவலுவுடையோர் மன்ற முன்றிலில் உரிய நேரத்திற்கு சமுகம்தருமாறு வேண்டப்படுகிறீர்கள்.

க.கோபாலகிருஷ்ணன் செயலாளர்.

(1397?)




யாழ் மண்ணில் அறிமுகப்படுத்துகிறோம்

# சிங்க பாம்

வேதனையிலும் புன்னகை





தசை வலி தலை வலி சுளுக்கு மூட்டு வலி இருமல் தடிமல் முதுகு வலி

வேதனையை வென்றிடும் சிம்ம பலம்

தயாரித்த விநியோகஸ்தர்: PHARMCO MARKETING SERVICES (PVT) LTD.

ஏக விநியோகஸ்தர்:- JEGHAN PHARMACY NO.462/B,HOSPITAL ROAD, JAFFNA. TEL.021- 2 222194

## அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இடம்பெறும்

# சிறுவர் துஷ்பிரயோகங்களை மூடிமறைப்பதில் தீயசக்திகள்

## தெளிவுபடுத்துகிறார் சு.ப.தமிழ்ச்செல்வன்

யாழ்ப்பாணம்,பெப்.02

இராணுவக்கட்டுப் பாட்டுப்பகுதிக்குள் இடம்பெறும் சிறுவர் உரிமை மீறல்கள் மற்றும் சிறுவர் மீதான துஷ்பிரயோகங்களை மூடிமறைக்கும் பணியில் சில தீயசக்திகள் முனைப்பாக ஈடுபட்டுள்ளன. இதனால்தான் அவை விடுதலைப் புலிகளே சிறுவர்களைப்படையில் சேர்த்துக் கொள்கின்றனர் என்றும் - சிறுவர்களைக் கடத்துகின்றனர் என்றும் - விஷமப் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

- இவ்வாறு நேற்று முன்தினம் 'யுனிசெவ்' அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளரைச் சந்தித்துப் பேச்சு நடத்திய பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

மேற்படி பேச்சுகள் தொடர்பாக செய்தியாளர்கள் அவரிடம் கேள்வி எழுப்பியபோது:-

இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அதிகளவில் சிறுவர் உரிமை மீறல்களும், சிறுவர் துஷ்பிரயோகங்களும் நடைபெற்று வருகின்றன. இவற்றை மூடிமறைக்கும் முகமாக சில இனவாத சக்திகள் எம்மீது விஷமப்பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றன. இது பெரும் தவறாகும்.

இது தொடர்பாக எம்முடன் பேச்சு நடத்திய 'யுனிசெவ்' அமைப்பின் நிறைவேற்றுப்பணிப்பாளருக்கு தெளிவாக விளக்கியுள்ளோம்.

புலிகள், சிறுவர்களை படையில் இணைத்துக்கொள்கிறார்கள், சிறுவர்களை கடத்துகின்றார்கள் எனப் புராணம் பாடிக்கொண்டிருப்பவர்கள் அதனை ஆதார பூர்வமாக நிருபிக்கவும் முன்வரவேண்டும். அப்படி நிருபிக்காவிட்டால், அதற்கான நடவடிக்கைகளை எடுக்கவும் நாம் தயாராகவுள்ளோம்.

சிறுவர் உரிமைகள் மதிக்கப்பட வேண்டும் என்பது தொடர்பாக எமது தேசியத் தலைவரும் ஓர் இறுக்கமான முடிவையே கொண்டுள்ளார். அவருடைய வழிகாட்டலுக்கு அமைவாக சிறுவர்களுக்கான வேலைத்திட்டம் ஒன்றை நாம் அமைத்துள்ளோம். சர்வதேச சமூகத்திற்கும் இது காண்பிக்கப்படவுள்ளது. இத்திட்டத்தின் மூலம் யுத்தத்தால் பாதிப்படைந்த பெருமளவு சிறுவர்களுக்கு புனர் வாழ்வு அளிக்க முடியும் இதற்கு உதவ சர்வதேச சமூகம் முன்வரவேண்டும்.

இன்று இங்கு வந்துள்ள 'யுனிசெவ்' அமைப்பின் பணிப்பாளர் இங்குள்ள நிலைமைகளை நேரடியாகப் பார்வையிட்டதுடன், சிறுவர்களின் உரிமைகள் தொடர்பாக இங்குள்ள மக்களுடனும் உரையாடினார். இதன்மூலம் இங்குள்ள நிலைமைகளை அவர் தெளிவாக தெரிந்தும் கொண்டார்.

இங்கு எமது அரசியல் செயலகங்களில் போரினால் பாதிப்படைந்த பெருமளவு சிறுவர்கள் தஞ்சமடைந்து வருகின்றனர். அவர்களை நாம் நடுத தெருவில் விட்டுவிட முடியாது.

அவர்களைப் பெற்றோர்கள், உறவினர்களிடம் மீண்டும் ஒப்படைத்து வருகிறோம். எமது கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் சிறுவர்களை வேலைக் கமர்த்துவதையும் சிறுவர்கள் பிச்சை எடுப்பதையும் நாம் முற்றாகத் தடைசெய்துள்ளோம்.

மொத்தத்தில் சிறுவர்களுக்கான அனைத்து நலன்களையும் பேணுவதில் எமது இயக்கம் தீவிர அக்கறை காட்டி வருகிறது. இதனைப் புரிந்துகொள்ளாத ஜனாதிபதி சந்திரிக்காவும், சில இனவாதிகளும் எம்மீது விஷமப்பிரசாரங்களை மேற்கொண்டு வருவது விரும்பத்தக்க விடயமல்ல.

- என்றார் அவர். (எ-8)

# 'மைலோ' இறுதி ஆட்டத்துக்கு மத்திய கல்லூரி அணி தெரிவு

கொழும்பு,பெப்.2

'மைலோ' கிண்ணத்துக்கான 16 வயதுக்குட்பட்ட பாடசாலை அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று கொழும்பில் இடம்பெறும் இறுதிப்போட்டியில் யாழ்.மத்திய கல்லூரி அணி வேலுவன தேசிய கல்லூரி அணியுடன் மோதுகின்றது.

யாழ்மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட யாழ்.மத்திய கல்லூரி இந்தச் சுற்றுப் போட்டியில் பங்குபற்றியது. யாழ்.மத்திய கல்லூரி பங்குபற்றிய 3 ஆட்டங்களிலும் வெற்றி பெற்று அரையிறுதிப் போட்டிக்கு தகுதிபெற்றது.

கொழும்பு லலித் அத்துலத்முதலி வித்தியாலயத்துடன் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் 2 - 0 கோல்களால வெற்றி பெற்று இறுதி ஆட்டத்துக்கு யாழ்.மத்திய கல்லூரி தெரிவானது.

இந்த ஆட்டத் தொடரில் யாழ்மத்திய கல்லூரி வீரரான கே.கமிலன் சிறப்பாக ஆடியதால் தேசிய அணிக்கு தெரிவாக சிபாரிசு செய்யப்பட்டுள்ளார். (ம-3)

# இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு,பெப்.2

நல்லூர் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையேயான கபடிப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு அரியாலை சித்திவிநாயகர் ஆலய வீதியில் இடம்பெறவுள்ளது.

இப்போட்டிகளில் ஐந்து கழகங்கள் கலந்துகொள்ளவுள்ளன.

(ம-86)

○ ○ ○

வலிகாமம் தெற்குப பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களிடையேயான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இப்போட்டிகளில் 26 கழகங்கள் பங்குபற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ம-5-86)

○ ○ ○

யாழ்ப்பாணம்,பெப்.2

கொக்குவில் வளர்மதி சனசமூக நிலையம் வருடாந்தம் நடத்தும் 'விக்ரன்-ராஜன்-கங்கு' ஞாபகார்த்தக் கின்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டியில இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிமுதல் கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:-

முற்பகல் 9.00 மணி - கொக்குவில் கே.எபி.எபி.எபி.வி.க. அணி எதிர் யாழ்.பல்கலைக்கழக அணி.

பிற்பகல் 1.30 மணி - ஜொலிஸ்ரார் வி.க.எதிர் யங்ஸ்ரார் வி.க.

○ ○ ○

ஊர்காவற்றுறை பிரதேசசெயலர் பிரிவில் உள்ள பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடைபெற்று வரும் போட்டித் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை 9.00 மணிமுதல் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (ம-5-73)

○ ○ ○

பருத்தித்துறை உதைபந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் வதிரி பொயர்ஸ் விளையாட்டுக்கழகமும், கொற்றாவத்தை சிவாவந்தா விளையாட்டுக்கழகமும் மோதுகின்றன

(ம-5-182)


**கனடா → கல்வி, வேலைவாய்ப்பு → குடியுரிமை**

**CANADA → STUDY, WORK & MIGRATE**

**கனடாவில் கல்வி E-COMMERCE & TRAVEL & TOURISM**

நியூயோர்க்கிலைச் சில மணிநேரங்களில் சென்றடையக்கூடிய ரொறன்டோ அல்லது வான்கூவர் நகரில் கனேடிய தொழில் தருநர்களின் ஊதியத்துடன் பகுதிநேர வேலைவாய்ப்பு வழங்கப்படும்.

**அனுமதிக் கட்டணம் :**

**கனேடியன் டொலர் 400 மட்டுமே!**

**வீசா உத்தரவாதம் (CONDITIONS APPLY)**

**Admission on the Spot** நேர்முகத் தேர்வின்போது நேரடி அனுமதி வழங்கப்படும்.

கனடாவிலிருந்து வருகை தந்துள்ள **PRONTO DATA** கல்லூரியின் தலைவரும் கொழும்பு **IEMC Global Group (PV-T) LTD** இன் தலைவரும் உங்களை நேரடியாக 04.02.2003 செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணிமுதல் 6.00 மணிவரை **Hotel Green Inn, No.60, Kandy Road, Jaffna** என்ற இடத்தில் சந்திக்கின்றார்கள். ஒவ்வொரு மாதமும் புதிய பிரிவு பதிவுசெய்யப்படும்.

கல்வித் தகைமை : க.பொ.த. சா/த மட்டுமே!

**TOEFL IELTS** அவசியம் இல்லை.

வெற்றிகரமாக விசா பெற்றுக்கொள்ள விசா நேர்முகப்பரீட்சை சம்பந்தமாகப் பயிற்சி வழங்கப்படும்.

*SUCCESS QUARANTEED*

தொடர்புகளுக்கு :

**Renuka 0777-743370 Anusha 0777-711444 Praga 0777-798147**

Organised by

**IEMC Global Group (PVT.) LTD.**

In Colloboration with Canadian College of applied Arts & Technology (PVT.) LTD.

No.7, Eashwari Road, Colombo - 6.

T.P. : 366780, 559766, 559767, 074 513161

E-mail iemcsp@sltnet.lk.

web. www.iemc global.com.

(C/26324)



**ராஜா** யாழ்ப்பாணம்.

கலைமகளிலும் இத்திரையிலும் ஒரே தின வெளியீடு

விஜி, ஸ்நேகா, வடிவேல், மணிவண்ணன்

**வசீகரா**

காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30

ரிக்கற்றுக்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்.

**நிர்மலா** சங்கானை

M.G.R. ராதா சலுஜா நடிக்க



**இதயக்கனி**

காட்சி நே. 11.00,2.15,6.00 (டிநே.)

வெள்ளி, சனி, ஞாயிறு 8.45 மட்டும்

**TOMB RAIDER** (C-26288)

**நாகம்ஸ்** சுன்னாகம்.



விஜய், கிரணகோபிகா, நிர்க்கர்பா நடிக்கும்

**நெஞ்சினிலே**

காட்சிகள் தினசரி 11.00, 3.00, 6.30

04.02.2003 முதல் ...


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 12 - 07 - 1953 | | 12 - 02 - 2002 |

## அமரர் வல்லியன் தங்கராசா

திதி : 02.02.2003

ஓராண்டு சென்றாலும்

நீங்காத நினைவுகளுடன் கண்ணீர்ப் பூக்களை

உங்கள் பாதங்களில் சமர்ப்பிக்கின்றோம்.

*பாரதி வீதி,* த.ரோகினி (மனைவி),
*சங்கானை.* (14010) பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்கள்

## தியோகுப்பிள்ளை ஆசீர்வாதம்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் புலோலியை வசிப்பிடமாகவும் கொண்ட தியோகுப்பிள்ளை ஆசீர்வாதம் கிளிநொச்சியில் காலமானார்.

அன்னார் திருமதி லூட்சின் அன்புக் கணவரும் லூசில்லா, நிர்மலா, அஞ்சனா, ரஞ்சினி, விஜயன், பத்மினி, ஜோயினி, மாலினி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற போசட் மற்றும் பத்திநாதர், காலஞ்சென்றவர்களான ராயப்பு, மனுவேல்பிள்ளை ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

புலோலியில் நடைபெறவிருக்கும் அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றியவிவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
அருட்திரு.ப.ஜெயரட்ணம (பேரமகன்)
திரு.அருளானந்தம் (S.C.F.-திருமலை) (மருமகன்)

*புனித சூசையப்பர் கோவிலடி, புலோலி.* (C/26325)

## கந்தையா கதிரவேலு (சிறாப்பர்)

*(முன்னாள் காவலாளி - கால்நடை சினைப்படுத்தும் நிலையம், திருநெல்வேலி)*

அரசடி வீதி, இருபாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தையா கதிரவேலு என்பவர் நேற்று (01.02.2003) சனிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - மாரிமுத்துவின் அன்பு மகனும், பூமணியின் அன்புக் கணவரும், தர்மகுலசிங்கம் (கால்நடை தலைக்களம், வவுனியா), திருமதி பாலச்சந்திரன் சரோஜினிதேவி (இருபாலை), ஜெயபாலசிங்கம் (பாலா - திருநெல்வேலி), கருணாநிதி (ஜேர்மனி), காலஞ்சென்ற வசந்தகுமாரி மற்றும் உருத்திரகுமார் (கால்நடைத் திணைக்களம், திருநெல்வேலி), சாந்தகுமாரி (பிரான்ஸ்), சுரேந்திரன் (வட்டக்கச்சி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சாந்தவதனி, பாலச்சந்திரன், செல்வமலர், யசோதா, ரஞ்சிதமலர், றஸ்வின்ராஜ், ஜொய்சி ஆகியோரின் மாமனாரும் முருகேசு, காலஞ்சென்ற செல்லம்மா ஆகியோரின் சகோதரனும் கனகமணி, காலஞ்சென்ற முத்துக்குமாரு ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.02.2003) திங்கட்கிழமை பி.ப 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இருபாலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"பூமகள் வாசா"* தகவல்:
*அரசடி வீதி, இருபாலை.* (14014) குடும்பத்தினர்.

## திருமதி கனகசபை சரஸ்வதி

சூளானை, சுன்னாகத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகசபை சரஸ்வதி அவர்கள் நேற்று (01.02.2003) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை - ஐயாத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் கனகசபையின் (இளைப்பாறிய கூட்டுறவுப்பரிசோதகர்) அன்பு மனைவியும் ஸ்ரீகோமதி, இந்துமதி(கனடா), ஜீவன் (கனடா), காந்திமதி (முன்னாள் தெல்லிப்பழை பல நோக்கு கூட்டுறவுக் கிராமிய வங்கி லிகிதர் - கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற செல்வநாயகத்தின் அன்புச் சகோதரியும் மற்றும் காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கம்மா தம்பதிகளின் மருமகளும், செல்லமுத்து, தருமலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் மற்றும் கதிரவேல் (லண்டன்), வடிவேல் (கனடா), சோபனா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், மகாலிங்கம் (முன்னாள் வலி.வடக்கு பிரதேசசபை செயலாளர்), தவமணி ஆகியோரின் மச்சாளும் மற்றும் கனடாவில் வசிக்கும் சபீனா, அபியங்கா, யாதவி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.02.2003) ஞாயிற்றுக்கிழமை 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சூளானை,* தகவல்:
*சுன்னாகம்.* (14013) கனகசபை (கணவர்)

## கந்தர் இராமலிங்கம் (இராமு)

ஏழாலை மத்தியைச் சேர்ந்த கந்தர் இராமலிங்கம் (இராமு) நேற்று (01.02.2003) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் தங்கம்மாவின் அன்புக் கணவரும் செல்வரத்தினம் (யாழ். பல்கலைக்கழகம்), தவராசேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும் உதயபாலா (ஏழாலை சைவமகாஜனா வித்தியாலயம்), தனபாலசிங்கம் ஆகியோரின் அன்பு மாமனாரும், கஸ்தூரி, இந்துஜா, கபிராஜ், தேனுகா, துவாரகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.02.2003) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 1 மணியளவில் பூதவுடல் ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*ஏழாலை மத்தி.* (14012) இ.செல்வரத்தினம் (மகன்)

# நன்றி நவின்று வாழ்த்துகின்றோம்

எமது பொருளைக் காப்பாற்றி எடுத்துத் தந்தமைக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறையினருக்கு மனமார்ந்த நன்றிகளையும், சாவகச்சேரி வர்த்தகசங்கத்தினருக்கு மனமுவந்த நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**முருகன் மில், முருகன் கட்டடப் பொருள்கள், முருகன் களஞ்சியம்.**
A9 பாதை, கண்டிவீதி, சாவகச்சேரி

**எங்களது தொடர்ச்சியான சேவைக்கு மக்களின் நல்லாதரவை வேண்டி நிற்கின்றோம்.**

(13953)


## நாஸாவின் கொலம்பியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வாளர்களில் இந்திய வம்சாவளி அமெரிக்கரான கல்பனா சாவ்லா உட்பட 6பேர் அமெரிக்கர்கள். மற்றொருவர்



இந்திய வம்சாவளி அமெரிக்கரான கல்பனா சாவ்லா

இஸ்ரேலியர். இவர் முதற்றடவையாக விண்வெளிக்குப் பயணமான இஸ்ரேலியர் என்பது குறிப்பிடத்தக்கது.

வெடித்துச் சிதறிய விண்கலத்தின் பாகங்கள் டெக்ஸாஸ் பிரதேசங்களில பரந்து வீழ்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அவற்றைத் தேடி எடுக்கும் நடவடிக்கையில் மீட்புப் பணியாளர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து அமெரிக்க வெள்ளை மாளிகையிலும் விண்வெளி நிலையத்திலும் தேசியக் கொடிகள் அரைக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டிருந்தன. விண்கலம் வெடித்தமைக்கு தீவிரவாதிகளின் செயல் காரணமாக இருக்கலாம் என்ற வதந்தி பரவியதால் பொதுமக்களிடம் பெரும பதற்றம் ஏற்பட்டது. அதனை அடுத்து நேற்று அவசரகால நிலை பிறப்பிக்கப்பட்டது. படையினரும் மீட்புப் பணியாளர்களும் முழு உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். ஆனால் இந்தச் சம்பவத்துக்கும் தீவிரவாதிகளுக்கும் தொடர்புகள் ஏதும் இல்லை என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

கொலம்பியா விண்கலம் 1981ஆம ஆண்டு முதன்முதலில் தனது பறப்பை ஆரம்பித்தது. நாஸாவிடம் உள்ள பழைமைவாய்ந்த விண்கலங்களில் முக்கியமானது இது. பல தடவைகள் மிக வெற்றிகரமாக விண்ணுக்குச் சென்று திரும்பிவந்துள்ளது. விண்ணுக்கு அனுப்பப்பட்டு திரும்பி வருமவழியில் விண்கலம் ஒன்று ஆள்களுடன் வெடித்துச் சிதறியது இதுவே முதற்றடவை. இதற்கு முன்னர் 1986 இல் சலஞ்சர் விண்கலம் தளத்தில் இருந்து விண்நோக்கிக் கிளம்பிய சிறிது நேரத்தில் வெடித்துச் சிதறியது. அதில் பயணம் செய்த 7 ஆய்வாளர்களும் உயிரிழந்தனர்.

16 நாள்களுக்கு முன்னர் பூமியில் இருந்து சர்வதேச விண்வெளி நிலையத்துக்குச் சென்ற கொலம்பியா நேற்று பூமிக்குத் திரும்புவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. திட்டத்தின்படி திரும்பிய அது தரையிறங்குவதற்கு சில நிமிடங்கள் முன்னதாக உள்ளூர் நேரப்படி காலை 9 மணியளவில் கட்டுப்பாட்டு அறையுடன் தொடர்புகளை இழந்தது.

விண்கலம் வெடித்துச் சிதறியதை



முதலாவது இஸ்ரேலிய விண்வெளி வீரர் கேணல் இலன் ரமோய்.

தொலைக்காட்சிப் பதிவுகள் தெளிவாகக் காட்டுகின்றன. நீண்ட வால் நட்சத்திரம்போன்று எரிந்துகொண்டு விண்கலம் பூமி நோக்கி விரைவதை அதில் காணமுடிகின்றது.

(ம)

## சமாதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தல் ஒன்றுக்கு அழைப்பு விடுக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்கு முன்னோடியாக தேர்தல் ஒன்றை எதிர்பார்த்து பிரதமர் ரணில் பிரசார நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளார் என ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதேவேளை -

பிரதமர் ரணில் நேற்று கெப்பிட்டிப்பொலவுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டார். எல்லைக்கிராமங்களில் மீளக்குடியமரும் சிங்கள மக்களின் பிரச்சினைகளையும் அங்கு பணிபுரியும் படையினரின் பிரச்சினைகளையும் கேட்டறிந்தார்.

(ம-3)

## சிப்பாய்களை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விழிப்புக்குழு உறுப்பினர்கள் உட்பட எட்டு இளைஞர்களைக் கைதுசெய்து பொலீஸ் நிலையத்தில் தடுத்துவைத்துள்ளனர்.

இதையடுத்து நேற்று பொலீஸ் நிலையம் சென்ற அப்பகுதி பொது மக்கள் கைதானவர்களை விடுதலை செய்யுமாறு கோரினர். சாத்வீகப் போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டனர். பிரஸ்தாப் நபர்களை நாளை பருத்தித்துறை நீதிமன்றத்தில் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பருத்தித்துறை பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொதுமக்களுக்கு உறுதி அளித்தார்.

இதையடுத்து மக்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

செ.செந்தூரன் (வயது 23), க.இராசகுமார் (வயது 24), கலைவாணன் (வயது 23), க.கிருஷ்ணதாஸ் (வயது 20), கே.சுபாஸ்கரன் (வயது 20), தே.ஜெகராஜா (வயது 24), ஜ.பாஸ்கரன் (வயது 23), பா.கார்த்தீபன் (வயது 20) ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

(ம-3-70-182)

## சுதந்திர தினத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பெப்ரவரி 4 ஆகும். ஆனால் கிடைத்த சுதந்திரத்தை தமிழர்களாகிய நாம் அனுபவித்தோமா என்றால் இல்லை என்பதே பதிலாகும்.

காலங்காலமாக பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த எமது மண்ணில், எமது மூதாதையினரால் ஆளப்பட்ட எமது மண்ணில் எமது சுதந்திரம் அந்நியர் ஆக்கிரமித்த காலம்முதல் கேள்விக்குரியதாகவே இருந்து வருகிறது.

எமது நிலம் பறிக்கப்பட்டது; மொழி புறந்தள்ளப்பட்டது. பொருளாதாரமும் பண்பாடும் திட்டமிட்டுச் சீரழிக்கப்பட்டன. இது தமிழரின் சோக வரலாறு.

சிறிலங்கா சுதந்திர தினமென்பது தமிழினத்தின் மனங்களில் ஆழப்பதிந்த துயரம்மிக்க ஒரு நாளாகவே இருந்து வருகின்றது.

இன்றைய அமைதிக்கான காலத்தில் கூட எமது கல்விச்சாலைகளில் இயல்பான கல்வி நிலை இடம்பெற அரச படைகள் இடையூறாகவே இருக்கின்றன. இது பலதடவை பலதரப்புக்கும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. ஆனால் நிலையில் மாற்றமில்லை இதுதான் சுதந்திரமா?

சிறைக்கூடங்களில் இறுகப்பூட்டிய கதவுகளுக்குள்ளால் இன்னமும் வெளிவரும் பல்லாயிரம் ஏக்கப் பெருமூச்சுக்கள் தெரிவிப்பதுதான் சுதந்திரமா?

இருக்கிறார்களா? இல்லையா? என்ன ஆனார்கள் என்றறியாதுபோன உறவுகளுக்காக அவர்களின் உறவுகள் சிந்தும் கண்ணீர்தான் சுதந்திரமா?

இன்று உலகின் கண்களை ஏமாற்றுவதற்காக வெள்ளையடிக்கப்பட்ட எமது நூலகமும் பல்லாயிரம் பயன்மிகு நூல்களும் எரிந்தழிந்து போனதுதான் சுதந்திரமா?

திட்டமிட்ட ஒடுக்குமுறையும், பாராமுகமுமாக தொடர்ந்தும் அழுத்தப்படும் தமிழினத்துக்கு ஏது சுதந்திரம்? சொந்த நிலங்களில் வாழ்வதைத் தடுக்கும் உயர் பாதுகாப்பு வலயங்களின் பெயர்தான் சுதந்திரமா? - என்றுள்ளது.

(ம-3)

## அவசர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஒதுக்கீட்டில் இருந்து இரண்டரை கோடி ரூபாவை இதற்கென ஒதுக்கியுள்ள அமைச்சர் மிகுதி நிதியினை வேறு வழிகளில் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை -

இக்கூட்டத்தில் புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சின் இந்த ஆண்டுக்குரிய ஏழு கோடி ரூபா நிதி ஒதுக்கீட்டுக்கான வேலைத் திட்டங்களும் அங்கீகரிக்கப்பட்டன.

இவற்றுள் முக்கியமாக யாழ். திறந்த வெளியரங்குப் புனரமைப்புக்கு 50 லட்சம் ரூபாவும்-

கல்வியங்காடு பொதுச் சந்தை புனரமைப்புக்கு 70 லட்சம் ரூபாவும் -

யாழ. கரையோரப் பகுதி வீதிகள் புனரமைப்புக்கு மாநகரசபைக்கு ஒரு கோடி ரூபாவும்-

கொடிகாமம் பகுதியில் கடைத் தொகுதி அமைப்பதற்கு 43 லட்சம் ரூபாவும் -

மருதங்கேணி உதவி அரச அதிபர் பணிமனை கட்டுமானப் பணிக்கு 75 லட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் 9 பேரினதும் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டில் இருந்து மேலும் பல அபிவிருத்திப் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதற்கென நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது முன்மொழிவுகளை நேற்றைய கூட்டத்தில் சமர்ப்பித்தனர்.

குடாநாட்டின் நிவாரண விநியோகத்துக்குத் தேவையான அரிசியை யாழ்ப்பாணம் மற்றும் வன்னிப் பிரதேசங்களிலே கொள்வனவு செய்யப்படவேண்டும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளார்கள். புனர்வாழ்வு அமைச்சினால் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவைக்கப்படும் நிவாரணப் பொருள்களில் பல தடவைகள் மோசடிகள் இடம்பெற்றுள்ளன. எனினும் இது தொடர்பாக ஆக்கபூர்வமான விசாரணைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

இனிவரும் காலங்களிலாவது இவற்றைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் எனவும் இவர்கள் கேட்டுக்கொண்டனர்.

மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத்தலைவர்களான அமைச்சர் தி.மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் வீ.ஆனந்தசங்கரி ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினரான அ.விநாயகமூர்த்தி, மாவை சேனாதிராஜா, ந.ரவிராஜ் ஆகியோரும் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன், மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. ப.திலகநாயகம் போல், புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் கே.ஜெயரட்ணம், யாழ். செயலக திட்டமிடல் உதவிப் பணிப்பாளர்களான எஸ்.மகாலிங்கம், எஸ்.சிவபாதசுந்தரம், தமிழீழ நிர்வாக சேவைத் துணைப் பொறுப்பாளர் இளஞ்சேரன், யாழ்.மாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர் விஜிதரன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

(ம-10-3)

## யாழ்ப்பாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யம் ஒத்திவைக்கப்பட்டது.

தெற்கே செல்லவிருந்த மாணவர்கள் சுதந்திரதின நிகழ்ச்சிகளையும் பார்வையிட ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை -

மாணவர்களின் தெற்குக்கான பயணம் ரத்துச் செய்யப்பட்டமை தொடர்பாக ஜேர்மன் தொழில்நுட்பக் கூட்டமைப்பு அலுவலகத்தில் நேற்று அவசர கூட்டம் ஒன்று இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் புனர்வாழ்வு, அகதிகள், மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனா, ஜேர்மன் தொழில்நுட்ப கூட்டமைப்பு மற்றும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு ஆகியவற்றின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

மாணவர்களின் தெற்குக்கான பயணத்தை எதிர்வரும் 7ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை ஏற்பாடு செய்வதென அங்கு முடிவுசெய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ம-3-8-10-173)

## திருமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சியல்துறைப் பொறுப்பாளர் திலக் தமது கடும் ஆட்சேபத்தைத் தெரிவித்தார்.

"அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையே உருவான யுத்த நிறுத்த உடன்பாட்டை மீறும் செயலாகவே இது அமைகின்றது. தற்போதைய சமாதான முயற்சிகளை இந்த செயல் பாதிக்கும் நிலை ஏற்பட இடமளிக்கக்கூடாது" என்று அவர் தனது ஆட்சேபத்தில் குறிப்பிட்டிருந்தார்.

இதைத் தொடர்ந்து யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவின் அதிகாரியான ஜான், கண்காணிப்புக் குழு உறுப்பினர் அப்துல் ஆகியோர் திலக் சகிதம் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டனர்.

கடற்படையினர் முகாம் அமைப்பது தொடர்பாக கடற்படை அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு உரிய நடவடிக்கை எடுப்பதாக கண்காணிப்புக் குழு அதிகாரி ஜான் உறுதியளித்தார்.

(ம-3-2)

## சிரானின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதன்படி முதலாவது துணைக் குழு யாழ்ப்பாணத்தில் 'சிரான்' அமைப்பின் பணிப்பாளர் இரேனியஸ் செல்வினால் நேற்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இந்தத் துணைக்குழுவில் அரச சார்பில் அரச அதிபர் செ.பத்மநாதனும் திட்டப்பணிப்பாளர் எஸ்.சிவபாதசுந்தரமும் இடம் பெறுகின்றனர். மூன்றாவது உறுப்பினர் இன்னமும் நியமிக்கப்படவில்லை.

"புலிகள் சார்பில் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, நிர்வாக சேவைப் பொறுப்பாளர் எஸ்.இளஞ்சேரன், மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் கலைவிழி ஆகியோர் இடம்பெறுகின்றனர்.

இந்தக் குழுவின் இணைப்பாளராக வேலணை உதவி அரசாங்க அதிபர் எஸ்.இரத்தினமும், திட்டப் பணிப்பாளராக பு.சுந்தரம்பிள்ளையும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

துணைக் குழுவின் செயலகம் யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் இயங்கும்.

யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய புனர்வாழ்வு மற்றும் மீள்குடியமர்வு தொடர்பான பணிகளை இத்துணைக்குழு ஆராய்ந்து, திட்டங்களை 'சிரான்' அலுவலகத்தில் சமர்ப்பிக்கும்.

(ம-3)

## மரண அறிவித்தல்

### திருமதி நாகரத்தினம் சிவலிங்கம்

*(வெள்ளையம்மா)*

புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகரத்தினம் சிவலிங்கம் நேற்று முன்தினம் (31.01.2003) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா சிவலிங்கம் (மலாயன் பென்சனியர்) அவர்களின் அன்புத் துணைவியாரும், புஸ்பராணி (ஓய்வுபெற்ற ஆசிரியை), சிவகுமார், சூரியகுமாரி, ஜெயகுமார் (அதிபர், சுத்தாவளை அ.றோ.க.த. வித்தியாலயம்), ஆனந்தகுமார் (U.K.) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற இராசையா (ஓய்வுபெற்ற ஆசிரியர்), சங்கரப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஹரிதாசன்(M.A.Hari, பிரபல ஆங்கில ஆசிரியர்), பாலகிருஷ்ணன் (ஓய்வுபெற்ற பொது முகாமையாளர், புடைவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்), சாரதாதேவி, இந்துமதி, பவானி (கீதா U.K.) ஆகியோரின் அன்பு மாமியாரும், பரணீதரன் (Computer Eng.Canada), ரமணீதரன் (T.O.கட்டடத் திணைக்களம் (மா) யாழ்ப்பாணம்), முரளீதரன் (H.N.B.Trinco), பிரதீபன் (பெங்களூர் பல்கலைக்கழக மாணவன்) துளசிமலர், நளாயினி (கனடா), சியாமினி (Lanka Jewellers Puttlam), சிவகணேஸ், பிரசாந், சஞ்ஜீவன், ரஜீவன், கல்யாணி, சுஜனினி, பிரவீன்(U.K.), நவீன்(U.K.), விஜிதா, கோமதி, விஷிஸ்டா(மீரா H.N.B.Colombo), வசீகரன், சிறிகரன் (Canada) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஜதுர்சன், மிருணாளினி ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.


அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (02.02.2003) ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*N.பாலகிருஷ்ணன்,*
*கலைவாணி மில் லேன்,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.*

(13933)

தகவல்:
குடும்பத்தினர்.

# இந்திய பரம்பரை ஜோதிடர்
அருள்வாக்கு
# அம்பிகா அம்மா



கைரேகை, ஜாதகம் பார்க்கப்படும்.
ஜாதகம் எழுதிக் கொடுக்கப்படும்.

சந்திக்குமிடம்:
**மடோனா லொட்ஜ்**
**121, கஸ்தூரியார் வீதி,**
**(ஸ்ரீ முருகன் ஜீவல்லர்ஸ்/லிங்கன் கூல்பார் அருகில்)**
**யாழ்ப்பாணம்.**

குறிப்பு: **2.6.02.2003 வரை மட்டும் தங்கி இருப்பார்கள்.**
**எல்லா நாளும் சாத்திரம் கூறப்படும்.**
(13952)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.02.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.